# புதிய ஜனநாயகம்

பிப்ரவரி 2013
ரூ.10.00



## பெண்கள் மீதான வன்முறை:

# முதல் எதிரி அரசுதான்!

# “சாதிவெறிக் கொட்டத்தை மோதி வீழ்த்துவோம்!”

## - தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம் - போராட்டம்

கடந்த நவம்பர் மாதத்தில் தருமபுரியில் நடந்த பா.ம.க.வின் வன்னிய சாதி வெறியாட்டத்தைத் தொடர்ந்து, வன்னியர் சங்கம் உள்ளிட்ட அனைத்து ஆதிக்க சாதிச் சங்கங்களைத் தடைசெய்யக் கோரியும், அவற்றின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யக் கோரியும் தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களையும் பிரச்சார இயக்கத்தையும் நடத்தி வருகின்றன.




திருச்சியில்...




அனைத்து சமுதாயப் பாதுகாப்புப் பேரவை என்ற பெயரில் சாதிய ஒடுக்கு முறையைத் தாழ்த்தப்பட்டோர் மீது ஏவி விடுவதற்கும், தமிழகத்தைச் சாதிவெறியர்கள் கொட்டமடிக்கும் பூமியாக மாற்றுவதற்கும் முயற்சித்து வரும் பா.ம.க. நிறுவனத் தலைவர் ராமதாசு, திருச்சியில் சாதி வெறி சங்கங்களை இணைத்து 4.1.2013 அன்று ஆலோசனைக் கூட்டத்தை நடத்த எத்தணித்தபோது, அதனை எதிர்த்து ம.க.இ.க; பு.மா.இ.மு; பெ.வி.மு; ஆகிய அமைப்புகள் இணைந்து அக்கூட்டத்தைத் தடைசெய்து, இச்சாதிவெறியர்களைக் கைது செய்யக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தன. இதேபோல புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள், பெரியார் தி.க. முதலான கட்சிகளும் ஆதிக்க சாதிவெறியர்களின் ஆலோசனைக் கூட்டத்தைத் தடை செய்யக் கோரி மனு கொடுத்தன.

இருப்பினும், போலீசு பாதுகாப்புடன் சங்கம் ஓட்டலில் இச்சாதிவெறியர்கள் சதியாலோசனைக் கூட்டம் நடத்த முற்பட்டதும், 4.1.2013 அன்று மத்தியப் பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து, சாதிவெறியர்களின் கொட்டத்தை வீழ்த்த உறுதியேற்று முழக்கமிட்ட புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள், ராமதாஸ் கூட்டம் நடத்திய ஓட்டலை முற்றுகையிட ஊர்வலமாகச் சென்றனர். வழியெங்கும் ‘‘ராமதாசு நடத்தும் ஆலோசனைக் கூட்டத்தைத் தடை செய்! சாதிவெறித் தலைவர்களைக் கைது செய்! வன்னியர் சங்கம், பா.ம.க. மற்றும் பிற ஆதிக்க சாதி அமைப்புகளைத் தடைசெய்!’’ என்ற முழக்கங்கள் எதிரொலித்தன. திருச்சி மாவட்ட ம.க.இ.க. செயலர் தோழர் சீனிவாசன், பு.மா.இ.மு. மாவட்டச் செயலர் தோழர் செழியன், பெ.வி.மு. செயலர் தோழர் நிர்மலா ஆகியோரின் தலைமையில் நடந்த இந்த முற்றுகைப் போராட்ட ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்திய போலீசார், முன்னணியாளர்களைக் கைது செய்தனர்.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்




நாட்றாம்பாளையத்தில்...

**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

**தொகுதி: 28 இதழ்: 4**

**பிப்ரவரி 2013**

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: *முகிலன்*



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561


# பெண் விடுதலை கானல் நீரல்ல!

தலைநகர் டெல்லியில் துணை மருத்துவ மாணவி கும்பல் பாலியல் வல்லுறவுத் தாக்குதலுக்கு ஆளானதைத் தொடர்ந்து நடந்த ஆர்ப்பாட்டங்கள் தற்போதைக்கு ஓய்ந்து விட்டன. ஆனால் பெண்கள் மீதான பாலியல் வன்முறைத் தாக்குதல்கள் இன்னமும் தொடர்கின்றன. தூக்கில் போடுவது, ஆணுறுப்பை வெட்டுவது - எனத் தண்டனைகள் கடுமையாக்கப்பட வேண்டுமென்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரியபோதிலும், இத்தகைய கொடூரங்களில் ஈடுபடும் கிரிமினல்கள் எவரும் அதற்காக அச்சப்படுவதாகத் தெரியவில்லை.

இதற்கான காரணம், இன்றைய சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியலமைப்பில் உள்ளது. இந்தியச் சமூகமானது ஜனநாயகத்துக்கான அரசியல் போராட்டங்களின் ஊடாக உருவாகி வளர்ந்த சமூகமல்ல. நீண்ட நெடுங்காலமாக நீடித்துவரும் சாதி, மத, ஆணாதிக்கம் நிறைந்த நிலப்பிரபுத்துவ தந்தைவழி சமூக அமைப்பும், அதற்கு அக்கம் பக்கமாக தரகு முதலாளித்துவ உற்பத்திமுறையும், அதற்கேற்ற அரசியல், பண்பாட்டு நிறுவனங்களும் காலனிய காலத்திலிருந்து திணிக்கப்பட்டு நிலைநாட்டப்பட்டன.

நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கப் பிற்போக்குத்தனம் பெண்களின் மீதான ஒடுக்குமுறைக்கு-பாலியல் தாக்குதலுக்கு ஆணிவேராக இருக்கும் அதேநேரத்தில், அதன் மீது திணிக்கப்பட்டுள்ள உலகமயமாக்கம் இத்தாக்குதல்களை முன்னெப்போதும் கண்டிராத வகையில் தீவிரப்படுத்தியிருக்கிறது. ஒருபுறம், பெண்களை நுகர்வுப் பண்டமாக்கி எவ்வித விழுமியங்களுமின்றி பாலியல் வன்முறைகளைத் தீவிரமாக்கியிருக்கும் உலகமயமாக்கம்; மறுபுறம், ஆதிக்க சாதி மற்றும மத அமைப்புகள் பெண்கள் மீது கேள்விக் கிடமற்ற முறையில் தொடுக்கும் தாக்குதல்கள், கட்டுப்பாடுகள், கௌரவக் கொலைகள்- என இத்தாக்குதல்கள் அதிகரித்திருக்கின்றன.

சாதியானாலும், பாலியல் வன்கொடுமையானாலும் இரண்டுக்குமே அடிப்படையாக உள்ள அரசியல்- பொருளாதார கட்டமைவை இன்றைய அரசு பாதுகாக்கிறது. பெண்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறப்படும் அரசு எந்திரமே பெண்களுக்கு எதிராக உள்ளது. அதிகாரவர்க்கம், போலீசு, இராணுவம், நீதித்துறை முதலான அரசின் உறுப்புகளே பெண்களுக்கு எதிரான முதன்மைக் குற்றவாளிகளாக உள்ளன. அதை யாரும் தட்டிக் கேட்கவோ, நீதியைப் பெறவோ முடியாதபடி சட்டத்துக்கு மேலானதாக, தனிவகைச் சாதியாக இருந்துகொண்டு சமூகத்தையே அச்சுறுகின்றன. ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தைக் கொண்டு பெண்கள் மீது கேள்விமுறையற்ற வன்முறைகளில் ஈடுபடும் இராணுவத்தினரை சிவில் கோர்ட்டுகளில் கிரிமினல் சட்டங்களின்கீழ் தண்டிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட நீதிபதி வர்மா கமிட்டி பரிந்துரைத்த முக்கியமான சில சீர்திருத்தங்களைக்கூட ஏற்க மறுக்கிறது அரசு. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பற்றிய ஆதாரங்கள் குவிந்துள்ள போதிலும், மாநில போலீசு இயக்குனர் முதல் மகளிர் நல அமைச்சகம், வாரியங்கள் உள்ளிட்ட எந்த அரசாங்க உறுப்புகளும் தமது பரிந்துரைகளை வர்மா கமிஷனுக்குக் கொடுக்கவுமில்லை.

வரதட்சிணை தடுப்புச் சட்டமும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டமும் பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் மீதான வன்முறைத் தாக்குதல்களை தடுக்காத நிலையில், சட்டங்களை அமலாக்கும் இன்றைய அரசியலமைப்பு முறையே பெண்களுக்கு எதிராக உள்ள நிலையில், கடுமையான சட்டங்களாலும் தண்டனைகளாலும் பெண்கள் மீதான வன்முறைத் தாக்குதல்களுக்கு முடிவு கட்டிவிட முடியாது. நிலப்பிரபுத்துவ தந்தைவழி சமூக அமைப்பு, மறுகாலனியாக்கம் - எனுமிரு நுகத்தடிகளையும் அடித்து நொறுக்காமல் பெண்கள் மீதான வன்முறைகளை தடுத்து நிறுத்திடவும் முடியாது.

இவ்விரு நுகத்தடிகளையும் கட்டிக்காத்து வருகின்ற இன்றைய சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார அமைப்பை அடியோடு மாற்றியமைக்கும் திசையில், குடும்பம் உள்ளிட்டு சமூகத்தின் சகல அரங்குகளிலும் ஜனநாயகத்தை நிலைநாட்டும் போராட்டங்களைக் கட்டியமைப்பதும், இன்றைய அரசியலமைப்பு முறையை வீழ்த்திவிட்டு புதிய ஜனநாயக அரசியலமைப்பை நிறுவும் திசையில் போராட்டங்களை வளர்த்தெடுப்பதுமே ஒடுக்கப்பட்டுள்ள பெண்ணினத்துக்கு விடுதலையையும் உரிமைகளையும் பெற்றுத் தரும். ●

## பெண்கள் மீதான வன்முறை:

# முதல் எதிரி அரசுதான்!

**அதிகாரத் திமிரும் ஆணாதிக்கமும் கொண்ட போலீசு – இராணுவம் – நீதிமன்றத்தைப் போதனைகளால் சீர்படுத்த முடியாது.**

பாலியல் வல்லுறவுத் தலைநகரான டெல்லியில், துணை மருத்துவ மாணவி மீதான கும்பல் பாலியல் வல்லுறவுக் கொடூரத்தைத் தொடர்ந்து, உழைக்கும் மக்களும் பெண்களும் இளைஞர்களும் ஆத்திரமும் கோபமும் கொப்பளிக்க வீதிகளில் திரண்டு போராடினார்கள். இப்போராட்டங்களாலும், பொதுக்கருத்தும் பொதுமக்களின் நிர்ப்பந்தங்களும் பெருகியதாலும் பாலியல் வல்லுறவுக் குற்றங்களுக்கு எதிராக விரைவு நீதிமன்றங்களை அமைக்கவும், தலைநகர் டெல்லியில் பாலியல் வல்லுறவுக் குற்றங்களைத் தடுக்கவும், பெண்களின் பாதுகாப்பைக் கண்காணிக்கவும் அரசாங்கம் உறுதியளித்துள்ளது. மேலும், டெல்லியில் பாலியல் சீண்டலுக்கும் வன்முறைக்கும் ஆளாகும் பெண்கள் இதுபற்றி புகார் கொடுக்க ''181'' என்ற தொலைபேசி எண் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இது விரைவில் அனைத்து மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் மைய அரசு அறிவித்துள்ளது.

பாலியல் கொடூரத்துக்கு எதிரான சட்டங்களில் உள்ள ஓட்டைகளை அடைக்கவும், பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் செம்மைப்படுத்தவும் அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஜே.எஸ்.வர்மா தலைமையில் 3 பேர் கொண்ட கமிட்டி, தனது அறிக்கையை அண்மையில் மைய அரசிடம் அளித்துள்ளது. ஆனால், அக்கமிட்டி தனது பரிந்துரைகளைச் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே, அரசாங்கத்தின் உறுப்புகளாக உள்ள - குற்றத்தைத் தடுப்பதற்கான பொறுப்பில் உள்ளவர்கள் இவை எதையுமே ஏற்க மறுக்கின்றனர்.

### பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடும் முதன்மை எதிரி யார்?

ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய சட்டமும் நீதித்துறையும் போலீசும் அதிகார வர்க்கமும் அடங்கிய அரசு எந்திரத்துக்கு வெளியே, கணநேரப் பாலியல் தூண்டுதலால் வெறிகொண்டு வல்லுறவை ஏவும் சிவில் சமுதாயத்திலுள்ள உதிரி கிரிமினல்களால்தான் பெண்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்று பலரும் கருதுகின்றனர். ஆனால், பெண்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறப்படும் அரசு எந்திரமே பெண்களுக்கு எதிராகத்தான் உள்ளது. வங்கிக்குப் பொறுப்பான காசாளரே, கொள்ளையில் ஈடுபடுவதைப் போலத்தான் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தில் உள்ளவர்களே, ஒழுங்கை நிலைநாட்டக் கடமைப்பட்டவர்களே அத்தகைய குற்றங்களில் ஈடுபடுகின்றனர். பெண்கள் மீதான இந்துத்துவ, சாதிய, ஆணாதிக்க அடக்குமுறைகளைப் பாதுகாப்பதாகவே அரசின் உறுப்புகள் உள்ளன. இத்தகைய நிறுவனங்களால் பெண்களுக்கு வரும் ஆபத்துதான் மிகக் கொடியது. வரம்பற்ற அதிகாரம் பெற்றதாக, அமைப்பு ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டதாக, சீருடை அணிந்த கிரிமினல்களைக் கொண்டுள்ள இத்தகைய அதிகார அமைப்புகளே முதன்மைக் குற்றவாளிகளாக உள்ளன. அதை யாரும் தட்டிக்கேட்கவோ, நீதியைப் பெறவோ முடியாது.

டெல்லி பேருந்தில் பாலியல் வன்முறையில் ஈடுபட்டவர்களுக்குக்கூட உள்ளூர ஒருவித அச்சம் இருந்திருக்கும். எந்தத் தடயமும் இல்லாமல் தப்பிவிட வேண்டும் என்ற பதற்றமும் இருந்திருக்கும். ஆனால், போலீசுக்கும் இராணுவத்துக்கும் அப்படி எந்த அச்சமோ, பதற்றமோ இருப்பதேயில்லை. சமுதாயத்திலுள்ள கிரிமினல்களுக்கு இல்லாத இந்தச் சிறப்பு அதிகாரத்தைக் கொண்டுள்ள இந்தச் சீருடை அணிந்த கிரிமினல்கள், எவ்வித அச்சமுமின்றி அட்டூழியங்களில் ஈடுபடுவதோடு,

''பிப்ரவரி 23,1991- இல் காஷ்மீரின் குனான் போஷ்போரா கிராமத்தில் இந்திய இராணுவப் படையினர் 53 பெண்களைக் கும்பல் வல்லுறவுக்கு ஆளாக்கிய கொடூரத்தை நாங்கள் ஒருபோதும் மறக்கவில்லை!'' என்ற பதாகையுடன் இந்தியாவின் 64-வது 'குடியரசு' தினத்தன்று நாடாளுமன்றத்தின் முன்பாக நடந்த ஆர்ப்பாட்டம்.



எவனும் எங்களை ஆட்டவோ, அசைக்கவோ முடியாது என்ற ஆணவத்தோடு கொட்டமடிக்கின்றன.




இந்தியப் பெண்களின் முதல் எதிரி யார் என்பதை உலகுக்கு உணர்த்திய போராட்டம்: ''ஐ.நா. மன்றமே, இந்திய இராணுவப் படைகளின் இரும்புப் பிடியில் சிக்கியுள்ள காஷ்மீரின் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை!'' என்ற பதாகையுடன் காஷ்மீர் பெண்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

கடந்த 2006 மார்ச் மாதத்தில், காஷ்மீர் மாநிலத்தில் சிறீநகர் புறநகரப் பகுதியின் 15 வயதான பள்ளி மாணவி யாஸ்மினா, வேலை வாங்கித் தருவதாகக் கூறித் தன்னை அழைத்துச் சென்று, போதை மருந்து கொடுத்து நிர்வாணப் படுத்திப் படம் எடுத்து, அதைக் காட்டி மிரட்டி விபச்சாரத்தில் ஈடுபடுத்தியதாக சபீனா பேகம் என்ற பெண் மீது குற்றம் சாட்டியதோடு, போலீசு -இராணுவ உயர் அதிகாரிகளுக்கு தான் இரையாக்கப்பட்டதையும், தன்னைப் போலவே 50-க்கும் மேற்பட்ட பெண்கள் இப்பயங்கரவாதக் கும்பலிடம் சிக்கித் தவிப்பதாகவும் சாட்சியமளித்தார். அதைத் தொடர்ந்து விபச்சார தாதாவான சபீனா பேகத்தைக் கைது செய்து, அவளது விபச்சார விடுதியிலிருந்து இளம் பெண்களை மீட்டுச் சூரத்தனம் காட்டிய போலீசார், இந்த விவகாரத்தை மூடிமறைத்து போலீசு மற்றும் இராணுவ அதிகாரிகளைத் தப்புவிக்க முயற்சித்த போது, சிறீநகர் மக்கள் ஆவேசமாகி சபீனாவின் விபச்சாரவிடுதியையும் போலீசு நிலையங்களையும் தாக்கினர். இது காஷ்மீர் மாநிலம் முழுவதுமான போராட்டமாகப் பற்றிப் படரத் தொடங்கியதும், மாநில உயர்நீதி மன்றம் இந்த வழக்கை மையப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைத்தது.

விபச்சார குற்றக் கும்பல்களின் அட்டூழியங்கள் அடுத்தடுத்து வெளிவந்த போதிலும், இவை எல்லாவற்றிலுமே அரசுயர் அதிகாரிகள், போலீசு -இராணுவ அதிகாரிகள், ஓட்டுக்கட்சிப் பிரமுகர்கள், நீதித்துறையினர் சம்பந்தப்பட்டிருப்பது அம்பலமாகியுள்ள போதிலும், அவர்கள் தண்டிக்கப்படவில்லை. துறைசார்ந்த விசாரணை, இடமாற்றம், தற்காலிகப் பணிநீக்கம் என்பது தான் நடந்தது.

காஷ்மீரிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் மீது பொதுமக்கள் எவரும் அச்சீருடை அணிந்த கிரிமினல் கும்பல்கள் நடத்திவரும் பாலியல் வன்கொடுமைகளை, மனித உரிமை மீறல்களைப் பற்றி வாய்திறக்கக் கூடாது என்பதற்காகவே ஆயுதப்படை சிறப்பு அதிகாரச்சட்டமும், கலவரப்பகுதி தடைச்சட்டமும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்களும் போடப்பட்டுள்ளன. தீவிரவாதத்தையும் பயங்கரவாதத்தை முறியடிப்பது என்ற பெயரில் இம்மாநிலங்களில் போலீசும் இராணுவமும் நடத்திவரும் காமவெறி - கொலைவெறியாட்டங்கள் தொடர்ந்து மூடிமறைக்கப்படுகின்றன. போலீசின் வன்முறை ஆயுதங்களில் ஒன்றாகக் கேள்விமுறையின்றி பாலியல் வல்லுறவுக் கொடூரங்கள் தொடர்கின்றன. இக்கொடுமையை எதிர்த்து மணிப்பூர் தாய்மார்கள் இராணுவத் தலைமையகம் அருகே நடத்திய நிர்வாணப் போராட்டத்தைப் போல, இவற்றில் ஒருசில விவகாரங்கள் மெதுவாகக் கசிந்து அம்பலமானாலும், இக்காமவெறி பயங்கரவாதக் கும்பல்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

கடந்த ஆண்டு பிப்ரவரி 11-ஆம் தேதியன்று இரவில் பேருந்துக்காகக் காத்திருந்த பெரியகுளத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகளுக்குத் தாயான வசந்தி என்ற பெண்ணை, கடமலைக்குண்டு போலீசு நிலையத்துக்கு இழுத்துச் சென்று, போலீசு ஆய்வாளர் இமானுவேல் ராஜ்குமாரும் சிறப்புத்துணை ஆய்வாளரான அமுதனும் அப்பெண்ணிடம் தமது காமவெறியைத் தீர்த்துக் கொண்டனர். பின்னர், அவரிடமிருந்த 6,700 ரூபாயையும் பறித்துக் கொண்டு, வசந்தியின் மீது திருட்டுக் குற்றத்தைச் சுமத்தி அவரைச் சிறையிலடைத்தனர். சிறையிலிருந்து வெளியே வந்த வசந்தி நடந்த உண்மைகளை வெளியே சொல்லிவிடக்கூடாது என்பதற்காக போலீசாரால் தொடர்ந்து மிரட்டப்பட்டதால், விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்து, பின்னர் காப்பாற்றப்பட்டார். இந்த உண்மைகள் மெதுவாகக் கசிந்து, ஜூனியர் விகடன் இதழ் இக்கொடுமையை அம்பலப்படுத்தியது. ஆனால், அம்மாவட்ட போலீசு கண்காணிப்பாளரான பிரவீன் குமார் அபினயு, திருட்டு வழக்கிலிருந்து தப்பிப்பதற்காகவே வசந்தி பொய் சொல்கிறார் என்று கிரிமினல் போலீசாருக்கு நற்சான்றிதழ் அளித்தார்.

சட்டபூர்வ கிரிமினல்களான போலீசின் காமவெறியாட்டத்துக்கு, பாதிக்கப்பட்ட வசந்தி மீதான பாலியல் வல்லுறவுக் கொடூரமே சான்று கூறப் போதுமானது. போலீசு உயரதிகாரிகள், தமது துறைசார்ந்த கீழ்நிலை போலீசாரைக் காப்பதற்காகவே இப்படி செய்துள்ளார்கள் என்று இந்த விவகாரத்தை குறுக்கிச் சுருக்கிப் பார்க்க முடியுமா? கீழ்நிலைப் போலீசுதான் ஒழுங்கும் கட்டுப்

பாடும் இல்லாதவர்கள்; ஆனால், போலீசு உயரதிகாரிகளாக இருப்பவர்கள் ஐ.பி.எஸ். படித்தவர்கள், கண்ணியமான மேட்டுக்குடியினர், அவர்கள் நேர்மையுடன் சட்டத்தை நடைமுறைப்படுத்துவார்கள் என்று நம்பத் தான் முடியுமா?

அரியானா மாநிலத்தின் ஐ.ஜி.யான எஸ்.பி.எஸ்.ரத்தோர், 14 வயது சிறுமியான ருச்சிகாவை 1990-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ஆம் தேதியன்று பாலியல் பலாத்காரம் செய்ய முயன்ற போது, அவனிடமிருந்து தப்பிய அச்சிறுமி போலீசில் புகார் கொடுத்தார். அதைத் தொடர்ந்து ருச்சிகா, தான் படித்து வந்த பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்டு, அவரது தம்பி மீது திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு, அவரது குடும்பத்தாரும் நண்பர்களும் ரத்தோரின் போலீசாரால் அச்சுறுத்தப்பட்டுத் தொல்லைக்குள்ளாக்குள்ளாக்கப்பட்டனர். இக்கொடுமைகளைக் கண்டு மனமுடைந்த ருச்சிகா, 1993-இல் தற்கொலை செய்து கொண்டு மாண்டுபோனாள்.



அதேசமயம், காமவெறியன் ரத்தோருக்கு அரியானா அரசு பதவி உயர்வு அளித்தது. 1999-இல் அவன் மாநிலத்தின் போலீசு தலைமை இயக்குனராக்கப்பட்டு, சிறந்த சேவைக்கான அரசுத் தலைவர் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டான். 19 ஆண்டுகளுக்குப் பின்னர், 2009-இல் ரத்தோர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு, பிணை வழங்கவும் மேல்முறையீடு செய்யவும் அனுமதி மறுத்து சி.பி.ஐ. கோர்ட் தடை விதித்த போதிலும், 2010-ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் அவனுக்கு நிபந்தனையுடன் பிணை வழங்கியது.

நாங்கள் சட்டத்துக்கு மேலானவர்கள் என்ற திமிரோடு தனிவகை சாதியாக இருந்து கொண்டு சமூகத்தையே போலீசும் இராணுவமும் அச்சுறுத்துவதை இந்த விவகாரமும், போலீசு பாதுகாப்புடன் நடந்து வந்த திண்டிவனம் விபச்சார சந்தையில் தள்ளப்பட்டு, தப்ப முயன்ற போது போலீசாரால் கைது செய்யப்பட்டு, பின்னர் செஞ்சி சிறைக்காவலர்களால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான ரீடாமேரி விவகாரமும் நிரூபித்துக் காட்டுகின்றன. சிதம்பரம் பத்மினி மற்றும் சின்னாம்பதி பாலியல் கொடூர வழக்குகளை விசாரித்த விசாரணைக் கமிசன்கள், இந்த வழக்குகளை நீர்த்துப் போகச் செய்யவும் பாலியல் குற்றங்களை மூடிமறைக்கவும் போலீசு அதிகாரிகள் செய்துள்ள தகிடுதத்தங்களைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளது. இத்தனைக்குப் பின்னரும் போலீசும் அதிகாரவர்க்கமும் சட்டங்களை முறைப்படி செயல்படுத்தி, குற்றவாளிகளைத் தண்டித்து, பெண்களைப் பாதுகாக்கும் என்று நம்பத் தான் முடியுமா?

**நீதித்துறையும் மையப் புலனாய்வுத்துறையும் பெண்களைப் பாதுகாக்குமா?**

இந்தியாவின் முதலாவது நீதிபதியாகவும் சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகவும் நியமிக்கப்பட்ட நீதிபதி முத்துசாமி அய்யர், கணவன் தனது மனைவியை அடிப்பது தவறல்ல என்று கடந்த நூற்றாண்டில் தீர்ப்பு கூறினார். ஆனால், இந்த நூற்றாண்டில் நிலைமை மாறிவிட்டதா? மாமியார் தனது மருமகளை அடித்தாலோ, அல்லது தனது மகன் அவளை விவாகரத்து செய்துவிடுவான் என்று மிரட்டினாலோ அது சட்டப்படி குற்றமல்ல என்று உச்சநீதிமன்ற நீதிபதிகளான எஸ்.பி.சின்காவும் சிரியாக் ஜோசப்பும் கடந்த 2009-ஆம் ஆண்டில் தீர்ப்பளித்துள்ளனர். நீதிபதிகள் மட்டுமல்ல, நீதிக்காக வாதிடும் வழக்குரைஞர்களும் இத்தகைய ஆணாதிக்க அணுகுமுறையைக் கொண்டவர்களாகவே உள்ளனர். ஜெசிகாலால் கொலை வழக்கில், அவரை நடத்தை கெட்டவராகக் காட்டும் கோணத்தில் வாதாடி குற்றவாளியைத் தப்புவிக்க பிரபல வழக்குரைஞரும், முன்னாள் மத்திய சட்ட அமைச்சரும், பா.ஜ.க. தலைவர்களுள் ஒருவருமான ராம் ஜெத்மலானி எத்தணித்தார்.

டெல்லியில் தனது இச்சைக்கு இணங்க மறுத்த சட்டக் கல்லூரி மாணவி பிரியதர்சினி மட்டூவை, அதே கல்லூரியின் மாணவனும் மாநில இணை போலீசு ஆணையரின் மகனுமாகிய சந்தோஷ்குமார் சிங் என்பவன் அம்மாணவியின் வீட்டுக்குள் புகுந்து பாலியல் வன்முறையை ஏவிய பின்னர் கோரமாகக் கொன்றான். அதே டெல்லியில், சாராய விடுதியில் விற்பனை முடிந்த பிறகு சாராயம் பரிமாற மறுத்த ''மாடல்'' பெண் ஜெசிகாலால் என்பவரை அரியானா மாநில அமைச்சரின் தறுதலைப் பிள்ளையான மனு சர்மா சுட்டுக் கொன்றான். நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய இவ்விரு வழக்குகளில் சாட்சியங்களை போலீசும் மையப் புலனாய்வுத்துறையும் மூடிமறைத்து வழக்கை நீர்த்துப் போக வைத்தன. இதை அறிந்திருந்த போதிலும், டெல்லி அமர்வு நீதிமன்றம் குற்றவாளிகளை விடுதலை செய்தது. செய்தி ஊடகங்களும் நடுத்தர வர்க்கத்தினரும் இந்த அநீதியை எதிர்த்துக் கூச்சலிட்ட பிறகு, டெல்லி உச்சநீதிமன்றத்தால் குற்றவாளிகள் பின்னர் தண்டிக்கப்பட்டனர். நாடே அதிர்ச்சிக்குள்ளான பிரபல வழக்குகளுக்கே இதுதான் நிலைமை.

1972-ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மதுரா என்ற 16 வயதான விவசாயக் கூலிப்

> வங்கிக்குப் பொறுப்பான காசாளரே, கொள்ளையில் ஈடுபடுவதைப் போலத்தான் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தில் உள்ளவர்களே, ஒழுங்கை நிலைநாட்டக் கடமைப்பட்டவர்களே அத்தகைய குற்றங்களில் ஈடுபடுகின்றனர். பெண்கள் மீதான இந்துத்துவ, சாதிய, ஆணாதிக்க அடக்குமுறைகளைப் பாதுகாப்பதாகவே அரசின் உறுப்புகள் உள்ளன. இத்தகைய நிறுவனங்களால் பெண்களுக்கு வரும் ஆபத்துதான் மிகக் கொடியது.

பெண், தேசாய் கஞ்ச் போலீசு நிலையத்தில் இரு போலீசுக்காரன்களால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட வழக்கில் 1974-இல் மகாராஷ்டிர உயர் நீதிமன்றம் அளித்த ஐந்தாண்டு சிறைத் தண்டனையை ரத்து செய்து, காமவெறி போலீசாரை உச்சநீதிமன்றம் விடுதலை செய்தது. மதுரா ஒரு கன்னிப் பெண் அல்ல, அவள் பாலியல் வல்லுறவை எதிர்த்ததற்கான காயங்கள் எதுவும் அவளது உடலில் இல்லை - என்றெல்லாம் காரணங்களைக் காட்டி விடுதலையை நியாயப்படுத்தியது உச்ச நீதிமன்றம்.

1992-இல் ராஜஸ்தானைச் சேர்ந்த பன்வாரிதேவி என்ற மிகவும் பிற்பட்ட சாதிப் பெண், குஜ்ஜார் ஆதிக்க சாதிவெறியர்கள் 5 பேரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட வழக்கில் 1995-இல் தீர்ப்பளித்த மாவட்ட நீதிமன்றம், தாழ்த்தப்பட்டவரை மேல்சாதியினர் தீண்டவே மாட்டார்கள் என்பதால் பாலியல் வல்லுறவு நடந்ததாகக் கூறுவது பொய்யானது என்று தீர்ப்பு கூறி ஆதிக்க சாதிவெறியர்களான காமவெறி பயங்கரவாதிகளை விடுதலை செய்தது.

ஒரிசாவின் போலீசு தலைமை இயக்குனர்களில் ஒருவரான வித்யபூஷண் மொகந்தியின் மகனாகிய பிட்டி மொகந்தி என்பவன், 2005-ஆம் ஆண்டில் ராஜஸ்தானில் ஒரு ஜெர்மானியச் சுற்றுலாப் பெண் மீது பாலியல் வன்கொடுமையை ஏவிய குற்றத்துக்காக 2006-இல் கைது செய்யப்பட்டான். பின்னர், அந்த போலீசு உயரதிகாரி தனது தாயார் மரணப்படுக்கையில் கிடப்பதால் அவரைத் தனது மகன் ஒருமுறை பார்க்க அனுமதி கேட்டு, பரோலில் வந்த பின்னர் அவன் தலைமறைவாகிவிட்டதாகப் பசப்பி, தனது அதிகாரத்தைக் கொண்டு குற்றவாளியான தனது மகனை தனது வீட்டிலேயே வைத்துக் கொண்டு பாதுகாத்ததோடு, போலீசையும் அதற்காகப் பயன்படுத்தியுள்ளான். ராஜஸ்தான் போலீசு, ஒரிசா மாநில அரசிடம் தொடர்ந்து முறையிட்ட போதிலும், 7 ஆண்டுகளாகியும் அவன் எங்கிருக்கிறான் என்று தெரியவில்லை என்கிறது ஒரிசா போலீசு. பின்னர் குற்றவாளியைப் பாதுகாத்து வைத்திருந்த போலீசு இயக்கு னர் 2008-இல் கைது செய்யப்பட்ட போதிலும், அவரது மகன் இன்னமும் தலைமறைவாகத்தான் இருந்து வருகிறான்.

தமிழ்நாட்டை உலுக்கிய சிதம்பரம் பத்மினி கற்பழிப்பு வழக்கை விசாரித்த பழனியப்பன் விசாரணைக் கமிசன், பத்மினி மானபங்கப்படுத்தப்பட்டாரேதவிர, வல்லுறவு நடக்கவேயில்லை என்று அபாண்டமாகத் தீர்ப்பு எழுதியது.

இப்படி பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பெண்களின் வழக்குகளையும் அரசாங்கத்தின் உறுப்புகளே குற்றவாளிகளைப் பாதுகாப்பதையும் அடுக்கிக் கொண்டே போகலாம். இத்தனையும் கடந்து ஒரு பெண் துணிவுடன் சட்டம், போலீசு, நீதித்துறையை அணுகினால், விட்டால் போதும் என்று தாங்களே வழக்கிலிருந்து விலகிக் கொள்ளும் வகையில் இந்த நிறுவனங்கள் பெண்களை மேலும் தொல்லைக்குள்ளாக்கி இழிவுபடுத்துகின்றன. பாலியல் வன்முறைக்கு ஆளான பெண்கள் அருவருப்பான வக்கிரமான பல்வேறு சோதனைகளையும் கேள்விகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்பெண்களின் நடத்தை கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. நீதிமன்றங்களில் அவர்கள் படும் துன்பமும் மனவேதனையும், பாலியல் வல்லுறவுக்கு ஆளான பொழுதில் ஏற்பட்ட துயரைவிட மோசமானதாக இருக்கிறது.

### பெண்களுக்கு எதிராக நிற்கும் ஒட்டுமொத்த அரசாங்க அமைப்புகள்

ஒரு பெண் எந்தக் குற்றமும் செய்ய வேண்டியதில்லை. அவள் ஒரு பெண்ணாக இருக்கிறாள் என்பதற்காகவே வன்முறை - கிரிமினல் குற்றங்கள் ஏவிவிடப்படுகின்றன. ஒரிசாவில் கணவனின் கொடுமைக்கும் சித்திரவதைக்கும் ஆளான அஞ்சனா மிஸ்ரா என்ற மேட்டுக்குடி பெண், அவனிடமிருந்து தப்பி பெண்கள்



நன்றி: ஓவியர் பாலா.

**ஒரு பெண் துணிவுடன் சட்டம், போலீசு, நீதித்துறையை அணுகினால், விட்டால் போதும் என்று தாங்களே வழக்கிலிருந்து விலகிக் கொள்ளும் வகையில் இந்த நிறுவனங்கள் பெண்களை மேலும் தொல்லைக்குள்ளாக்கி இழிவுபடுத்துகின்றன. பாலியல் வன்முறைக்கு ஆளான பெண்கள் அருவருப்பான வக்கிரமான பல்வேறு சோதனைகளையும் கேள்விகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்பெண்களின் நடத்தை கேள்விக்குள்ளாக்கப்படுகிறது.**

காப்பகத்தில் குழந்தைகளுடன் தங்கியிருந்து, அவரது கணவனாகிய வனத்துறை அதிகாரி மீது புகார் கொடுத்தார். 1997 ஜூலையில் மாநில அரசுத் தலைமை வழக்குரைஞரிடம் இவ்வழக்கு தொடர்பாக சந்தித்த போது, அவன் அஞ்சனா மீது பாலியல் வல்லுறவுக் கொடூரத்தை ஏவ முயற்சித்தான். ஆடைகள் கிழிக்கப்பட்டு உடலெங்கும் காயங்களுடன் அவனிடமிருந்து தப்பிய அவர், போலீசில் புகார் செய்தார். ஆனால் ஒட்டுமொத்த அரசு எந்திரமும் அஞ்சனாவுக்கு எதிராகச் செயல்பட்டன. பின்னர் மையப் புலனாய்வுத் துறை விசாரணை நடந்து, அரசுத் தலைமை வழக்குரைஞர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட போதிலும், அன்றைய காங்கிரசு முதல்வர் பட்நாயக் தலைமையிலான அரசு, அவன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒரு வாடகைக் காரில் சென்று கொண்டிருந்த அஞ்சனாவை துப்பாக்கி ஏந்திய கும்பல் வழிமறித்து, புகார் கொடுத்ததற்கு இதுதான் தண்டனை என்று பாலியல் வன்கொடுமையை ஏவியது. வரம்பற்ற அதிகாரத்தைக் கொண்டு ஆட்டம் போடும் அரசாங்கத்தின் உறுப்புகளுக்கு எதிராக யார் நின்றாலும், அவர்களுக்கு இந்தக் கதிதான் ஏற்படும்என்று மிரட்டி எச்சரிக்கும் வகையில் நடந்துள்ள இந்த அட்டூழியம், ஒட்டுமொத்த அரசாங்க அமைப்பே பெண்களுக்கு எதிராக நிற்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டியது.

அரசு வழக்குரைஞர், போலீசு, நீதிபதி - ஆகிய இம் மூவரில் ஒருவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவாக நடந்து கொண்டால், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒருக்காலும் நீதி கிடைக்காது என்கிறார், சென்னை உயர் நீதிமன்ற வழக்குரைஞர் நாகஷைலா. இதனாலேயே பெண்களுக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், வரதட்சிணைக் கொடுமை தடுப்புச் சட்டம், பெண்கள் வாழ்வுரிமைக்கான சட்டங்கள், பெண்களின் பணியிடப் பாதுகாப்புச் சட்டங்கள் என பெண்களுக்காகவே பல்வேறு சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ள போதிலும், நாட்டில் பெண்களின் நிலை இன்னமும் அதல பாதாளத்தில்தான் இருக்கிறது.

**ஓட்டுக்கட்சிகளின் யோக்கியதை என்ன?**

ஆணாதிக்க குடும்ப - சமூக அமைப்பு முறையும், அதற்கேற்ற சட்டம், நீதி மற்றும் அமலாக்கத்துறையும் நீடிக்கும் போது, பெண்களைப் பாதுகாத்து முன்னேற்றுவதற்கான இப்படிப்பட்ட சீர்திருத்தச் சட்டங்களால் மாற்றம் எதையும் கொண்டுவந்துவிட முடியாது. இருப்பினும் பெயரளவிலான சில சீர்திருத்தச் சட்டங்களைக் கூட ஏற்க மறுத்து, இதனால் இந்தியாவின் பாரம்பரியமும், குடும்ப உறவுகளும் பாதிக்கப்பட்டு சிதைந்துவிடும் என்று ஆர்.எஸ்.எஸ். முதலான இந்துத்துவ பிற்போக்கு அமைப்புகள் வாதிட்டுத் தடுக்கின்றன. பொது சிவில் சட்டம் என்ற பெயரில் இந்துத்துவ ஆணாதிக்க சிவில் சட்டத்தைத் திணிக்கவே எப்போதும் இந்துத்துவ பரிவாரங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கின்றன. தற்போது நிலவும் மத ரீதியான திருமணச் சட்டத்தில் சிறிய சீர்திருத்தங்களைச் செய்வதைக்கூட கிறித்துவமயமாக்கும் முயற்சி என்று இக்கும்பல் எதிர்க்கிறது. குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களும் சீர்திருத்தங்களும் செய்தால், இவற்றைப் பெண்கள் தங்களது கணவருக்கும் குடும்பத்திலுள்ள ஆண்களுக்கும் எதிராகப் பயன்படுத்திக் குடும்ப ஒற்றுமையைச் சீர்குலைத்துவிடுவார்கள் என்று இந்து சனாதன ஆணாதிக்க வெறியுடன் துக்ளக் சோ, குருமூர்த்தி வகையறாக்கள் கூப்பாடு போடுகின்றனர். இந்துத்துவ பரிவாரங்கள் பார்ப்பனிய ஆணாதிக்கத்துக்காக நிற்கின்றன என்றால், பிற்படுத்தப்பட்டோராகக் காட்டிக் கொள்ளும் நிலப்பிரபுக்களான ஜாட், யாதவ் சாதிய அரசியல்வாதிகள் அவர்களோடு போட்டி போட்டுக்கொண்டு ஆணாதிக்கத்தை நிலைநாட்டத் துடிக்கின்றனர்.

ஜனநாயகத்தின் அறிவார்ந்த பிரதிநிதிகளாகச் சித்தரிக்கப்படும் ஓட்டுக்கட்சிகளின் தலைவர்களில் பெரும்பாலோர் ஆணாதிக்கவாதிகளாகவே உள்ளனர். இவர்களின் காமவெறிக் களியாட்டங்களும் சின்னவீடு சமாச்சாரங்களும் பாலியல் குற்றவழக்குகளில் சிக்கியுள்ள



சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலும் ஏற்கெனவே வெளிவந்து நாடெங்கும் நாறிப் போயுள்ளன.

மே.வங்கத்தில், ஒரு பெண்ணை 5 பேர் கொண்ட கும்பல் ஒரு பூங்காவில் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கிய விவகாரம் அண்மையில் வெளிச்சத்துக்கு வந்த போது, ''அந்தப் பெண்ணுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையே பணப்பட்டுவாடாவில் தகராறு வந்ததால், அவர்கள் தன்னை வல்லுறவு கொண்டதாக அப்பெண் பொய்ப்புகார் கொடுத்துள்ளார்'' என்று கூச்சநாச்சமின்றி பேசியுள்ளார், திரிணாமுல் காங்கிரசு கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரும் நாடாளுமன்ற பெண் உறுப்பினருமான டாக்டர் கோகோலி கோஷ். இந்த விவகாரம், தனது அரசாங்கத்தை இழிவுபடுத்துவதற்காக இட்டுக்கட்டப்பட்டுள்ளது என்றார், அம்மாநிலத்தின் பெண் முதல்வரான மமதா பானர்ஜி.




ஆணாதிக்க சமூகத்தின் இழிவைச் சாடி, ''வல்லுறவை ஏவாதே என்று ஆண்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்குப் பதிலாக, பாலியல் வல்லுறவுக்கு ஆளாகாதே என்று பெண்களுக்குத்தான் சமூகம் பாடம் நடத்துகிறது'' என்ற முழக்க அட்டையுடன் டெல்லியில் நடந்த ஆர்ப்பாட்டம்.

டாக்டர் ராணி என்பவரை இரண்டாம் திருமணம் செய்தவரான பரஞ்சோதி, அப்படியொரு திருமணமே நடக்கவில்லை என்று புளுகியதை ஏற்றுக் கொண்டு அ.தி.மு.க. தலைவியான ஜெயலலிதா அவரைத் திருச்சி மேற்கு தொகுதியில் போட்டியிட வைத்து அமைச்சராக்கினார். தன்னை இரண்டாவது திருமணம் செய்து கொண்டு ஏமாற்றியதாக டாக்டர் ராணி போலீசில் புகார் கொடுத்ததால், வேறுவழியின்றி பரஞ்சோதியின் அமைச்சர் பதவி பறிக்கப்பட்டது. இருப்பினும், அவர் போலீசைக் கொண்டு டாக்டர் ராணியைத் தொடர்ந்து மிரட்டிய விவகாரம் வெளிவந்துள்ள போதிலும், தனது கட்சியின் எம்.எல்.ஏ.வான பரஞ்சோதி மீது பெண் முதல்வரான ஜெயலலிதா எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த லட்சணத்தில் அவர், தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் - பாலியல் வன்முறை வழக்குகளை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மகளிர் விரைவு நீதி மன்றங்களை அமைப்பது, இத்தகைய வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக 15 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பது என்பது உள்ளிட்ட 13 அம்சத் திட்டத்தை அறிவித்து சவடால் அடித்துக் கொண்டிருக்கிறார்.

**கடுமையான சட்டங்கள் அல்ல,**
**ஜனநாயகப் புரட்சிதான் தேவை!**

இவையனைத்தும் இது ஜனநாயக அரசு அல்ல, பெண்களைச் சமத்துவமாக நடத்தும் அரசியலமைப்பு முறையுமல்ல என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன. இருப்பினும், இந்த அரசு நடுநிலையானதாகவும் ஜனநாயகமாகவும் நடப்பதாகக் கருதிக் கொண்டு சட்டங்களைக் கடுமையாக்கி, போலீசுத்துறையிலும் நீதித்துறையிலும் சீர்திருத்தங்களைச் செய்வதன் மூலம் பெண்கள் மீதான வன்முறைகளைத் தடுத்துவிடலாம் என்று சிலர் நம்பச் சொல்கின்றனர். போலீசாருக்குப் போதனைகளை நடத்த வேண்டும்; பாதிக்கப்பட்ட பெண் புகார் கொடுக்க வந்தால், அவரை மரியாதையோடும் பரிவோடும் போலீசார் நடத்த வேண்டும் என்றெல்லாம் ஆலோசனைகளைக் கூறுகின்றனர்.

ஆனால், மனித உரிமைகள் பற்றி போலீசாருக்குப் பல ஆண்டுகளாகப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதற்குப் பின்னரும் போலீசாரின் அணுகுமுறையில், அவர்களது சிந்தனையில் மயிரளவுகூட மாற்றம் ஏற்படவில்லை என்பதை அன்றாடம் போலீசை எதிர்கொள்ளும் சாமானிய மக்கள் நன்கறிவார்கள். ஆண்களாகிய உயர் அதிகாரிகளால் பெண் போலீசாரே பாலியல் வன்கொடுமைக்குள்ளாவதும், அதிகாரத்தைக் கொண்டு மிரட்டி அவர்களைப் பாலியல் இச்சைக்கு ஆண் அதிகாரிகள் பயன்படுத்துவதும் பற்றி நக்கீரன் இதழில் பலமுறை அம்பலமாகியிருக்கும்போது, பெண் போலீசாரை அதிகமாக நியமித்தால், பெண்கள் மீதான வன்முறைக் குற்றங்களைத் தடுத்துவிட முடியுமா? வேலைவாய்ப்பிலும் நாடாளுமன்றத்திலும் பெண்களுக்குக் கூடுதல் இட ஒதுக்கீடு, பெண் போலீசு, பெண் நீதிபதிகள், மகளிர் போலீசு நிலையம் - முதலானவற்றால் இன்றைய அரசியலமைப்பு முறையின் கீழ் தொடரும் பெண்கள் மீதான வன்கொடுமைகளைத் தடுத்துவிடத்தான் முடியுமா?

இன்றைய அரசியலமைப்பு முறையே பெண்களுக்கு எதிரானதாக உள்ளது. அது பெயரளவிலான ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும்கூடச் செயல்படுத்த வக்கற்று தோல்வியடைந்து செல்லரித்துப் போய்க் கிடக்கிறது. இன்றைய தந்தை வழி ஆணாதிக்க - இந்துத்துவ சாதியாதிக்க அரசியலமைப்பு முறையை வீழ்த்திவிட்டு, புதிய ஜனநாயக அரசியலமைப்பை நிறுவும் திசையில் போராட்டங்களை வளர்த்தெடுப்பதே இன்றைய அவசர -அவசியத் தேவையாக உள்ளது. மாறாக, போலீசுக்கு இன்னும் அதிகாரங்களைத் தருவதும், தண்டனைகளைக் கடுமையாக்குவதும் பாம்புக்குப் பால்வார்த்த கதையாகவே முடியும்.

● பாலன்

# ஆணாதிக்க சமூகமே பெண்ணடிமைத்தனத்தின் ஆணிவேர்!



உ.பி. மாநிலத்தின் பக்பத் மாவட்டத்திலுள்ள ஆசாரா கிராமத்தில் நடக்கும் ''காப்'' பஞ்சாயத்துக் கூட்டத்தை மறைந்திருந்து பார்க்கும் பெண்கள்.

''பெண்களைப் பொருத்தவரை, தெருக்களும் வெளியிடங்களும் அவர்களுக்குப் பாதுகாப்பற்றவை என்றும்; வீடுதான், குடும்பங்கள்தான் அவர்களுக்கு முழுமையான பாதுகாப்பைத் தரும் ஒரே இடமென்றும்'' சராசரியான இந்திய மக்களால், குறிப்பாகப் பெண்களாலும் நம்பப்படுகிறது.

இந்தியாவின் தெருக்கள் பெண்களுக்குப் பாதுகாப்பற்றவை என்பது விவாதத்திற்கு இடமற்ற விடயம். ஆனால், இந்தியக் குடும்பங்கள். . . . ?

தெருக்களில் போகும் பெண்களுக்கு முன்பின் அறிமுகமில்லாத போக்கிரிகளிடமிருந்து மட்டும் ஆபத்து வருவதில்லை. படித்த, கண்ணியமாகத் தெரியும் ஆண் பிள்ளைகளிடமிருந்தும் ஆபத்துகள் - வக்கிரமாகப் பார்ப்பது தொடங்கி பாலியல் சீண்டல்கள் உள்ளிட்டுப் பல்வேறுவிதமான ஆபத்துகள் - வருகின்றன. போக்கிரிகளை, வளர்ப்பு சரியில்லை, குடும்பம் சரியில்லை என்று குற்றஞ்சுமத்தி ஒதுக்கித் தள்ளிவிட முடியும். ஆனால், பார்வைக்குக் கண்ணியமாகத் தெரியும் இந்த ஆபத்தான ஆண்களும்கூட வானத்திலிருந்து குதிப்பதில்லை. நல்ல, பண்பாடுமிக்கதாகச் சொல்லப்படும் குடும்பங்களிலிருந்துதான் இந்தக் கண்ணியவான்கள் வருகிறார்கள்.

தலைநகர் டெல்லியில் துணை மருத்துவ மாணவி கும்பல் பாலியல் வன்புணர்ச்சி தாக்குதலுக்குப் பலியானதைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டங்களின் பொழுது, குற்றவாளிகளைத் தூக்கில் போடுங்கள் என்று மட்டும் பெண்கள் கோரவில்லை. ''நாங்கள் எவ்வாறு ஆடை உடுத்த வேண்டும் என்று பாடம் எடுக்காதே; உங்கள் பையன்களிடம் பெண்களைப் பாலியல் வன்புணர்ச்சி செய்யாதே எனச் சொல்!'' என்றும் முழங்கினார்கள். இந்த முழக்கத்தின் இரண்டாவது வரி அசாதாரணமான ஒன்றாகும். இந்தியக் குடும்பங்களின் யோக்கியதையைத் தோலுரிக்கும் கண்டனமாகும்.

இந்தியப் பெற்றோர்கள், குறிப்பாகத் தந்தைமார்கள், பெண்களை வன்புணர்ச்சி செய்யுங்கள் எனக் கூறித் தமது ஆண் பிள்ளைகளை வளர்ப்பதில்லை என்ற போதும், இந்தியக் குடும்பங்கள், அவை எந்தச் சாதியை, மதத்தைச் சேர்ந்தவையாக இருந்தாலும், பெண்களை, பெண் குழந்தைகளைப் பற்றித் தாழ்வான கருத்தைத்தான் வழிவழியாக விதைத்து வருகின்றன. ''பெண், ஆணுக்கு இணையானவள் கிடையாது; ஆண்களுக்குச் சேவை செய்வதற்காகவே படைக்கப்பட்டவள்; அவள் ஆணுக்கு அடங்கி நடக்க வேண்டும்'' என வழிவழியாகப் போதிக்கப்படும் பிற்போக்குத்தனமும் ஆணாதிக்கமும் நிறைந்த கருத்துகள்தான், பெண்கள் மீது ஏவிவிடப்படும் சகலவிதமான வன்முறைத் தாக்குதல்களையும் இந்த நவீன காலத்திலும்கூட நியாயப்படுத்தி வருகின்றன.

மரபுவழிப்பட்ட இந்தியக் குடும்பங்கள் பெண்களின் நியாயமான விருப்பங்களுக்கும் உரிமைகளுக்கும் எதிரானவையாக இருப்பதோடு, பெண்கள் மீது நடத்தப்படும் பல்வேறு வன்முறைகளின் இருப்பிடமாகவும் பிறப்பிடமாகவும் உள்ளன. கிரி

மினல்களால், உதிரிக் கும்பலால் பெண்களுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்கள் சட்டப்படியான குற்றங்களாகக் கருதப்படும் அதேசமயம், வீட்டிற்குள் அவளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் - அடி, உதை சித்திரவதைகள், பாலியல் தொந்தரவுகள்- தாக்குதல்கள் உள்ளிட்டவை கலாச்சாரம், மரபு என்ற பெயரில் வெளிப்படையாக நியாயப்படுத்தப்படுகின்றன; அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரிமினல்களால், உதிரிக் கும்பலால் பெண்கள் பாலியல்ரீதியாகத் தாக்கப்படுவதைக் கண்டிக்கும் அனைவருமே தங்கள் வீட்டிற்குள் பெண்களுக்கு எதிராக நடக்கும் அநீதிகளைத் தட்டிக் கேட்பார்கள் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது. ‘‘வீட்டிற்குள் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை உடனடியாக ஒழித்துக் கட்டிவிட முடியாது; காலப்போக்கில்தான் அவற்றைக் களையெடுக்க முடியும். அதுவரை பெண்கள் பொறுத்துதான் போக வேண்டும்’’ எனப் பெண்கள் மீதான குடும்ப வன்முறை ஒருபுறம் வெளிப்படையான முறையில் நியாயப்படுத்தப்படுகிறது. இன்னொருபுறமோ, ‘‘பெண்களை அடித்துத் துன்புறுத்தக்கூடாதென்றாலும், அவள் ஆணுக்குக் கட்டுப்பட்டவள்தாள்’’ எனப் பெண்ணடிமைத்தனம் நைச்சியமான முறையில் முன்னிறுத்தப்படுகிறது.

### பெண் உயிர்வாழ்வது ஆணின் தயவில்

பெண்களுக்குப் பாதுகாப்பான இடமாக முன்னிறுத்தப்படும் ஆணாதிக்க குடும்ப அமைப்பு முறைதான், பல நேரங்களில் பெண்ணுக்குச் சமாதி கட்டும் இடமாகவும் மாறிவிடுகிறது. வீட்டிற்குள் நடக்கும் பெண் கருக்கொலை, பெண் சிசுக்கொலை, வரதட்சணைக் கொலைகளை வேறெப்படிச் சொல்ல முடியும்? கடந்த இருபது ஆண்டுகளில், அதாவது தனியார்மயம்-தாராளமயம் புகுத்தப்பட்ட பின்பு, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்ச்சி போன்ற குற்றச்செயல்கள் மட்டும் அதிகரிக்கவில்லை. பெண் கருக்கொலையும் அதிகரித்திருப்பதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு அம்பலப்படுத்தியிருக்கிறது.

ஒவ்வொரு ஏழு பெண் கருக்களிலும் ஒரு பெண் கரு, அக்கரு பெண் என்ற காரணத்தாலேயே அழிக்கப்படுவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 1991 -இல், 0 முதல் 6 வயதுள்ள பெண் குழந்தைகளின் எண்ணிக்கை, அதே வயதுடைய 1,000 ஆண் குழந்தைகளுக்கு 945 என இருந்தது; இது, அடுத்த பத்தாண்டுகளில், 2001-இல் 927 எனச் சரிந்து விழுந்துவிட்டதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்கள் தெரிவிக்கின்றன.

முதல் குழந்தை பெண்ணாகப் பிறப்பதைக்கூடப் ‘பெருந்தன்மையோடு’ ஏற்றுக் கொள்ளும் ஆணாதிக்கக் குடும்பங்கள், அடுத்தடுத்து பெண் குழந்தைகள் பிறப்பதைப் பெரும்பாலும் சகித்துக் கொள்வதில்லை. இரண்டாவது ஆண் மற்றும் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் 1,000-க்கு 731-ஆகவும்; மூன்றாவது ஆண் மற்றும் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் 1,000-க்கு 407-ஆகவும் இருப்பதே, எவ்வளவு தூரத்திற்கு பெண் கருக்கொலைகள் இரக்கமற்ற முறையிலும் குற்ற உணர்வின்றியும் நடந்து வருகின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

கருவில் மலர்வது ஆணா, பெண்ணா எனத் தீர்மானிப்பது ஆணின் விந்தணுதான் என அறிவியல் மெய்ப்பித்த பிறகும், இந்த உண்மையை ஆணாதிக்க சமூகம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. பெண் குழந்தையைப் பெற்றெடுத்த பழியைப் பெண்ணின் மீதே போட்டு, அவளைத் துன்புறுத்துகிறது. இப்பெண் கருக்கொலைகளும், சிசுக் கொலைகளும் வரதட்சணையைக் காட்டி நியாயப்படுத்தப்படுகின்றன. வரதட்சணை என்பதும்கூட பெண்களுக்கு எதிரான ஆணாதிக்கத்தின் கருவி எனும்பொழுது, அந்த அநீதி பெண்களைக் கருவிலேயே அழித்துவிடத் துடிக்கிறது; அப்பொழுது தப்பித்து வளர்ந்துவிட்டாலோ, திருமணத்தின்பொழுது தண்டிக்கிறது; வரதட்சணை, திருமணமான பெண்களின் உயிரைப் பறிக்கும் கொலைவாளாகவும் உருவெடுக்கிறது.

பெண்களுக்கு எதிரான இந்த வன்மத்தையும் பிற்போக்கு ஆணாதிக்கத்தனத்தையும் இந்து மதம் மோட்சம், இறவாத்தன்மை போன்ற தர்க்கங்களை முன்னிறுத்தி நியாயப்படுத்துகிறது. ‘‘ஒருவனுக்குப் பிறக்கும் ஆண் மகவுதான் அவனுக்கு மோட்சத்தை உத்தரவாதப்படுத்துகிறது. ஒருவன், தனது ஆண் மகவின் மூலம் இரண்டு உலகங்களையும், தனது பேரன் மூலம் இறவாத்தன்மையையும் அடைய முடியும்; அடுத்தடுத்து பெண் குழந்தைகளைப் பெறும் மனைவியைக் கணவன் தனது

பெண் சிசுக்கொலைகளும் கருக்கொலைகளும் பஞ்சாபில் அதிகரித்த அளவில் நடப்பதைக் கண்டித்து அமிர்தசரஸ் நகரில் பள்ளி மாணவிகள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)



திருமணத்தின் 11-ஆவது ஆண்டில் கைகழுவி விடலாம்'' என்று போதிக்கிறது, மனு தர்மம். முசுலீம், கிறித்தவ மதங்களிலும் பெண்களின் நிலை ஏறத்தாழ இதுதான். அம்மதங்களிலும் ஆண்டவனுக்கு அருகில் ஆண்கள்தான் நிறுத்தப்படுகின்றனரே தவிர, பெண்களுக்கு இடம் ஒதுக்கப்படவில்லை.




**சமூக உரிமைகளைப் பெறுவதில் சமமற்ற நிலை:**

பெண்களைப் பாகுபடுத்தி வளர்ப்பதும், ஒரு ஆணுக்கு ஈடாக அவளை மதிக்க மறுப்பதும் பெண்களின் குழந்தைப் பருவத்திலேயே தொடங்கிவிடுகிறது. பெண் குழந்தை, ஆண் குழந்தைகளுக்கு இடையே உணவு வழங்குவதில்கூட வேறுபாடு காட்டப்படுகிறது. ஆண்கள் சாப்பிட்ட பிறகுதான், மிச்சமிருப்பதைப் பெண்கள் சாப்பிட வேண்டும்; கணவன் சாப்பிட்ட எச்சில் தட்டில்தான் மனைவி சாப்பிட வேண்டும் என்ற சம்பிரதாயங்களெல்லாம் இந்த வேறுபாட்டை வலியுறுத்துபவைதான்.

பெண் கல்வி நிலையில் கடந்த முப்பது ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இருப்பினும், இது நாடெங்கும் ஒரே சீராக இல்லை. குறிப்பாக, பள்ளிக் கல்வியைக்கூட முடிக்காமல் இடை நிற்கும் சதவீதம் ஆண் குழந்தைகளைவிட, பெண் குழந்தைகள் மத்தியில்தான் அதிகமுள்ளது. இந்த இடைநிற்றலுக்கு, பொருளாதாரக் காரணங்கள் ஒருபுறமிருக்க, வீட்டு வேலைகள் பெண் குழந்தைகள் மீது சுமத்தப்படுவதும்; பெண் குழந்தைகளுக்குக் கல்வி தேவையில்லை, வயதுக்கு வந்துவிட்ட பெண்களைப் பள்ளிக்கு அனுப்பிவைத்தால் கெட்டுப் போய் விடுவார்கள் என்பது போன்ற பிற்போக்கு சிந்தனைப் போக்கும்; 18 வயதுக்கு முன்பே பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைக்கப்படுவதும், அதிகமாகப் படிக்க வைத்தால், அதற்குத் தகுந்தாற் போல படித்த மாப்பிள்ளையாகப் பார்க்க வேண்டும்; அதிகமாக வரதட்சணை கொடுக்க வேண்டும் என்பவையெல்லாம் காரணங்களாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆசிரியர்கள் மாணவிகள் மீது நடத்தும் பாலியல் தாக்குதல்களும் பெண் கல்வியைக் காவு வாங்கி வருகின்றன. செய்முறைத் தேர்வு, உள்மதிப்பீட்டுத் தேர்வுகளுக்கு மதிப்பெண்களைப் போடும் அதிகாரம் தமக்கு இருப்பதைக் காட்டி மிரட்டியே, வக்கிரம் பிடித்த ஆசிரியர்கள் மாணவிகளைச் சீரழிக்கின்றனர். இவர்களின் வக்கிரத்துக்கு சிறுமிகள்கூடத் தப்புவதில்லை என்ற அளவுக்கு நிலைமை மோசமடைந்து வருகிறது.

இப்பாலியல் அத்துமீறல்கள் ஒருபுறமிருக்க, பெண்களுக்கு ஏற்ற வகையில் கல்விக்கூடங்களில் கழிப்பறைகள் இல்லாததால், பல பெண்கள் படிப்பைப் பாதியிலேயே விட்டுச் சென்றுவிடுவதாகச் சமீபத்தில் உச்ச நீதிமன்றம் சுட்டிக் காட்டியிருக்கிறது. ஆரம்ப வகுப்புகளில் இன்றும்கூட ஆண் என்றால் அலுவலகம் செல்பவன்; பெண் என்றால் சமையல் உள்ளிட்டு வீட்டு வேலை செய்பவள் என்ற பிற்போக்கு சிந்தனைதான் பாடமாகப் போதிக்கப்படுகிறது.

பெண்களுக்கு அளிக்கப்படும் ஊட்டச்சத்து, கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார நிலை, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் உள்ளிட்ட குறியீடுகளைக் கொண்டு கணக்கிடப்படும் சர்வதேச பாலியல் சமத்துவப் பட்டியலில் இந்தியா 134-வது இடத்தில் (மொத்தம் 187 நாடுகள்) இருக்கிறது. இந்தியாவில் பெண்களின் நிலை எந்தளவிற்குப் பின்தங்கிய நிலையில் இருத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதற்கு இதுவொரு சான்றாகும்.

சமவேலைக்கு சம ஊதியம் என்பது இன்றும்கூட அமைப்புசாரா தொழில்களில் ஈடுபடும் பெண்களுக்கு மறுக்கப்படுகிறது. கற்பு நெறி மட்டுமல்ல, கருத்தடை செய்து கொள்வதென்பதுகூடப் பெண்களுக்கு விதிக்கப்பட்டதாகவே நிலவி வருகிறது. பெண்கள் மீதான பாலியல் தாக்குதல்களைக் கற்பு என்ற ஆணாதிக்கக் கண்ணோட்டத்திலிருந்துதான் சமூகம் கண்டிக்க முன் வருகிறது. அதனால்தான், குடும்பத்திற்குள் கணவனால் மனைவி மீது தொடுக்கப்படும் பாலியல் தாக்குதல்கள் சமூகத்தால் கண்டிக்கப்படுவதுமில்லை; கண்டுகொள்ளப்படுவதுமில்லை.

**வரதட்சணைக் கொலைகளும் கௌரவக் கொலைகளும்:**

ஒரு ஆண் மகனுக்குத் தனது துணையைத் தேர்ந்தெடுப்பதில் இருக்கும் அற்பத்தனமான சுதந்திரம் கூடப் பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. படித்த, நவநாகரிகப் பெண்கள்கூடத் தாலி, மெட்டி போன்ற அடிமைச் சின்னங்களைச் சுமந்துதான் தீர வேண்டும்; வரதட்சணை, குழந்தைத் திருமணம் போன்றவை சட்டத்தால் தடை செய்யப்பட்டிருந்தாலும், பெண்களுக்கு எதிரான இந்த அநீதிகள் இன்னும் தொடர்ந்து

கொண்டிருப்பதோடு, அதனை நியாயமானதாக ஏற்றுக் கொள்ளும் மனோ பாவம் இன்றளவும் சமூகத்தில் நிலவுகிறது. ஏதோ பெண்ணின் நலனுக்காகத் தான் வரதட்சணை வாங்கப்படுவது போலவும்; குழந்தைத் திருமணங்கள் பாலியல் வக்கிரங்களைத் தடுக்கும் என்பது போலவும் வெளிப்படையாக நியாயப்படுத்தப்படுகின்றன.

> **தெருவில் பெண்களுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்கள் சட்டப்படியான குற்றங்களாகக் கருதப்படும் அதேசமயம், வீட்டிற்குள் அவளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் - அடி, உதை சித்திரவதைகள், பாலியல் தொந்தரவுகள் - தாக்குதல்கள் உள்ளிட்டவை கலாச்சாரம், மரபு என்ற பெயரில் வெளிப்படையாக நியாயப்படுத்தப்படுகின்றன; அங்கீகரிக்கப் படுகின்றன.**

இந்தியாவில் 20 வயதிலிருந்து 24 வயதுக்கு உட்பட்ட திருமணமான பெண்களில் சுமார் 47 சதவீதப் பெண்கள் 18 வயதிற்கு முன்னே திருமணம் செய்து வைக்கப்பட்டிருப்பதாகவும், குழந்தை மணமகள் விவகாரத்தில் தென் மத்திய ஆசிய நாடுகளிலேயே இந்தியாதான் முதன்மையாக இருப்பதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவில் ஒவ்வொரு 90 நிமிடத்திற்கும் ஒரு பெண் வரதட்சணை காரணமாகக் கொல்லப்படுவதாகத் தேசியக் குற்றவியல் ஆவணங்கள் கூறுகின்றன.

1961-இல் உருவாக்கப்பட்ட வரதட்சணை தடைச் சட்டம், 1984 மற்றும் 1986-களில் இரண்டு முறை திருத்தப்பட்டு, குற்றவாளிகள் உடனடியாகப் பிணையில் வெளிவரமுடியாதபடி கடுமையாக்கப்பட்ட பின்னர்கூட, இக்கொலைகளின் எண்ணிக்கை குறையவில்லை. மாறாக, இந்த வரதட்சணைக் கொலைகள் கடந்த பத்தாண்டுகளில் அதற்கு முந்தைய பத்தாண்டுகளைவிட 14 சதவீதத்திற்கு மேல் அதிகரித்துள்ளன. 1998-இல் 7,146 ஆக இருந்த வரதட்சணைக் கொலைகள், 2007-இல் 8,093, 2008-இல் 8,172, 2010-இல் 8,391 என அதிகரித்திருக்கிறது. மேலும், பாலியல் வன்புணர்ச்சி வழக்குகளைப் போலவே இக்கொலை வழக்குகளிலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படும் விகிதம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. இது சட்டம் மற்றும் நீதி பரிபாலண முறையின் தோல்வியை மட்டுமல்ல, சமூகம் எந்தளவிற்கு பெண்களுக்கு எதிரான பிற்போக்குத் தனத்திலும் வன்கொடுமையிலும் ஊறிப் போயிருக்கிறது என்பதையும் ஒருசேர எடுத்துக் காட்டுகின்றன.

சிசுக்கொலை, வரதட்சணைக் கொலைகளுக்கு அடுத்து, பெண்களின் உயிரை அநியாயமாகப் பறிக்கும் பட்டியலில் தற்பொழுது கௌரவக் கொலை இடம் பிடித்து வருகிறது. இந்தியச் சாதியக் குடும்ப அமைப்புமுறை மட்டுமல்ல, இந்திய அதிகார வர்க்கமும் கௌரவக் கொலைகள் என்றழைக்கப்படும் இந்த ஆதிக்க சாதிவெறிக் கொலைகளை வெளிப்படையாக நியாயப்படுத்தி வருவதற்குப் பல்வேறு ஆதாரங்கள் உள்ளன. குறிப்பாக, ''தனது சகோதரி கீழ் சாதிப் பையனைத் திருமணம் செய்துகொண்டதைச் சகித்துக் கொள்ளாத சகோதரன், சகோதரியின் கணவனையும் குடும்பத்தாரையும் கொலை செய்த வழக்கில், அவனுக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து'' உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதோடு, ''அவனின் மனோநிலையைப் புரிந்து கொள்ள வேண்டும்'' எனக் கூறி, ஆதிக்க சாதி வெறிக் கொலைகளுக்கு வக்காலத்து வாங்கியது.

### வீடா, பாலியல் சித்திரவதைக் கூடமா?

கிரிமினல்களால், தெருக்களில் அலைந்து திரியும் உதிரிக் கும்பலால் பெண்கள் பாலியில்ரீதியாகத் தாக்கப்படும் எண்ணிக்கையைக் காட்டிலும், வீட்டிற்குள், அந்த நான்கு சுவருக்குள் பெண்களுக்கு எதிராக நடக்கும் பாலியல் குற்றங்களின் எண்ணிக்கை அதிகமாகும். 2011-ஆம் ஆண்டில் இந்தியாவெங்கும் பதிவான பாலியல் வன்புணர்ச்சி வழக்குகளில் 94.2 சதவீத வழக்குகள், அதாவது 22,549 வன்புணர்ச்சி தாக்குதல்கள் பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தெரிந்தவர்களால்தான் நடந்திருப்பதாகத் தேசியக் குற்ற ஆவணத் துறை அறிவித்திருக்கிறது. இந்த 22,549 வழக்குகளில், 269 வன்புணர்ச்சி தாக்குதல்கள் அப்பெண்ணின் தந்தை அல்லது நெருங்கிய உறவினர்களால் நடத்தப்பட்டுள்ளன; 7,835 வன்புணர்ச்சி தாக்குதல்கள் அக்கம்பக்கத்து வீடுகளைச் சேர்ந்த ஆண்களால் நடத்தப்பட்டுள்ளன; 1,560 தாக்குதல்கள் தூரத்து உறவினர்களால் நடத்தப்பட்டுள்ளன. பெண்களுக்கு வீடும், குடும்ப அமைப்பு முறையும் தெருவைவிட அபாயகரமானதாக இருப்பதை இப்புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்த வழக்குகளில் கணவனால் மனைவி மீது நடத்தப்படும் வன்புணர்ச்சித் தாக்குதல்கள் சேர்க்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இந்திய சமூகம் தீண்டாமையை இயல்பானதாகப் பார்ப்பது போலவே, பெண்கள் கணவன்மார்களால் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்படுவதையும், வக்கிரமான முறையில் பாலியல்ரீதியாகத் துன்புறுத்தப்படுவதையும் இயல்பானதாக, கணவனின் உரிமையாக, அவனது ஆதிக்கத்திற்கான அடையாளமாகப் பார்க்கிறது. நவீன முதலாளித்துவ சமூக அமைப்புதான் கணவனின் வன்புணர்ச்சியைக் குற்றமாக வரையறுக்கிறது. ஆனால், இந்தியச் சமூகம் இன்றளவும் நிலப்பிரபுத்துவ பிற்போக்குக் கருத்துக்களால் கட்டுண்டு

கிடப்பதால், இந்தியச் சட்டங்கள் இன்றுவரையும் கணவனின் வன்புணர்ச்சியைக் குற்றமாகக் கருத வில்லை. தற்பொழுதுள்ள சட்டத்தின்படி மனைவி யின் வயது 16-க்குள் இருந்தால் மட்டுமே, மனைவி யின் சம்மதமின்றிக் கணவன் உடலுறவு கொள்வது குற்றமாகும். இது எதார்த்தத்துக்குப் பொருந்தாத உலுத்துப் போன ஒன்று என்பது மட்டுமல்ல, கண வனுக்கு மனைவியைப் பாலியல் சித்திரவதை செய்வ தற்குத் தரப்பட்ட உரிமமும் ஆகும்.

**பணியிடங்களில் பாலியல் தொந்தரவுகள்**

வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டிய பெண்களுக்கோ, அது முன்பின் தெரியாத அபா யங்கள் நிறைந்த, இருட்டான காட்டுக்குள் பயணம் செய்வது போன்றதாகும். பார்வை மூலம்; வார்த்தை கள் மூலம்; உரசுவது, இடிப்பதன் மூலம்; கண்ட இடங்களில் கைகளை மேயவிடுவதன் மூலம் ஒவ் வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் இலட்சக்கணக் கான பெண்கள் பாலியல் தொந்தரவுகளை அனுப வித்து வருகின்றனர். இதற்கெல்லாம் வழக்குப் போட ஆரம்பித்தால், கணிசமான ஆண்கள் சிறைச்சாலைக் குள்தான் இருக்க வேண்டியிருக்கும்.

அழகை ரசிக்கத்தான் இயற்கை கண்களைக் கொடுத்திருக்கிறது என்பது தொடங்கி கூட்ட நெரிசல் மிக்க பேருந்தில் கொஞ்சம் முன்னபின்ன இருக்கத் தான் செய்யும் என்பது வரை பலவாறு இப்பாலியல் சித்திரவதைகள் ஆண்களால் நியாயப்படுத்தப்படுகின் றன. பெண்களுக்குப் பேருந்துகளில் தனி இருக்கை கள் ஒதுக்கப்படுவதை ஏதோ தனது உரிமையைப் பறித்துக்கொண்ட அநியாயம் போலப் பார்ப்பது; படித்த, வேலைக்குப் போகும் பெண்களைத் திமிர் பிடித்தவளாகவும்; குடும்பத்திற்கு இலாயக்கில்லாத வளாகவும்; ஆயிரம்தான் படித்து இருந்தாலும் பெண்கள் புத்திசாலிகள் கிடையாது; அவர்களிடம் பெரிய பொறுப்புகளைக் கொடுக்கக் கூடாது என்ற

இந்தியாவிலேயே அதிக 'வளர்ச்சி'யடைந்த மாநிலமெனக் கூறப்படும் மகாராஷ்டிராவின் நாக்பூர் மாவட்டத்தில் உள்ள சதி அனுசுயா மாதா கோவில்.



வாறு பல்வேறு விதங்களில் பெண்களுக்கு எதிரான பிற்போக்குத்தனமும் ஆணாதிக்கமும் நிறைந்த கருத்துகள் பெரும்பாலான ஆண்களிடம் நிலவி வரு கின்றன.

''சீறிவரும் பாம்பை நம்பு; ஆனால் சிரித்துப் பேசும் பெண்ணை நம்பாதே'' என்பது போன்ற ஆட்டோ வாசகங்கள் படிக்காத, அடித்தட்டு ஆண் களிடம் மட்டும்தான் காணப்படுவதாக எண்ணிக் கொள்வது தவறானது. பார்ப்பனக் கும்பலால் அர சியல் சாணக்கியனாகக் கருதப்படும் சோ நடத்தும் துக்ளக் இதழைப் படித்துப் பாருங்கள்; படித்த, மேல் சாதியைச் சேர்ந்த ஆண்களிடம் பெண்களைப் பற்றி எவ்வளவு கீழ்த்தரமான பிற்போக்கு எண்ணங்களும் கருத்துக்களும் மண்டிக் கிடக்கின்றன என்பது புலப் படும்.

ஒரு பெண் படித்து முடித்து சுயமாகச் சம்பாதிக்கத் தொடங்கினால்கூட, அவளால் சுதந்திரமாகச் செயல் பட்டுவிட முடியாது. குறிப்பாக, அவள் தனது சம் பளத்தைச் செலவு செய்யும் உரிமையை அவளது கண வனே தட்டிப்பறித்து, அவளை முடக்கி விடுகிறான். வேலைக்குப் போகாத பெண்கள் கணவனுக்குப் பணி விடை செய்யும் சம்பளம் வாங்காத வேலைக்காரி என் றால், வேலைக்குச் செல்லும் பெண்களோ கண வனுக்குப் பணிவிடையும் செய்து, அவனிடம் தனது ஊதியத்தையும் வழங்கும் பணங்காய்ச்சி மரமாக இருக்கிறாள்.

வேலைக்குச் செல்லும் பெண்களில் ஏறத்தாழ 17 சதவீதப் பெண்கள் மிகவும் வெளிப்படையான, நேரடியான பாலியல் தொந்தரவுகளுக்கு ஆளாவ தாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதிலும், கூலித் தொழிலாளியாக, வீட்டுப் பணிப்பெண்ணாக, சிறுதொழில் நிறுவனங்களில் பணியாற்றும் பெண் களின் நிலைமைதான் மிகவும் அபாயகரமானதாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இப்படி பணியிடங் களில் பாலியல் தொந்தரவுக்கு ஆளாகும் பெண்களில் ஏறத்தாழ 20 சதவீதப் பெண்கள் ஆண் துணையின்றித் தனியாளாக நின்று குடும்பத்தை நடத்திச் செல்லும் பொறுப்பில் இருப்பவர்கள் என்றும், அப்பெண்களின் இக்கட்டான நிலையை மேலதிகாரிகள்/சக ஊழி யர்கள் தமது பாலியல் வக்கிரங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதும் அம்பல மாகியிருக்கிறது.

இக்குற்றத்தைத் தடுக்க உருவாக்கப்பட்டிருக்கும் சட்டமென்பது சோளக்காட்டு பொம்மையைவிடக் கேவலமானது. தொழிற்சாலைகளிலும், அலுவலகங் களிலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் இப்பிரச் சினையை விசாரித்துத் தண்டிப்பதற்கான அமைப் புகளே கிடையாது. எந்தப் பெண் தொழிலாளியாவது புகார் கொடுக்க முன்வந்தால், வேலை பறிக்கப்படும் அபாயம் மட்டுமல்ல, அவளது கணவனும் இதைச் சரியாகப் புரிந்து கொண்டு, அந்தப் பெண்ணுக்கு ஆதரவாக நிற்பானா என்பதே சந்தேகத்திற்குரியது

தான். பணியிடங்களில் நடக்கும் பாலியல் சித்திர வதைகள் தொடர்பான புகார்களில், புகார் கொடுக் கும் பெண்ணின் பெயர் தரப்படுவதில்லை என் பது வேலைக்குச் செல் லும் பெண்களின் கையறு நிலையைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

> தற்பொழுதுள்ள சட்டத்தின்படி மனைவியின் வயது 16-க்குள் இருந்தால் மட்டுமே, மனைவியின் சம்மதமின்றிக் கணவன் உடலுறவு கொள்வது குற்றமாகும். இது எதார்த்தத்துக்குப் பொருந்தாத உலுத்துப் போன ஒன்று என்பது மட்டுமல்ல, கணவனுக்கு மனைவியைப் பாலியல் சித்திரவதை செய்வதற்குத் தரப்பட்ட உரிமமும் ஆகும்.

**சாதி-மதம்-அரசு**

காதல்-கலப்புத் திருமணங்களைத் தடுப்பது என்ற பெயரில் ஆதிக்க சாதி சங்கங்கள் தமது சாதிப் பெண் களின் மீதான கட்டுப்பாடுகளை மேலும் மேலும் இறுக்கும் நிலைமை தற்பொழுது இந்தியாவெங்கும் எழுந்துள்ளது. ‘‘பெண்கள் கைபேசிகளைப் பயன் படுத்த அனுமதிக்கக் கூடாது; பெண்களின் திருமணத் திற்கு அவர்களின் பெற்றோர்களின் சம்மதத்தைக் கட் டாயமாக்க வேண்டும்’’ என்றவாறெல்லாம் ராமதாசு உள்ளிட்ட ஆதிக்க சாதிவெறியர்களும், வட இந்தியா வைச் சேர்ந்த ‘‘காப்’’ பஞ்சாயத்துகளும் அறிவுக்குப் பொருந்தாத புதுப்புது கட்டுப்பாடுகளைப் பெண்கள் மீது திணித்து வருகிறார்கள்.

அரசின் புள்ளிவிவரங்களின்படியே ஒவ்வொரு நாளும் மூன்று தாழ்த்தப்பட்ட பெண்கள் பாலியல் வன்புணர்ச்சிக்கு இரையாகிறார்கள். இப்புள்ளிவிவர மும் பதிவான வழக்கு விவரங்களின் அடிப்படையை வைத்துக் கூறப்படுவதால், இது உண்மைக்கு அருகில் கூட வரவில்லை. தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு எதி ராக ஆதிக்க சாதிவெறியர்கள் நடத்திவரும் அட்டூழி யங்களை, ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த பெண்கள்கூட ஆதரிப்பதும் கண்டும் காணாமல் நடந்துகொள்வதும் தான் இதில் வெட்கக்கேடானது.

இந்து மதவெறிக் கும்பல் குஜராத் படுகொலை களின்பொழுது நடத்திய பாலியல் வன்புணர்ச்சி வக் கிரங்களும் படுகொலைகளும்; ஒரிசாவின் டாங்ஸ் மாவட்டத்தில் கிறித்தவ மதத்துக்கு மாறிய பழங்குடி யினப் பெண்களுக்கு எதிராக நடத்திய அட்டூழியங் களும்; சதி போன்ற பிற்போக்குத்தனங்களை அக்கும் பல் இன்றும்கூட வெளிப்படையாக ஆதரித்து நிற் பதும், ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட இந்து மதவெறி அமைப்புகள் அனைத்து மதங்களையும் சேர்ந்த பெண் களுக்கும் எதிரானது என்பது நிரூபணமாகியிருக் கிறது. ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு எதிராக முசுலீம் மத வெறி அமைப்புகளும், மத அடிப்படைவாதமும் வளர்ந்து வருவது முசுலீம் பெண்களை இருதலைக் கொள்ளி எறும்பு நிலைக்குத்தான் தள்ளியுள்ளன.

பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை, மத வெறி மற்றும் ஆதிக்க சாதிவெறி அமைப்புகளின் வன் முறை- பிற்போக்குத்தனமான கட்டுப்பாடுகள் ஆகிய வற்றிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் உறுப்பாகத் தன்னை முன்னிறுத்தும் இந்திய அரசு அமைப்போ, சொல்லிலும் செயலிலும் இந்தக் கும்பலுக்கு ஆதரவா கவே நடந்து வருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், தனது கணவனிடமிருந்து ஜீவா னாம்ச உரிமை கோரி ஷா பானு என்ற முசுலீம் தாய் தொடுத்த வழக்கில் முசுலீம் அடிப்படைவாதிகளுக்கு ஆதரவாகவும், இராசஸ்தானில் பன்வாரி தேவி என்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த சமூக ஊழியர் கும்பல் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப் பட்ட வழக்கில் ஆதிக்க சாதிவெறியர்களுக்கு ஆதர வாகவும்; ஒவ்வொரு இந்து மதவெறிக் கலவரத்தின் பொழுதும் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு அனுசரணை யாகவும் இந்திய அரசு அமைப்புகள் நடந்து வந்திருப் பதைக் குறிப்பிடலாம்.

இப்படி பிற்போக்கு சக்திகளுக்கு ஆதரவாக அரசு நடந்து கொள்வது ஒருபுறமிருக்க, அதனின் கொள்கை கள், திட்டங்கள் என அரசின் நடைமுறையும் பார்வை யும் பெண்களை இரண்டாம் தர குடிமகளாகத்தான் கருதுகின்றன. பெண்களுக்கு எதிராக நடந்து வரும் பாலியல் வன்புணர்ச்சி உள்ளிட்ட தாக்குதல்களை அரசு உறுப்புகள் அணுகும் முறையிலேயே, அவற்றை விசாரிக்கும் முறையிலேயே, அரசின் ஆணாதிக்கப் பார்வை அப்பட்டமாக வெளிப்பட்டு வருகிறது. இவை அனைத்திற்கும் மேலாக போலீசும் இராணுவமும்தான் பெண்களின் உரிமைக்கும், சுதந்தி ரத்திற்கும், கண்ணியத்திற்கும் மிகப்பெரும் அச்சுறுத் தலாக இருந்து வருகின்றன.

•••

**இ**ன்றைய இந்திய சமூகம் என்பது மேற்கத்திய சமூகம் போன்று ஜனநாயகப் புரட்சி, ஜனநாயகத்திற் கான அரசியல் போராட்டங்களின் வழியாகக் கட்ட மைக்கப்பட்டதல்ல. மாறாக, சாதி, மத, ஆணாதிக்கக் கருத்துக்கள் நிறைந்த மத்தியகால நிலப்பிரபுத்துவ அமைப்பிற்கு அக்கம்பக்கமாக முதலாளித்துவப் பொருளாதார உற்பத்தி முறையும் அதற்குரிய அரசி யல்-பண்பாட்டு நிறுவனங்களும் இறக்குமதி செய்து திணிக்கப்பட்டன. இந்தக் கலப்பானது பெண்களுக்கு எந்தவிதமான விடுதலையையும், பாதுகாப்பையும் பெற்றுத் தந்துவிடவில்லை.

மாறாக, தனியார்மயம்-தாராளமயம் பெண்களைச் சந்தைப் பொருளாக மாற்றியிருக்கும் பாலியல் வக்

கிரம் ஒருபுறம்; ஏற்கெனவே நிலவிவரும் சாதி-மத ஆதிக்கம் நிறைந்த பிற்போக்கு சமூகத்தின் அடக்குமுறை மறுபுறம் என்ற இரட்டை நுகத்தடியைப் பெண்ணினத்தின் மீது சுமத்தியிருக்கிறது. ஒரு புறம் பாலியல் சுதந்திரம் என்ற வரம்பற்ற பாலியல் உறவு; இன்னொருபுறம் கற்பு நெறி தவறாமை, குடும்ப விளக்காகப் பெண்கள் திகழ வேண்டிய மத்தியகால ஆணாதிக்கப் பண்பாடு என்ற இரட்டைக் குழல் துப்பாக்கி பெண்களை நோக்கி நிறுத்தப்படுகிறது. மத்தியகால பிற்போக்குத்தனம் பெண்களின் மீதான ஒடுக்குமுறையின், பாலியல் தாக்குதலின் ஆணி வேராக இருக்கிறதென்றால், அதன் மீது திணிக்கப்பட்டுள்ள உலகமயம் இத்தாக்குதல்களை முன்னெப்போதும் காணாத அளவில் தீவிரப்படுத்தியிருக்கிறது.




> **மத்தியகால பிற்போக்குத்தனம் பெண்களின் மீதான ஒடுக்குமுறையின், பாலியல் தாக்குதலின் ஆணிவேராக இருக்கிறதென்றால், அதன் மீது திணிக்கப்பட்டுள்ள உலகமயம் இத்தாக்குதல்களை முன்னெப்போதும் காணாத அளவில் தீவிரப்படுத்தியிருக்கிறது.**


மேல்சாதி, மேல்தட்டில் உள்ள பெண்கள் மீது இந்த இரண்டு நுகத்தடிகளும் சம அளவிலோ அல்லது ஒன்றை விட மற்றொன்று கூடுதல் குறைவாகவோ சுமத்தப்படுகிறது. அதேசமயம் சமூகத்தின் கீழ்த்தட்டில், உழைக்கும் வர்க்க குடும்பங்களைச் சேர்ந்த, பார்ப்பனமயமாகாத குடும்பப் பின்னணி கொண்ட பெண்கள், ஆதிக்க சாதி மற்றும் பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களைவிட, ஒப்பீட்டளவில் சுதந்திரமாக வாழ்க்கையை நடத்தி வருவது கண்கூடு. இந்த உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் தங்கள் கழுத்தில் கற்பு நெறியைப் பெரும் சுமையாக மாட்டிக் கொள்வதில்லை. கணவனே கண்கண்ட தெய்வம் என இவர்கள் வாழ்வதில்லை; அறுத்துக் கட்டிக் கொள்வதோ, மறுமணமோ அல்லது தனியாகவே நின்று குடும்பத்தை நடத்திச் செல்வதோ - இவை எதுவுமே இவர்கள் முன் மலைக்க வைக்கும் கேள்வியாக நிற்பதில்லை. அதேசமயம், தங்களைக் கவர்ச்சிப் பாவையாகக் காட்டிக் கொள்ள வேண்டிய அவசியமும் இவர்களுக்குக் கிடையாது.

நடுத்தர, மேல் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் படித்திருந்தபோதும், வேலைக்குச் சென்றாலும், அவர்களது முதலாளித்துவ, பார்ப்பனமயமான வாழ்க்கை முறையும்; அதன் காரணமாக அவர்களது சிந்தனையில் ஊறிப்போயுள்ள பெண்ணடிமைத்தனம், கற்பு நெறி போன்றவையும் - என்னதான் பெண் படித்திருந்தாலும் வேலைக்குச் சென்றாலும் ஒரு ஆணின் பாதுகாப்பில்தான் பெண் வாழ முடியும் என்ற அடிமைத்தனம் அவர்களைச் சுதந்திரமாக இயங்க விடுவதில்லை. ஆணாதிக்கம் மற்றும் அதன் வக்கிரத்தின் முன் மேல்சாதி, மேல்தட்டைச் சேர்ந்த பெண்கள் மண்டியிட்டுக் கிடப்பதன் பின்னணி இதுதான்.

எனவே, பெண் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை பெண் விடுதலையை முழுமையாகப் பெற்றுத் தந்துவிடாது. மாறாக, மேலே நாம் குறிப்பிட்டுள்ள இந்த இரண்டு நுகத்தடிகளும் அடித்து நொறுக்கப்படுவதுதான் இப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வாகும். இந்த இரண்டு நுகத்தடிகளையும் அடித்து நொறுக்குவது சாதாரணமானதல்ல. அதற்கு இச்சமூகத்தையே புரட்டிப் போடக் கூடிய போராட்டங்களை, குடும்பம் உள்ளிட்டு சமூகத்தின் சகல அரங்குகளிலும் ஜனநாயகத்தைக் கொண்டுவரக்கூடிய போராட்டங்களைக் கட்டியமைக்க வேண்டும். அப்போராட்டம் இந்த இரண்டு நுகத்தடிகளையும் காத்து வருகின்ற இன்றைய சமூக-பொருளாதார-அரசியல் அமைப்பை அடியோடு மாற்றி அமைப்பதாக இருக்க வேண்டும்.

இப்புரட்சிகரமான மாற்றத்திற்குப் பதிலாக, இச்சமூக அமைப்பிற்குள்ளேயே பெண்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் சீர்திருத்தங்களைக் கோருவது - பெண்களுக்கு நாடாளுமன்றத்தில் 33 சதவீத இடஒதுக்கீட்டை அமல்படுத்துவது, பெண்களுக்குப் பாதுகாப்புத் தரக்கூடிய சட்டங்களை வலுப்படுத்துவது, பாலியல் குற்றங்களை விசாரிக்கும் போலீசு, நீதிமன்றம் போன்ற அமைப்புகளைச் சீர்திருத்துவது போன்றவை உடனடித் தீர்வுகளாக முதலாளித்துவ அறிவுஜீவிகளாலும், அரசியல் கட்சிகளாலும், பெண்ணியவாதிகளாலும் முன்வைக்கப்படுகின்றன.

வரதட்சணைத் தடைச் சட்டம் எப்படி வரதட்சணைக் கொலைகளைத் தடுக்கவில்லையோ, வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் எப்படி தீண்டாமையை ஒழிக்கவில்லையோ, அதுபோலவே இச்சீர்திருத்தங்களும் பெண்ணடிமைத்தனத்தை, பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளை அறவே ஒழித்துக் கட்டிவிடாது; மாறாக, புண்ணுக்குப் புனுகு தடவிவிடுவதாகவே அமையக்கூடும்.

● திப்பு

## தனியார்மயம் - தாராளமயம்:

# வன்முறை, வக்கிரப் பண்பாட்டை வளர்த்துவிடும் விஷக்கிருமி!

**உலகமயம் பெண்கள் மீது உழைப்புச் சுரண்டல், பாலியல் சுரண்டல் என்ற இரண்டு விலங்குகளைப் பூட்டியிருக்கிறது.**

டெல்லியில் துணை மருத்துவ மாணவி ஓடும் பேருந்தில் சில கிரிமினல்களால் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு, கொடூரமாகத் தாக்கப்பட்டு உயிரிழந்த நிகழ்வும், அதற்கு எதிராக வெடித்த போராட்டமும் தோற்றுவித்திருக்கும் விவாதங்கள் பல தரப்பட்டவை. ஆனால், அநேகமாக இந்த விவாதங்கள் அனைத்திலும் சரடு போல ஒரு கருத்து இழையோடுகிறது.

''தனியார்மய, தாராளமயக் கொள்கைகள் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பல்வேறு வாய்ப்புகளை வழங்கியுள்ளன. இதுகாறும் அடுப்படியில் கட்டுண்டிருந்த பெண்களுக்கும்கூடச் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் வழங்கியுள்ளது; ஆலைகள் முதல் ஐ.டி. துறை வரையிலான பல வேலைகளுக்குப் பெண்கள் போகத் தொடங்கிவிட்டார்கள். இரவுப் பணிகளுக்குப் போகக்கூடாது என்ற மனத்தடைகளையெல்லாம் களைந்து விட்டு, துணிச்சலாக இரவு நேரங்களில் வேலைக்குப் போகிறார்கள். திரைப்படங்களுக்குப் போகிறார்கள். இவ்வாறு தனியார்மயக் கொள்கைகளுக்குப் பின்னர் ஏற்பட்டு வரும் இந்த 'முன்னேற்றம்' டெல்லி சம்பவம் போன்றவற்றினால் அச்சுறுத்தப்படுகின்றது.''

''இது போன்ற குற்றங்களில் ஈடுபடுகின்ற கிரிமினல் சக்திகள், பெண்களின் முன்னேற்றத்திற்கு மட்டுமின்றி, நாட்டின் முன்னேற்றத்திற்கேகூடத் தடைக்கற்கள்தான். எனவே, பெண்களையும் அவர்களது சுதந்திரத்தையும் பாதுகாக்கின்ற வகையில் சட்டங்களை இன்னும் கடுமையாக்க வேண்டும்; இச்செயல்களில் ஈடுபடும் கிரிமினல்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்'' என்ற கருத்து நடுத்தர வர்க்கம் முதல் மேல்தட்டு வரையுள்ள எல்லா அறிவுஜீவிகள் மற்றும் ஊடகங்களின் பொதுவான கருத்தாகப் பரவி நிற்கிறது.

மறுகாலனியாக்க கொள்கைகள் கொண்டு வரும் முன்னேற்றத்தை 'இலஞ்ச - ஊழல்' தடுக்கிறது, அதிகார வர்க்கத்தில் அரசியல் குறுக்கீடு தடுக்கிறது, திறமையற்ற அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தடுக்கிறார்கள் என்றெல்லாம் கருதுபவர்கள், நாட்டின் முன்னேற்றத்துக்கு தடையாக அவர்கள் கருதுவனவற்றின் பட்டியலில் இத்தகைய பாலியல் வல்லுறவுக் குற்றங்களையும் சேர்த்துக் கொள்கிறார்கள். பொதுவாக முதலாளித்துவம் ஜனநாயகத்தைக் கொண்டுவரும் என்பதைப் போல, தனியார்மய - தாராளமயக் கொள்கைகளும் ஜனநாயகத்தைக் கொண்டு வந்து விடும் என்ற மயக்கம்தான் மேற்கண்ட கருத்தில் பிரதிபலிக்கிறது.

நாட்டின் முன்னேற்றத்திற்குச் சான்றாக வானளாவிய கட்டிடங்களையும், ஷாப்பிங் மால்களையும், ஐ.டி. நிறுவனங்களையும், விதவிதமான கார்களையும், ஆறு வழிச் சாலைகளையும் காட்டுவது போல, பெண்களின் முன்னேற்றத்திற்குச் சான்றாக பெப்சி நிறுவனத்தின் தலைவர் இந்திரா நூயி, டாஃபே நிறுவன இயக்குநர் மல்லிகா சீனிவாசன், பயோகானின் கிரன் மஜூம்தார் போன்றோரைக் காட்டி, இவர்களைப் போல இன்று பல பெண்கள் தொழில்முனைவோராக, நிர்வாகியாக, ஆராய்ச்சியாளராக, கலைஞராக, அரசியல்வாதியாக பொதுவெளியில் உயரும் வாய்ப்பை உலகமயம் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாக ஊடகங்கள் தொடர்ந்து சித்தரித்து வருகின்றன.

''சுமங்கலித் திட்டத்தின்'' கீழ் கோயம்புத்தூர் மில்களில் பணியாற்றும் இளம் பெண்கள்: தாராளமயத்தின் நவீன கொத்தடிமைகள்.



இவர்கள் கூறுவது போல் தாராளமயமும் உலகமயமும் பெண்களுக்குச் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் உண்மையிலேயே வழங்கியுள்ளதா?

இந்திய சமூகத்தில் பெண்கள் குடும்ப பராமரிப்பை செய்து கொண்டே, விவசாயம், கட்டுமானத் தொழில்களில் தங்களது உழைப்பைச் செலுத்தி வந்திருப்பது காலம்காலமாக நடந்து வந்திருக்கிறது; எனினும், புதிய பொருளாதாரக் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டதற்குப் பிந்தைய காலத்தில் பல்வேறு துறைகளில் பெண் உழைப்பாளர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை வேகமாகப் பெருகிவருகிறது என்பது உண்மையே. இதற்குக் காரணமென்ன என்பது தான் கேள்வியே.



"கடுமையான விலைவாசி உயர்வும் நுகர்வுக் கலாச்சாரத்தினால் ஏற்பட்ட பொருளாதாரத் தேவைகளும், கணவனின் ஒற்றை வருமானத்தில் குடும்பத்தைப் பராமரிப்பதை இயலாததாக்கியது. இதனால் நடுத்தர வர்க்கத்திலிருந்து உழைக்கும் மக்கள் வரை அனைத்துத் தரப்பு பெண்களும் தங்கள் தகுதிக்கேற்ற வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர்."

முதற்காரணமாக கடந்த 15 ஆண்டுகளில் தனியார்மயக் கொள்கைகளின் விளைவாக மிகக் கடுமையாக உயர்ந்து வரும் விலைவாசி, அடிப்படை உழைக்கும் வர்க்கத்தினர் முதல் நடுத்தர வர்க்கத்தினர் வரையிலானோரின் வாழ்க்கைத் தரத்தை வெகுவேகமாக அரித்து வருகிறது. வீட்டு வாடகை, மளிகைப் பொருட்கள், பால், மின்சாரம், போக்குவரத்துச் செலவுகள் போன்ற வழமையான செலவுகள் அதிகரித்திருக்கின்ற அதே நேரத்தில், கல்வி-மருத்துவத் துறைகளின் தனியார் மயத்தின் காரணமாகவும், அவர்களது கட்டணக் கொள்ளை காரணமாகவும் பல குடும்பங்கள் கடனாளி ஆக்கப்பட்டனர். இந்தக் கடுமையான விலைவாசி உயர்வும் நுகர்வுக் கலாச்சாரத்தினால் ஏற்பட்ட பொருளாதாரத் தேவைகளும், கணவனின் ஒற்றை வருமானத்தில் குடும்பத்தைப் பராமரிப்பதை இயலாததாக்கியது. இதனால் நடுத்தர வர்க்கத்திலிருந்து உழைக்கும் மக்கள் வரை அனைத்துத் தரப்பு பெண்களும் தங்கள் தகுதிக்கேற்ற வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர்.

குறைவான கூலி, சங்கமாகத் திரளமாட்டார்கள் போன்ற காரணங்களால் புதியவகைப்பட்ட வேலை வாய்ப்புகள் பெண்களுக்கென்றே வழங்கப்பட்டுள்ளன. தன்னார்வக் குழுக்களின் தீவிர பிரச்சாரத்தால் உணவு விடுதிகள், பட்டுநெசவு போன்றவற்றிலிருந்து அகற்றப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் வேலைகளும் பெண்களுக்குச் சென்றுள்ளன. விவசாயத்தின் வீழ்ச்சி காரணமாக, நகர்ப்புறங்களில் கட்டுமான வேலைகளுக்கு வரும் விவசாயக் குடும்பத்தின் பெண்கள், வீடற்றவர்களாக தெருவோரத்தையே வீடாக மாற்றி, அங்கேயே குளித்து, சமைத்து, குழந்தைகளைப் பராமரித்து வேலைக்கும் செல்லவேண்டியவர்களாக உள்ளனர்.

பஞ்சாலைகளில் ஊதிய உயர்வு. போனஸ் போன்ற கோரிக்கைகளுக்காகப் போராடியதால் ஆண் தொழிலாளர்களைத் துரத்திவிட்டு, அவ்வேலைகளில் பெண்களை அமர்த்தி 10 முதல் 12 மணிநேரம் வரை சுரண்டுகின்றனர். நோக்கியா போன்ற மின்னணுத் தொழிலகங்களில் ஒப்பந்தக் கூலிகளாக, நகரங்களின் ஜவுளிக் கடல்களில் விற்பனையாளர்களாக, மென்பொருள் நிறுவனங்களில் துப்புரவு, எடுபிடி வேலைகளிலும், பாதுகாப்புப் பணிகளிலும், தொழில் தேர்ச்சி பெற்ற வேலைகளிலும், பெண்கள் பலர் வேலைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தனியார் மருத்துவமனைகளின் பெண் நர்சுகள் ஊர் விட்டு ஊர் சென்று, இரவு நேரத்திலும் உழைப்பில் ஈடுபடுகின்றனர். கால் சென்டர்களில் இரவு முழுக்க அமெரிக்காவின் வங்கிகளுக்காவும், மருத்துவமனைகளுக்காகவும் பெண்கள் உழைக்கின்றனர். ஆயத்த ஆடை (கார்மென்ட்ஸ்) தொழிலாளர்களாக இன்று பெண்களே அதிக அளவில் வேலை செய்கின்றனர். ஒரே விதமான பட்டுச் சேலைகளால் அலங்கரிக்கப்பட்ட குமரிப் பெண்கள், பணக்காரர்களின் திருமண வரவேற்பில் பன்னீர் தெளிப்பது முதல் பந்தியில் தண்ணீர் வழங்குவதுவரை ஈடுபட்டு நள்ளிரவில் வீடு திரும்புகின்றனர்.

இவ்வாறு பல்வேறு துறைகளில் தங்கள் உழைப்பை வழங்கும் இப்பெண்கள் வீட்டின் சமையலையும், குழந்தைப் பராமரிப்பையும் செய்து முடித்து விட்டு நிறுவன வேலைகளுக்கு விரைகின்றனர். கைக்குழந்தைகளை அண்டை வீட்டாரிடமோ, காப்பகத்திலோ விட்டு விட்டு 10 மணி முதல் 12 மணிநேரம் வேலை செய்து விட்டு, குழந்தைகளை அவசரமாகக் கொஞ்சிவிட்டு அடுத்த நாளுக்கான சமையல் வேலையை மீண்டும்

தொடங்குகின்றனர். இதுதான் தனியார்மய - தாராள மயக் கொள்கைகளின் அமலாக்கத்துக்குப் பின்னர் பெண்களின் வாழ்க்கையில் ஏற்பட்டு வரும் மாற்றம்.

இதுவரை உற்பத்தியில் ஈடுபடாதவர்களாக இருந்த பெண்களைத் தற்போது பெருமளவில் 'உற்பத்தியில் ஈடுபடுத்தியிருப்பதாக' , பெண்களின் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றம் பற்றி ஆளும் வர்க்கங்கள் பெருமையுடன் கூறுகின்றன. பெண்கள் ஏற்கெனவே தத்தம்குடும்பங்களில் செலுத்தி வரும் உழைப்பின் மூலம் பராமரிக்கப்படுகின்ற ஆண்கள் மற்றும் அக்குடும்பத்தின் வாரிசுகள்தான் முதலாளித்துவத்தின் உற்பத்திக்கு உழைக்கிறார்கள். எனினும், தமது இலாபத்துக்குப் பயன்படுகின்ற, பெண்களின் இந்த மறைமுக உழைப்பை, முதலாளித்துவப் பொருளாதாரம் மதிப்பதில்லை. அதாவது, குடும்ப உழைப்பு மற்றும் புதிய உழைப்பாளிகளை உருவாக்கித் தரும் மறு உற்பத்தி, அவர்களுடைய பராமரிப்பு ஆகியவற்றுக்கு ஒரு பொருளாதார மதிப்பினை நிர்ணயித்து, அதனை நிகர உள்நாட்டு உற்பத்தியை நிர்ணயிக்கின்ற கணக்கில் சேர்ப்பதில்லை.

ஒரு உணவு விடுதியின் சமையல்காரர், குழந்தைகள் காப்பகத்தில் வேலை பார்க்கும் பெண், சலவைத் தொழிலாளி ஆகியோரது உழைப்பு கூலிக்கு விற்கப்படுவதால் அதற்குப் பொருளாதார மதிப்பு உள்ளதாகக் கணக்கில் கொள்ளும் முதலாளித்துவம், பெண்களுடைய குடும்ப உழைப்பின் மதிப்பை நிராகரிப்பதன் மூலம், அவர்கள் இதுவரை உழைப்பிலேயே ஈடுபடாதவர்கள் போலவும், முதன்முறையாகத் தற்போது உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது போலவுமான தோற்றத்தை உருவாக்குகிறது. உண்மையில் பெண்களின் குடும்ப உழைப்பு மூலம் தான் பெறுகின்ற பொருளாதார ஆதாயத்தைச் சுரண்டிக் கொண்டே, கூடுதலாக, குடும்பத்தின் பொருளாதாரத் தேவைக்காக, உற்பத்தி சார்ந்த உழைப்பைக் கோரும் வேலைகளுக்குள் இழுத்திருக்கிறது. தனியார்மயக் கொள்கை, பெண்களுக்கு வழங்கியுள்ளதாக கூறப்படும் 'வேலைவாய்ப்பு' முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இரட்டைச் சுரண்டலுக்கு பெண்களை ஆட்படுத்தியிருக்கிறது என்பதே உண்மை.

●●●

பெண்களின் மீதான உழைப்புச் சுரண்டலை அதிகமாக்கியிருப்பது மட்டுமல்லாமல், மறுகாலனியாக்க கொள்கைகள் அவர்களுடைய உடலையும் முன்னெப்போதும் இல்லாத வடிவங்களிலெல்லாம் விற்பனைப் பண்டமாக்கியிருக்கின்றன.

பத்தாண்டுகளுக்கு முன்னர் யாரும் நினைத்துக்கூட பார்த்திராத வேலைகளிலும் பெண்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர் .பெங்களூரு சாராய விடுதிகளில் மதுவைக் கலக்கித் தரும் ''பார் டென்டர்'' களாகவும், 20/20 கிரிக்கெட் போட்டிகளில் கவர்ச்சி உடை அணிந்து ரசிகர்களை உற்சாகப்படுத்தும் ''சியர் கேர்ல்ஸ்'' களாகவும் பெண்கள் இறக்கிவிடப்பட்டுள்ளனர். விரைவில், அமெரிக்காவின் பாலியல் வக்கிர ''பிளேபாய்'' பத்திரிக்கை குழுமம், இந்தியாவில் தொடங்கவிருக்கும் ''பிளேபாய் கிளப்புகளில்'' ஆண்களுக்கு மது ஊற்றிக் கொடுப்பது, சிகெரெட் பற்றவைப்பது முதலான ''சேவை''களைச் செய்கின்ற வேலைகளில் இந்தியப் பெண்களை நியமிக்கவுள்ளது.

பெண்களைப் போகப்பொருளாகக் கருதும் ஆணாதிக்கச் சிந்தனையைப் பயன்படுத்திக் கொண்டு, அவர்களை ஆண்கள் நுகரத்தக்க பண்டமாகச் சந்தைப்படுத்தியிருக்கின்றது மறுகாலனியாக்க கொள்கை. அதே நேரத்தில், அழகுணர்ச்சி என்ற பெயரில், தம்மை ஆண்களின் நுகர்வுக்கான பண்டமாகத் தயாரித்துக் கொள்வதையே வாழ்க்கை இலட்சியமாகக் கொள்ளும் அளவுக்கு பெண்களின் மனோபாவத்தையும் மாற்றி அமைத்திருக்கிறது.

அழகிப் போட்டிகளை அறிமுகம் செய்து, ஐஸ்வர்யா ராய், சுஷ்மிதா சென் - என அடுத்தடுத்து இந்தியப் பெண்களை உலக அழகிகளாகத் தேர்ந்தெடுத்து, அவர்களையே அழகு சாதனப் பொருட்களின் ''பிராண்ட் அம்பாசிடர்''களாக்கியதன் மூலம், அவர்களைப் போல மெலிந்த சிவப்பான உடல்வாகுவைப் பெறுவதையே மாபெரும் இலட்சியமாகக் கொள்ளுமாறு பெண்களிடம் தொடர் மூளைச்சலவை செய்யப்படுகிறது. இன்று இதன் விளைவாக, இரண்டுவேளை உணவுக்கு உத்திரவாதமில்லாத குக்கிராமங்கள் வரை சிவப்பழகு கிரீம்கள் உள்ளிட்ட பல்வேறு முகப்பூச்சு, அழகு சாதனப் பொருட்கள் எட்டியுள்ளன.

தெருவெங்கும் அழகு நிலையங்கள் முளைத்துள்ளன. அழகு நிலையங்களை எட்டிப்பார்க்காத பெண்களெல்லாம் 'பத்தாம் பசலிகள்', 'கட்டுப்பெட்டிகள்' போன்ற 'கருத்து'களைப் பொதுப்புத்தியில் உறைய வைத்து, ஆண்

வீட்டு வேலை செய்யும் பெண்களையும் பாலியல் வன்முறைச் சட்டத்தின் கீழ் கொண்டுவரக் கோரி சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)






> ***மெலிந்த சிவப்பான உடல்வாகுவைப் பெறுவதையே மாபெரும் இலட்சியமாகக் கொள்ளுமாறு பெண்களிடம் தொடர் மூளைச்சலவை செய்யப்படுகிறது. இன்று இதன் விளைவாக, இரண்டுவேளை உணவுக்கு உத்திரவாதமில்லாத குக்கிராமங்கள் வரை சிவப்பழகு கிரீம்கள் உள்ளிட்ட பல்வேறு முகப்பூச்சு, அழகுசாதனப் பொருட்கள் எட்டியுள்ளன.***

டொன்றுக்கு ரூ.18 ஆயிரம் கோடிக்கும் மேல் அழகுசாதனப் பொருட்களைச் சந்தையில் விற்று, வீட்டின் பொருளாதாரத் தேவைக்காக வெளியில் வேலைக்கு வந்த பெண்களின் சொற்ப வருமானத்தையும் வழிப்பறி செய்துகொண்டிருக்கிறது, தாராளமயம்.

இத்துடன் சினிமா குத்தாட்டத்திற்கென்றே வடிவமைக்கப்படும் ஆபாசமான உடைகளை நவீனம் எனக் கூறி சிறுமிகளுக்குக்கூட அறிமுகம் செய்துள்ளனர். எவ்வித நெறிமுறைகளும் இனி இருக்கக் கூடாது என்பதை ஒரு மோஸ்தராகவே உருவாக்கி, அதற்கென்றே ஆபாசமான 'பேஷன் பரேட்' களை நடத்துகின்றனர். அநாகரீகம் என்று இதுவரை கருதி வந்த அனைத்தையும் தலைகீழாக்கும் செயலை ஒவ்வொரு வீட்டின் உள்ளேயும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வழியாகப் புகுத்தியுள்ளனர். எழுபது-எண்பதுகளில் தடைசெய்யப்பட்ட ரிக்கார்டு டான்ஸ் எனும் பாலுணர்வு வெறி நடனங்களைத் தொலைக்காட்சிகளைப் பார்த்து தம் பிள்ளைகள் ஆடுவதைக் கண்டு பெருமைப்படும் அளவுக்கு பெற்றோர்கள் மூளைச்சலவைக்கு ஆளாகியுள்ளனர்.

இதன் எதிரொலியாக, மனைவி என்பவள் எல்லா விதத்திலும் தனக்குக் கட்டுப்பட்டவளாகவும், மாடல் அழகிகளைப் போலத் தன்னை அலங்கரித்துக் கொண்டு 'கண்ணுக்குக் குளுமையாக'க் காட்சியளிப்பவளாகவும் இருக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தை ஆண்களிடம் ஊடகங்கள் உருவாக்கியுள்ளன.

பாய் பிரண்ட்ஸ் இல்லாத இளம் பெண்கள், கல்லூரிகளிலும் பணியிடங்களிலும் '' நீ வேஸ்ட்'' என்று சக பெண்களால் ஏளனப்படுத்தப்படுகின்றனர். நகர்ப்புறங்களில் டேட்டிங் செல்வது, ரிசார்ட்டுகள், டிஸ்கோத்தேகளுக்குச் சென்று வார இறுதியைக் கொண்டாடுவது போன்ற கலாச்சாரங்கள் பெண்களைப் பலிகடாவாக்குகின்றன. பண்பலை வானொலியில் பெண்மருத்துவ திலகங்கள், பாடல்களுக்கு நடுவே ''திருமணம் ஆகாத பெண்கள், பாதுகாப்பாக இருந்துக்கணும். ஆணுறை, கருத்தடை மாத்திரைகள் எல்லாம் இன்றைக்கு எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன'' என ஆலோசனை வழங்குகின்றன.

''இந்தியா டுடே'' ''அவுட்லுக்''உள்ளிட்டுப் பல முதலாளித்துவ இதழ்கள் இந்தப் பாலியல் 'புரட்சிக்கு' தயங்கும் பெண்களை ''இன்னமும் இப்படி ஹைதர்காலத்துப் பெண்களாக இருக்கிறீர்களே!'' எனக் கடிந்துகொண்டு, பெரும்பாலான இந்தியப் பெண்கள் சோரம் போவதாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சர்வே எடுத்து இக்கலாச்சார 'புரட்சியை'த் துரிதப்படுத்தி 'முன்னேற'த் தூண்டுகின்றன. ஊடகங்கள்தான் இப்படி என்றால், அரசோ, அந்நியச்செலாவணிக்காக, கோவா, மாமல்லபுரம் போன்ற சுற்றுலாத் தலங்களில், வெளிநாட்டுப் பயணிகள் பாலியல் வக்கிரங்களைத் தணித்துக் கொள்வதற்காக, சிறுவர்-சிறுமிகளைப் பலிகடாவாக்குவதற்குத் துணைபோகிறது. இக்கொடூரம் பலமுறை அம்பலமான பின்னரும், அரசு இதுவரை இதனைக் கண்டுகொள்ளாமல், மறைமுகமாக ஆதரித்து வருகிறது.

ஆண்களின் நுகர்வுக்கான பண்டமாகப் பெண்களைச் சித்தரிப்பதும், மாற்றுவதும் எந்த அளவுக்கு நடந்திருக்கிறதோ, அந்த அளவுக்குப் பெண்களுக்கு எதிரான வெறிபிடித்த வன்முறைகள் அதிகரித்துள்ளன. தொழில்நுட்பப் பரவலால் எளிதில் கிடைத்திருக்கும் செல்பேசி மூலம் பல பாலியல் வக்கிரங்கள் கிளறிவிடப்பட்டுள்ளன. சிறுமிகள், இளம்பெண்களின் நிர்வாணப் படங்கள் சின்னஞ்சிறு மெமரிசிப்பில் ஏற்றப்பட்டு ஆண்களுக்காகச் சந்தையில் விற்கப்படுகின்றன.

தொலைபேசியில் சில குறிப்பிட்ட எண்களுடன் தொடர்பு கொண்டு பாலியல் சரச உரையாடல்களைப் பெண்களின் குரலில் கேட்டுக் கிளர்ச்சியடைய இளைஞர்கள் விளம்பரங்கள் மூலம் ஈர்க்கப்படுகின்றனர். வீடியோ கேம்களின் வழியாகவும் ஆண்கள் வக்கிரமாக்கப்படுகின்றனர். இதில் உச்சமாக 'ரேப் சிமுலேசன்' எனும் பெயரில் ஜப்பானிலிருந்து வந்துள்ள 'மெய்நிகர் வன்புணர்ச்சி' வீடியோ கேம் உலகளவில் சந்தைப்படுத்தப்படுகிறது.

ஆண்களைத் தங்கள் கிராமங்களிலிருந்து பிய்த்து எடுத்து திருப்பூர் போன்ற ஊர்களில் பதியனிட்டுள்ள வேலை வாய்ப்புகள், பன்னிரண்டு மணி நேரம் வரை தொழிலாளர்களைப் பிழிந்தெடுக்கின்றன. பெண்களுக்கும் இதே கதிதான். இரவு நேர ஷிப்ட்களில் வேலை அலுப்பு தெரியாமல் இருக்க ஆபாச உரையாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட குறுந்தகடு ஓட விடப்படுகின்றது.

தமிழ் சினிமாவின் குத்துப்பாட்டு, இந்தி சினிமாவின் ''ஐட்டம்'' பாடல்கள் போன்றவை இதுவரை இலைமறை காயாக இருந்த பாலியல் உறவுக்காட்சி களைஅப்பட்டமானநடனஅசைவுகளாக மாற்றி, பெண்களைச் சீண்டுவதற்குத் தோதானபுதுவிதமானகழிசடை வார்த்தை களையும் அறிமுகப்படுத்திச்சீரழிவையே கலாச்சாரமாக்குகின்றன. இந்த வகைப் பட்ட பாடல் காட்சிகளால் உசுப்பேற்றப் படும்ஆண், பொது இடங்களில் நடமாடும் பெண்கள் அனைவரையும் போகப் பொருளாகவே பார்க்கிறான். பேருந்துகள், திரையரங்குகள், வேலைசெய்யும் இடங்கள் என ஆண், பெண் இருபாலரும் புழங்கும் எல்லா வெளிகளிலும் ஆண்கள் பெண்களைச் சீண்டுவதும் பாலியல் ரீதி யாகத் துன்புறுத்துவதும் அதிகரித்து வரு கிறது.



குத்தாட்டம்: கும்பல் பாலியல் வன்முறையின் கலை வடிவம்.

வேலைக்குச் செல்லும் பெண்கள், தொழிற்கூடங்களில் சக தொழிலாளர்கள், மேலாளர்க ளின் பாலியல் வக்கிரங்களையும் அவமதிப்புகளையும் அன்றாடம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. தனியார் கல்வி நிறுவனங்களின் ஆசிரியைகள் பள்ளித் தாளாளரை அனுசரித்து நடக்குமாறு நிர்பந்திக்கப்படுகின்றனர். பிராக்டிகல், இன்டர்னல் மதிப்பெண்களில் கைவைப் பேன் - என மிரட்டும் ஆசிரியர்களின் பாலியல் சுரண்ட லுக்கு கல்லூரி மாணவிகள் மட்டுமல்ல, பள்ளி மாண விகள்கூடப் பலியாகின்றனர்.

இவ்வாறு பாதிக்கப்படும் பெண்கள், இது குறித்து குடும்பத்தில் வெளிப்படுத்தவோ அல்லது போலீசு நிலையத்தில் முறையிடவோ செய்தால், நடந்த சம்ப வங்களுக்கு அவர்களே பொறுப்பாக்கப்படுகிறார்கள். ''ஏன் இரவு நேரத்தில் வெளியே சுற்ற வேண்டும்?'' என்கிற கேள்வி முதல், அவர்கள் அணியும் ஆடைகள் வரை அனைத்தையும் காட்டி, இந்தப் பிரச்சனையை அவளே வரவழைத்துக் கொண்டதாகக் குற்றம் சாட்டு கிறார்கள்.

நிலவும் ஆணாதிக்க சமுதாயத்தில் பெண் என்பவள் 'தூய்மையானவளாக' இருக்க வேண்டும் என்பதும், தனது ''கற்பை''ப் பேணிப் பாதுகாப்பதுதான் அவளது முழுநேர வேலை என்பதும் பொது விதியாக இருப்ப தால், பாதிக்கப்பட்ட பெண்கள் இது குறித்துப் பேசுவ தற்கே அஞ்சும் நிலை உள்ளது. பொது இடங்களில் பாலியல் சீண்டல்களை எதிர்கொள்ளும் ஏதாவதொரு பெண் அதற்கு எதிர்வினையாற்றினால், சுற்றியிருப்பவர் கள் மவுனம் சாதிக்கின்றனர். இந்த மவுனம், பெண்கள் மீது நடக்கும் தொடர் வன்முறைகளுக்குத் துணை நிற் கிறது

•••

மொத்தத்தில், மறுகாலனியாக்கக் கொள்கைகளின் அமலாக்கம், ஏற்கெனவே ஆணாதிக்க அடிமைத்தனத் தில் உழலும் இந்தியப் பெண்களின் மீதான உழைப்புச் சுரண்டலை அதிகரித்திருப்பதுடன், அவர்களைப் பாலு ணர்வுப் பண்டமாகக் காட்டி வெறியூட்டுவதன் மூலம், அவர்கள் மீதான பாலியல் ரீதியான தாக்குதல்கள் அதி கரிப்பதற்கும் வழி வகுத்திருக்கிறது.

அது மட்டுமல்ல, மறுகாலனியாக்கம் திட்டமிட்டே பரப்புகின்ற, தன்னையும் தன் இன்பத்தையும் மட்டுமே நோக்கமாகக் கொண்ட, விழுமியங்கள் ஏதுமற்ற நுகர்வு வெறி, மற்றவர் துன்பங்களைப் பற்றிக் கவலைப்படாத விலங்குகளாக மக்களைத் திட்டமிட்டே மாற்றி வரு கிறது. வகை வகையாகவும் விதவிதமாகவும் உணவுப் பொருட்கள், ஆடைகள், பல வண்ணக் கைபேசிகள், ஊடகங்களில் சந்தைப்படுத்தப்படும் நுகர்பொருட்கள் போன்றவற்றை வாங்கி அனுபவிப்பது மட்டுமே நோக்கம் என்றும், இவற்றை அடையும்பொருட்டு எல்லா நெறிகளையும் கைவிடலாம் என்பதும் சகஜமாக் கப்பட்டிருக்கிறது.

டெல்லி வன்முறையாளர்கள் யாரோ அல்ல. 'நாடு விலை போவதைப் பற்றியோ, சமூகம் அழுகி நாறு வதைப் பற்றியோ, அடுத்தவன் துன்பத்தால் துடிப்பதைப் பற்றியோ, தன்னுடைய வர்க்கத்தின் உரிமைகள் பறிக் கப்படுவது பற்றியோ, தன்னுடைய தனிப்பட்ட எதிர் காலத்தைப் பற்றியோ கூடக் கவலை இல்லாமல், இருக்கிற வரையில் அனுபவி' என்பதையே தம் விழு மியமாக வரித்துக் கொண்ட கிரிமினல்கள்.

டெல்லி வன்முறையைப் பாலியல் வெறி என்ற ஒரு கோணத்திலிருந்து மட்டும் பார்த்துப் புரிந்து கொள்ள இயலாது. நாடு முழுவதும் பெருகி வரும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் ஏதோ சில கிரிமினல்களின் எதிர் பாராத நடவடிக்கைளும் அல்ல. அவை இந்தப் பண்பாடு தோற்றுவிக்கின்ற, எதிர்பார்க்கக்கூடிய விளைவுகளே!

● கதிர்

## பெண்கள் மீதான வன்முறை:

# தீர்வு அளிக்கும் திசை எது?

**சட்டச் சீர்திருத்தங்கள் தோல்வியடைந்துவரும் நிலையில், பெண் விடுதலைக்குப் புரட்சிகரப் போராட்டங்களே ஒரே மாற்று.**

டெல்லி மக்கள் போராட்டத்தை ஒட்டி, பெருகிவரும் வல்லுறவுக் குற்றத்தை தடுப்பது குறித்து சட்டம், பண்பாடு ஆகிய இரு தளங்களில் இரு விதமான கருத்துகள் கூறப்படுகின்றன. நடந்துள்ள குற்றத்தின் கொடூரம் காரணமாக வல்லுறவுக் குற்றவாளிகளைத் தூக்கிலிட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்படுகிறது. பிரச்சினை சூடாக இருப்பதால், வல்லுறவுக் குற்ற வழக்குகள் விசாரிக்கப்படாமல் தேங்கிக் கிடப்பது கண்டுபிடிக்கப்படுகிறது. அவற்றை விரைந்து முடிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கிறது உச்ச நீதி மன்றம்.

பண்பாட்டுத்தளத்தில், பெண்கள் அடக்க ஒடுக்கமாக உடையணியாதது, இரவு நேரத்தில் தனியாகப் போவது போன்ற மேற்கத்திய கலாச்சார சீரழிவுகளே இதற்கு காரணம் என்று சங்கப்பரிவாரத்தினர் உள்ளிட்ட பிற்போக்குவாதிகள் கூறுகின்றனர். இசுலாமிய மதவாதிகள் உடனே பர்தா மார்க்கெட்டிங்கைத் தொடங்குகின்றனர்.

ஆயிரம் முறை பதிலளிக்கப்பட்டாலும், இந்த ஆணாதிக்கக் கருத்துகள் வெட்ட வெட்டத் துளிர்க்கின்றன. ஆண் சட்டையைக் கழற்றுவதும், வெற்றுடம்போடு இருப்பதும் தங்களை மிருகமாக்குவதாக பெண்கள் கூறவில்லையே, ஆண்கள் கல்லூரிகளின் பேருந்து நிறுத்தங்களில் பெண்கள் குவிவதில்லையே என்ற எளிய உண்மைகள் கூட ஆண்களுக்கு உரைப்பதில்லை. பத்து நாள் பட்டினி ஆனாலும், ஓட்டல் கடையில் தின்பண்டங்களின் மீது காசு கொடுக்காமல் யாரும் கை வைப்பதில்லை. அந்த அளவுக்குத் தனிச் சொத்துடைமையை மதிக்கும் கருத்து இரத்தத்தில் ஊறியிருப்பவர்கள்தான், யாரோ ஒரு பெண் கவர்ச்சியாக உடையணிந்து சென்றால் தன்னை கைநீட்ட வைக்கிறது என்று கூச்சமில்லாமல் பேசுகின்றனர்.

இந்த கூச்சமின்மை நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கம் அளித்த பண்பாட்டுக் கொடை. பெண்ணை போகப் பொருளாகப் பார்ப்பதற்குப் பழக்கியிருக்கும் நிலவுடைமைப் பண்பாடு கூட, மனித குல மறுஉற்பத்தியில் பெண்கள் ஆற்றும் பாத்திரத்தை மதிக்க வேண்டிய கட்டாயம் இருந்த காரணத்தால், தாய்மை - புனிதம் என்ற விழுமியங்களை வைத்திருந்தது.

ஆனால் மறுகாலனியாக்க கொள்கைகளின்கீழ் அதிரடியாகத் திணிக்கப்படும் முதலாளித்துவமோ, நிலப்பிரபுத்துவத்துடன் இணைந்த வீரிய ஒட்டு ரகப் பண்பாட்டை உருவாக்கியிருக்கிறது. கடந்த 15 ஆண்டுகளில் தான் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பெண் சிசுக்கொலை அதிகரித்திருக்கிறது. வரதட்சிணைக் கொலைகளும் அதிகரித்திருக்கின்றன. வாடகைத் தாய்களின் விலை குறைந்து வருகிறது.

பெண்களுக்குப் பாதுகாப்பு கோரியும், பாலியல் வல்லுறவுக் குற்றங்களில் ஈடுபடுவோருக்குத் தூக்கு தண்டனை விதிக்கக் கோரியும் டிசம்பர் 23 அன்று டெல்லியில் நடந்த ஆர்ப்பாட்டம்.




''புகுந்த வீட்டில் உங்கள் மகள் பாதுகாப்பாக வாழ்வதை உறுதி செய்ய எங்கள் கடையில் நகை வாங்குங்கள்'' என்ற விளம்பரத்தை எதிர்த்து சமீபத்தில் டெல்லியில் போராட்டம் நடத்தியிருக்கிறது, ஒரு பெண்கள் அமைப்பு. புகுந்த வீடு போகும் பெண்ணின் உயிரை உத்திரவாதப்படுத்த, நகை அணிவித்து அனுப்புவதைப் போல, வெளியில் செல்லும் பெண்களின் 'கற்பை' உத்திரவாதப்படுத்தவும் கவசங்கள் விற்கப்படலாம். பாலியல் தாக்குதலைத் தடுக்க மாணவிகள் மேல் கோட்டு அணிய வேண்டும் என்று புதுச்சேரி அரசு கூறியிருக்கிறது.

மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் அனைத்தும் ஆணாதிக்கத்துக்கு அளிக்கப்படும் அங்கீகாரங்கள்.

> **ஒரு குற்றத்தை சாதாரண கிரிமினல்கள் இழைப்பதற்கும், போலீசு, இராணுவத்தினர் இழைப்பதற்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், இது அதிகாரத்தைப் பயன்படுத்தி இழைக்கும் குற்றம்; அதிகாரத்தைப் பயன்படுத்தியே மறைக்கும் குற்றம்; இறுதியாக, வேலியே பயிரை மேயும் குற்றம்.**

தொலைக்காட்சியும் திரைப்படங்களும் ஆணாதிக்கத்தை மேலும் வக்கிரமாக்கியிருக்கின்றன. தன்னைக் காதலிக்குமாறு கட்டாயப்படுத்தியதற்காக சூர்ப்பனகை மூக்கை அறுத்தான் ராமன் என்கிறது ராமாயணம். காதலிக்க மறுக்கும் பெண்கள் மீது ஆசிட் ஊற்றுவது சகஜமாகி வருகிறது. ஏனென்றால், நுகர்வியம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தனிநபர்வாத வெறித்தனத்தை வளர்த்து விட்டிருக்கிறது.

எவ்வளவு நுகர்கிறோமோ அவ்வளவு மகிழ்ச்சி, விதவிதமாக நுகர்வதே வாழ்க்கையின் நோக்கம் என்ற மனோபாவமே ஒரு மனிதனின் விழுமியங்களை ஆட்சி செய்கிறது. இத்தகைய சூழலில் ஆண்களின் நுகர்பொருள் பட்டியலில் பெண்ணும் ஒரு பண்டமாகக் காட்டப்படும்போது, அவள் மிக எளிதில் பாலியல் வன்முறையின் இலக்காகி விடுகிறாள். சக மாணவன், ஆசிரியன், தெருவில் போகிறவன், பக்கத்து வீட்டுக்காரன், சொந்தக்காரப் பையன் என்று எந்த ஒரு ஆணும் தன்மீது பாலியல் வன்முறையை செலுத்தக்கூடும் என்ற அச்சத்துடன் வாழவேண்டிய நிலைக்கு ஒரு பெண் ஆளாக்கப்பட்டிருக்கும்போது, இதனை சட்டத்தின் மூலம் தடுப்பது எப்படி என்பதே கேள்வி.

தீண்டாமையை நல்லொழுக்கமாகக் கருதும் சமூகத்தின் மீது விதிக்கப்பட்டிருக்கும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் ஏன் இயங்க மறுக்கிறதோ, அதே காரணத்தினால்தான், ஆணாதிக்க வன்முறைகளுக்கு எதிரான சட்டங்களும் இயங்குவதில்லை. சட்டம் எதனைக் குற்றம் என்று விளக்குகிறதோ, அதுவே ஆண்மையின் இலக்கணமாக பண்பாட்டால் உயர்த்தப்படும்போது, பெண்ணை துரத்தி மிரட்டிப் பணிய வைப்பது கதாநாயகர்களின் சாதனை ஆகிவிடுகிறது. இத்தகையொரு 'நாயகன்'தான் காதலுக்கு இணங்க மறுத்த காரணத்தினால் விநோதினி என்ற பெண்ணின் முகத்தில் ஆசிட் ஊற்றினான். முந்தையது கலை, பண்பாடு. பிந்தையது குற்றம். ''புகை, குடி போன்றவற்றைக் காட்டிலும் வல்லுறவும் கொலையும் பாரிய குற்றங்கள் அல்லவா? சினிமாவில் அத்தகைய காட்சிகள் வரும்போதும் எச்சரிக்கை வாசகம் வெளியிடலாமே!'' என்று கேலி செய்திருந்தார் திரைப்பட இயக்குநர் அடூர் கோபாலகிருஷ்ணன்.

மறுகாலனியாக்கம் வர்க்க ரீதியில் மட்டும் சுரண்டல், ஏற்றத்தாழ்வை அதிகரிக்கவில்லை. அது ஏற்கெனவே சமூகப் படிநிலையில் அதிகம் ஒடுக்கப்படுபவர்களாக இருக்கும் பெண்கள், தாழ்த்தப்பட்டவர்கள் மீதான சுரண்டல் -அடக்குமுறையையும், அதன் விளைவாக முரண்பாடுகளையும் தீவிரப்படுத்தியிருக்கிறது. பெண்களின் மீதான வன்முறை அதிகரிப்பதற்கான சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகள் என்னவென்று யாருக்கும் தெரியாமல் இல்லை. இருப்பினும், அவை ஆளும் வர்க்க நலனுக்கானவை என்பதால், அவற்றை இருட்டடித்து விட்டு, வல்லுறவை தனியான தொரு குற்றமாகக் காட்டவே அரசு முயற்சிக்கிறது.

அப்பட்டமான பாலியல் குற்றங்களே தண்டிக்கப்படுவதில்லை என்ற சூழ்நிலை ஒருபுறம் நிலவும்போதே, மேட்டுக்குடி பெண்ணியவாதிகள், ஆணாதிக்கத்தின் புதிய நுட்பமான வடிவங்களைப் பட்டியலிட்டு இவையும் குற்றங்களாகச் சேர்க்கப்பட வேண்டுமென்று அரசிடம் கோருகின்றனர். இவற்றையும் குற்றம் என்று அங்கீ

நீதிபதி வர்மா கமிசன் அளித்த பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரி 'குடியரசு' தினத்தன்று டெல்லியில் நடந்த ஆர்ப்பாட்டப் பேரணி. (உள்படம்) நீதிபதி வர்மா.



கரித்து சட்டப் புத்தகத்தில் ஏற்றி விடுவதன் மூலம், அந்தக் குற்றங்கள் நிகழ்வதற்கான சமூகப் பண்பாட்டு காரணங்களுக்குப் பொறுப்பேற்பதிலிருந்து அரசும் ஆளும் வர்க்கமும் தார்மீக ரீதியில் விலகிக் கொண்டு விடுகின்றன.

அதுமட்டுமின்றி, ஏற்கெனவே சட்டங்கள் அளித்திருக்கின்ற அதிகாரத்தை வைத்தே குற்றங்களைத் தடுக்காத அதிகார வர்க்கமும் போலீசும், அவ்வாறு செயல்படத் தவறியதற்கு வெகுமதியாக புதிய அதிகாரங்களைக் கோருகின்றனர். வல்லுறவுக்குக் குண்டர் சட்டம், குற்றவாளிகளைக் கண்காணிக்க எல்லா பொது இடங்களிலும் வீடியோ காமெராக்கள் - என்று வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, மக்கள் மீது தமது கண்காணிப்பையும் அதிகாரத்தையும் அதிகப்படுத்துவதற்கான அனைத்தையும் அரசு செய்து கொள்கிறது.

> “பஞ்சமா பாதகம் என்று எனப்பட்டவையெல்லாம் இன்று சட்டமாக்கப்படுகின்றன. ஒப்புக்கொள்ளாத மக்கள் மீது திணிக்கப்படுகின்றன. இந்த நாடே பன்னாட்டு நிறுவனங்களால் கும்பல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படுவது சகஜமானதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.”

ஆகவே வல்லுறவு மற்றும் பாலியல் குற்றங்களுக்கு மேலும் கடுமையான சட்டம், தூக்கு தண்டனை என்ற கோரிக்கைகளை அரசின் முன்வைக்கும் போது, இக்குற்றத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்ட பிறர் விடுவிக்கப்பட்டு விடுகின்றனர். டெல்லி சம்பவத்தையே எடுத்துக் கொண்டால், பேருந்து கண்ணாடிகள் கருப்பாக இருக்கக் கூடாது என்று தான் போட்ட உத்தரவையே கண்காணிக்காத நீதிமன்றம், நிறைவேற்றாத பேருந்து உரிமையாளர், சோதிக்காத போக்குவரத்து அதிகாரி மற்றும் போலீசார், இரவு நேர ரோந்து போலீசார் - என இத்தனை பேர் இதில் தொடர்புள்ளவர்கள். அதேபோல பாலியல் வக்கிர வீடியோக்கள் புழங்கும் செல்போன்கள், போதை மருந்துகள், ஆணாதிக்கத் திமிரைச் சாகசமாக காட்டும் திரைப் படங்கள், பள்ளி மாணவர்களைக் குறிவைத்து நடத்தப்படும் ‘‘டைம் பாஸ்’’ போன்ற ஆபாசப் பத்திரிகைகள் - எனப்பல குற்றவாளிகள் இதன் பின்புலத்தில் இருக்கின்றனர். இவர்கள் மட்டுமின்றி, குற்றம் நிகழ்வதற்கான சூழலை ஏற்படுத்தித் தந்த அரசு, போலீசு, நீதித்துறை உள்ளிட்ட அரசு எந்திரம் முழுவதும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுவதற்குப் பதிலாக, அவர்களிடமே கோரிக்கை வைக்கப்படும்போது, ஆளும் தகுதியை இழந்துவிட்ட அரசு மீண்டும் நியாயவுரிமை பெற்றுவிடுகிறது.

பெண்கள் மீதான வன்முறை குறித்த பிரச்சினையில் பெரிதும் அக்கறையுள்ளது போல காட்டிக்கொள்ளும் பொருட்டு அரசு, நீதிபதி வர்மா தலைமையில் கமிசன் அமைத்த போதிலும், உள்துறை அமைச்சரும் உள்துறைச் செயலருமே இக்கமிசனுக்கு உரிய மதிப்பளிக்கவில்லை.

போலீசு, துணை இராணுவம் மற்றும் இராணுவப் படையினரின் மீதான வல்லுறவுக் குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் விசாரித்துத் தண்டனை வழங்க வேண்டும் என்றும், வல்லுறவுக் குற்றம் விசயத்தில் ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் பொருந்தாது என்றும் வர்மா கமிசன் கூறியிருப்பதை அமல்படுத்தவியலாது என்று மறுநாளே அறிக்கை விட்டார் அமைச்சர் அச்வினி குமார். தற்போது அரசு கொண்டு வந்திருக்கும் அவசரச் சட்டமோ, மேற்கூறிய கமிசன் சிபாரிசுகளை முற்றிலுமாக நிராகரித்திருப்பதாகக் கூறுகின்றன பெண்கள் அமைப்புகள்.


ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துத்தான் ஐரோம் சர்மிளா உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகிறார். ‘‘எங்களை வல்லுறவு கொள்ளுங்கள்’’ என்று மணிப்பூர் தாய்மார்கள் இராணுவ அலுவலகத்தின் முன் நிர்வாணமாக நடத்திய போராட்டம், டில்லி போராட்டத்துக்கு மிகவும் முந்தையது.

டில்லி கிரிமினல்கள், ஒரு மணி நேரம் தன் கட்டுப்பாட்டில் வைத்து அந்தப் பெண்ணை வல்லுறவுக்கு ஆளாக்கி வீசி

அசாமில் மாவட்டக் காங்கிரசு கட்சியின் தலைவரான பிக்ராம்சிங் பிரம்மா என்பவன் பாலியல் வல்லுறவுக் குற்றத்தில் கைது செய்யப்பட்டபோது, பெண்கள் திரண்டெழுந்து அவனை நடுவீதியில் செருப்பால் அடித்து அவமானப்படுத்தும் முன்னுதாரணமிக்க போராட்டம்.



விட்டு, தப்பிச் சென்றனர். இதே குற்றத்தை இழைக்கும் போலீசும் இராணுவமும் ஒடுவதில்லை. போலீசு நிலையமும் இராணுவ முகாமும் அவர்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதிகள். வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்ட பெண் மீது பொய்யாக திருட்டு வழக்கு போடுவது, விபச்சார வழக்கு போடுவது என்பது போலீசின் உத்தி. தீவிரவாதி என்று முத்திரை குத்தி சுட்டுக் கொன்று வீசியெறிந்து விடுவது ராணுவத்தின் உத்தி. மணிப்பூரைச் சேர்ந்த தங்ஜம் மனோரமாவின் படுகொலை இத்தகையதுதான்.




ஒரு குற்றத்தை சாதாரண கிரிமினல்கள் இழைப்பதற்கும், போலீசு, இராணுவத்தினர் இழைப்பதற்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், இது அதிகாரத்தைப் பயன்படுத்தி இழைக்கும் குற்றம்; அதிகாரத்தைப் பயன்படுத்தியே மறைக்கும் குற்றம்; இறுதியாக, வேலியே பயிரை மேயும் குற்றம். வல்லுறவுக் குற்றத்துக்குத் தூக்கு தண்டனை கொடுப்பது என்றால், அது இவர்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும். இருப்பினும், அவ்வாறு தண்டிப்பது போலீசு, இராணுவப் படையினரின் தார்மீக பலத்தைக் குன்றச்செய்துவிடும் என்று சொல்லித்தான் அரசு இதனைத் தொடர்ந்து நிராகரிக்கிறது.

இது ஒரு உருவகம். ஓட்டுப் பொறுக்கிகள் முதல் அதிகார வர்க்கம், நீதித்துறை ஆகியவற்றின் எல்லா மட்டங்களிலும் லஞ்ச-ஊழல் உள்ளிட்ட நெறிகெட்ட செயல்கள் அனைத்தும் நியாயப்படுத்தப்படுவது இப்படித்தான். இது தனியே நடைபெறவில்லை. இதுநாள் வரை நெறிகெட்டதாகவும் சட்டவிரோதமானதாகவும் கருதப்பட்ட பல விசயங்களை மறுகாலனியாக்கக் கொள்கை சட்டபூர்வமாக்கியிருக்கிறது. தண்ணீரும் ஆறுகளும் தனியார்மயக்கப்படுகின்றன.

பஞ்சமா பாதகம் என்று எனப்பட்டவையெல்லாம் இன்று சட்டமாக்கப்படுகின்றன. ஒப்புக்கொள்ளாத மக்கள் மீது திணிக்கப்படுகின்றன. இந்த நாடே பன்னாட்டு நிறுவனங்களால் கும்பல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படுவது சகஜமானதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. சமூக நலன் சார்ந்த விழுமியங்களைக் கைவிடுவது அவ்வளவு சுலபமாக நடக்கும்போது, தனிநபர் ஒழுக்கம் எப்படி நிலைக்க முடியும? அதனால்தான் மகளை வல்லுறவுக்கு ஆட்படுத்திய தந்தை, மாணவியை பாலியல் சித்திரவதை செய்த ஆசிரியர் போன்ற விபரீதங்கள் அரங்கேறுகின்றன.

பண்பாட்டில் ஒழுக்கமில்லாத நிலை என்பது திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. சீனத்தை அபினியில் மூழ்கடித்ததைப் போல, இந்த விழுமியங்களற்ற கலாச்சாரத்திற்குள் மக்கள் வீழ்த்தப்படுகிறார்கள். இதன் காரணமாகத்தான் அநீதி இழைப்பதும், அநீதியைச் சகித்துக் கொள்வதும் சகஜமாகிவிட்டது.

இந்த சமூகச் சீரழிவை, சட்டத்தின் துணைகொண்டு மாற்றியமைக்க முடியாது. காரணம், அந்தச் சட்டத்தை ஏந்தியிருப்பவர்கள்தான் இந்தச் சீரழிவை விதைத்தவர்கள். இந்தச் சூழலிலிருந்து தனியாக யாரும் பாதுகாப்பு தேடவும் முடியாது. தனித்தனியாக திருத்தவும் முடியாது. குறிப்பிட்ட சமூகச் சூழல்தான் தனிநபர் பண்பாட்டை சீரழித்தது என்றாலும், தனிநபர்களாக அதனை மாற்றிக் கொள்ள இயலாது.

தனிப்பட்ட முறையில் ஆண்-பெண் உறவில் ஜனநாயக விழுமியங்கள் வரவேண்டுமானால், புதிய ஜனநாயகப் புரட்சிக்கான போராட்டத்தில் மக்களை ஈடுபடுத்த வேண்டும். டில்லியில் குறுகிய காலமே நடந்த அந்த போராட்டத்தின் ஊடாக, பல ஆணாதிக்கவாதிகளுடன் கொண்டிருந்த நட்பை முறித்துக் கொண்டதாக பெண்கள் தம் அனுபவத்தைக் கூறியிருக்கின்றனர். இத்தகைய போராட்டங்கள்தான் ஆண்-பெண் உறவில் ஜனநாயகக் கூறுகளை அமல்படுத்தும். ஒரு பெண்ணுக்குப் பேருந்திலோ, பொது இடத்திலோ அநீதி நடந்தால் பார்த்துக் கொண்டு செல்லாமல் தலையிட்டுத் தட்டிக் கேட்கும் பண்பை அனைவரிடமும் வளர்க்கும். பெண்களை இழிவுபடுத்தும் பண்பாட்டுச் சீரழிவுகளுக்குப் பணிந்து போகாமல், எதிர்த்துப் போராடும் மன வலிமையைத் தரும்.

இதுகாறும் ஆணாதிக்கமாகத் தெரிந்திராதவற்றை ஆண்களுக்கும், பெண்ணடிமைத்தனமாகப் புரிந்து கொள்ளாதவற்றை பெண்களுக்கும் புரிய வைக்கும். அதிகாரத்தை மக்கள் கையிலெடுப்பதற்குப் பயின்று கொள்வது இப்படித்தான். இத்தகைய மக்கள் எழுச்சிகளை முடிந்தவரை விரைவாக தண்ணீர் ஊற்றி அணைப்பதன் மூலம்தான், தனது அதிகாரத்தையும் மேலாண்மையையும் அரசு தக்கவைத்துக் கொள்கிறது. இத்தகைய எழுச்சிகளை இயல்பான நிகழ்வுகளாக மாற்றுவதன் மூலம்தான், இந்த அரசதிகாரத்தைச் செல்லாக் காசாக்கவும், மக்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தவும் முடியும்.

● அஜித்

## அதிகரித்துவரும் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள்:

# யார் குற்றவாளி?




சென்னையில்...

சென்னையில்...

பெண்களுக்கு எதிராகப் பெருகிவரும் குற்றங்களை எதிர்த்தும், தனியார்மய-தாராளமயக் கொள்கைகள் இதனைத் தீவிரப்படுத்தி வருவதை உணர்த்தியும், இம்மறுகாலனியாக்கக் கொள்கையை வீழ்த்த அணிதிரண்டு போராட அறைகூவியும் திருச்சி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி வாயிலில் கடந்த 21.12.2013 அன்று ஆர்ப்பாட்டம் நடத்திய பு.மா.இ.மு. தோழர்கள், அதன் தொடர்ச்சியாக பிரச்சாரத்தை மேற்கொண்டு, ''அதிகரித்துவரும் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள்: யார் குற்றவாளி?'' என்ற கேள்வியுடன் 24.1.2013 அன்று கல்லூரி வாயிலில் கையெழுத்து இயக்கத்தை நடத்தினர். தனியார்மயமும் தாராளமயமும் பெண்களை நுகர்வுப் பொருளாக மாற்றியுள்ளதையும், அரசே ஆபாச சீரழிவையும் சாராய போதையையும் பரப்பி வருவதையும், ஆணாதிக்கத்தையும், சாதி-மத ஆதிக்கத்தையும் எதிர்த்து மாணவர்களும் மாணவிகளும் உற்சாகத்துடன் சுதந்திரமாகத் தங்கள் கருத்துகளைத் தெரிவித்த இந்த புதிய வடிவிலான பிரச்சாரம், இவற்றுக்கு எதிராக அணிதிரண்டு போராட வேண்டுமென்ற பொதுக்கருத்தை வலுப்படுத்தியது.

டெல்லியைத் தொடர்ந்து புதுச்சேரியிலும் கல்லூரி மாணவி மீது நடத்தப்பட்ட பாலியல் தாக்குதலை எதிர்த்தும், தீவிரமாகிவரும் பெண்கள் மீதான வன்முறைகளை எதிர்த்தும் புதுச்சேரி - வில்லியனூரில் 8.1.2013 அன்று பு.ஜ.தொ.மு. ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. விண்ணதிரும் முழக்கங்களுடன், செயற்குழு உறுப்பினர் தோழர் வீரலட்சுமி தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், விழுப்புரம் மாவட்ட பு.மா.இ.மு. செயலாளர் தோழர் செல்வக்குமார், புதுச்சேரி பு.ஜ.தொ.மு. பொதுச் செயலாளர் தோழர் கலை ஆகியோர் சிறப்புரையாற்றினர். சட்டத்தைக் கடுமையாக்குவதால் மட்டும் பெண்கள் மீதான வன்முறைக் குற்றங்களைத் தடுத்திட முடியாது; மாறாக, உழைக்கும் மக்கள் தங்களது தொடர் போராட்டங்களின் வழியே உழைக்கும் மக்களுக்கான அரசை நிறுவுவதன் மூலம்தான் இந்தக் கொடுமைகளை வீழ்த்த முடியும் என்பதை உணர்த்துவதாக இந்த ஆர்ப்பாட்டம் அமைந்தது.

பெருகிவரும் பெண்கள் மீதான வன்கொடுமைத் தாக்குதல்களுக்கு எதிராக 27.12.2013அன்று சென்னை-பல்லாவரத்தில் ஆர்ப்பாட்டம் நடத்த போலீசிடம் பெ.வி.மு. அனுமதி கோரியபோது, ஆர்ப்பாட்டம் நடத்தினால் கலவரம் ஏற்பட்டு பொது அமைதிக்குப் பாதிப்பு ஏற்படும் என்று போலீசார் அனுமதி மறுத்தனர். இந்த அநீதியையும் அடாவடித்தனத்தையும் அம்பலப்படுத்திச் சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்ட பெ.வி.மு. தோழர்கள், இந்த ஜனநாயக விரோதச் செயலை எதிர்த்து நீதிமன்றத்தில் முறையிட்டுப் போராடி 19.1.2013 அன்று ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.




திருச்சியில்...

தோழர் அமிர்தா தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், சிறப்புரையாற்றிய ம.க.இ.க. தோழர் துரை. சண்முகம், தனியார்மயம்- தாராளமயம் புகுத்தியுள்ள நுகர்வுவெறியால் பெண்கள் மீதான தாக்குதல் அதிகரித்து வருவதையும், சட்டத்தைப் பாதுகாப்பதாகச் சொல்லும் போலீசுத் துறையிலேயே பெண் போலீசுக்கு பாதுகாப்பு இல்லை என்பதையும், சாதி ஆதிக்க - ஆணாதிக்க சமூகத்தை மாற்றியமைத்தால் தான் பெண்களின் அடிமை நிலை மாறும் என்பதையும் உணர்த்தி, போராட அறைகூவினார்.

- பு.ஜ.செய்தியாளர்கள்.

# அனைத்துச் சாதியினரும் அர்ச்சராகும் சட்டம்:

# பார்ப்பன ஜெயா அரசின் சூழ்ச்சி!

அனைத்துச்சாதியினரையும்அர்ச்சகராக்கும்சட்டம் 1972-இல் உச்ச நீதிமன்றத்தால் முடக்கப்பட்டு 40 ஆண்டுகள் கடந்துவிட்டன. 2006-இல் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு பார்ப்பனரல்லாத அர்ச்சகர்களை நியமிக்க ஒரு அரசாணை வெளியிட்டு, பயிற்சிப் பள்ளி உருவாக்கி, அனைத்துச் சாதியினரையும் பயிற்றுவித்தது. இதற்கு எதிராக மதுரை சிவாச்சாரியர்கள் உச்ச நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றனர்.

இதனை முறியடிக்கும் பொருட்டு, அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்களைச் சங்கமாக உருவாக்கி, அவர்களை ஒரு மனுதாரராக இவ்வழக்கில் சேர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கை நடத்தி வருகிறது மனித உரிமைப் பதுகாப்பு மையம். தி.மு.க. ஆட்சிக்காலம் முழுவதும் வழக்கை இழுத்தடித்தது பார்ப்பனர் தரப்பு. இப்போது ஜெ. அரசு, பார்ப்பன அர்ச்சகர்களுடன் பேசி சுமுகமாக ஒரு தீர்வு காண இருப்பதாக உச்ச நீதிமன்றத்தில் கூறியிருக்கிறது.

அதாவது, ஆகமவிதிப்படி அமைந்தவை என்று கூறப்படும் பார்ப்பன அர்ச்சகர்களின் பரம்பரைச் சொத்தான கோயில்கள் அனைத்தையும் தவிர்த்து விட்டு, அர்ச்சகர் பயிற்சி பெற்ற 206 மாணவர்களை மாரியாத்தா, காளியாத்தா கோயில்களுக்கு ஒதுக்கி விடுவதுதான் அரசின் திட்டம். முறையாகப் பயிற்சி பெற்ற பின்னரும் தாங்கள் சாதி அடிப்படையில் இழிவுபடுத்தப்படுவதால் மாணவர்கள் கொதித்துப் போயிருக்கின்றனர்.

வேதம், ஆகமம் என்ற எந்த வெங்காயத்தின் பேரால் சாதி-தீண்டாமை நியாயப்படுத்தப்பட்டாலும் அவை தூக்கியெறியப்பட வேண்டும் என்பது ஒருபுறமிருக்க, பார்ப்பனர்கள் எழுதி வைத்துக் கொண்டிருக்கும் ஆகம விதிகளை அவர்களே கடைப்பிடிப்பதில்லை என்பதே உண்மை.

மதுரையில் மொத்தம் உள்ள 116 அர்ச்சகரில் 28 பேர்தான் முறைப்படி ஆகமம் பயின்றவர்கள். கபாலீசுவரர் கோவிலில் 41 பேரில் 4 பேர்தான் முறைப்படி ஆகமம் பயின்றவர்கள். மீதி பேர்கள் உதவிக்குப் போன ''அப்ரண்டீசுகள்''. அப்படியே காலப் போக்கில் அர்ச்சகரானவர்கள். தமிழகத்தில் மொத்தம் 1144 அர்ச்சகர்கள் அரசு கோவில்களில் உள்ளனர். இதில் 574பேர் வாரிசுரிமைப்படி தான் இன்றுவரை பணி புரிந்து வருகின்றனர். மேலும் 411 பேர் சிபாரிசு மூலம் நியமனம் பெற்றவர்கள்.

30.1.2013 அன்று சென்னை - மெமோரியல் ஹால் அருகில் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்தின் செயலர் ரங்கநாதன், முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் வி.வி.சாமிநாதன், ம.உ.பா.மைய மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜு உள்ளிட்ட பலரும் உரையாற்றினர்.



திருப்பரங்குன்றத்தில் முருகன், சிவலிங்கம், பெருமாள் ஆகிய மூன்று கடவுள்களுக்கும் சிவாச்சாரியரே பூசை செய்கிறார். பெருமாளுக்கு சிவாச்சாரியார் பூசை செய்வது இவர்களது ஆகமத்தின்படி தீட்டு. திருமணமாகாதவர்கள் மட்டுமல்ல, மனைவி இறந்துவிட்டால்கூட அர்ச்சகனாக இருக்க முடியாது. ஆகம விதி கால பூசையைப் பற்றித்தான் கூறுகிறது. பக்தர்களின் பெயர், நட்சத்திரத்தைக் கேட்டு அவர்கள் பெயருக்கு அர்ச்சனை செய்வது என்பதே வசூலுக்காகப் பார்ப்பனர்கள் கண்டுபிடித்த பித்தலாட்டம்.

பார்ப்பான் என்ற ஒரு 'தகுதி'யைத் தவிர, அவர்களே கூறுகின்ற எந்தத் தகுதியும் இல்லாதவர்கள்தான் பெரும்பான்மையான கோயில்களின் அர்ச்சகர்கள். ஆனால், முறையாகப் பயிற்சி பெற்று, தீட்சை பெற்றிருந்தும், எல்லாத் தகுதிகளும் இருந்தும், பார்ப்பான் என்ற ஒரு 'தகுதி' இல்லாத காரணத்தால் 206 மாணவர்கள் வெளியே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் .

ஜனவரி 30-ஆம் தேதியன்று வழக்கின் இறுதி விசாரணை தொடங்கிவிட்டது. தமிழக அரசின் சார்பில் அம்மாவின் வழக்குகளுக்கு ஆஜராகும் பி.பி.ராவ் என்ற வழக்குரைஞர் நியமிக்கப்பட்டிருக்கிறார். மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் சார்பில் மூத்த வழக்குரைஞர் காலின் கன்சால்வேஸ் ஆஜராகிறார். பார்ப்பன அர்ச்சகர்கள் சார்பில் வழக்குரைஞர் பராசரன் தனது வாதுரைகளை முன்வைக்கத் தொடங்கி விட்டார்.

''சம்பிரதாயமா, மதச்சார்பற்ற சட்டமா (ceremonial law or secular law) என்றால் சம்பிரதாயமே மேல்நிலை வகிக்கும். இதுதான் அரசியல் சட்டத்தின் நிலை. தி.மு.க. அரசு போட்டிருக்கும் அரசாணை, உரிய சட்டத்தின் துணை இல்லாமல் போடப்பட்டிருப்பதால் அது செல்லத்தக்கதல்ல. ஒருவேளை தமிழக அரசால் அவ்வாறு ஒரு சட்டமியற்ற முடிந்தால், இயற்றிக் காட்டட்டும், நான் உடைத்துக் காட்டுகிறேன். அது அரசியல் சட்டம் வழங்கும் மத உரிமைக்கு எதிரானது. எனவே, செல்லத்தக்கதல்ல'' என்று கூறி தனது வாதத்தை தொடங்கியிருக்கிறார் பராசரன்.

அரசியல் சட்டத்தின் பிரிவு 25, 26- இன் கீழ் பார்ப்பனர்களின் சாதி உரிமையையே இந்து மதத்தின் சம்பிரதாயம் தொடர்பான உரிமை என்று கூறுகின்றனர் பார்ப்பனர்கள். இதன் மூலம் சமூக நடவடிக்கைகளில் குற்றமாக்கப்பட்ட தீண்டாமையை, மதநீதியில் தமது உரிமை என்று கூறுகின்றனர்.

இது மிகவும் கடினமான சவாலான வழக்கு. தீண்டாமையை ஒரு மத உரிமையாக அரசியல் சட்டம் அங்கீகரிக்க முடியாது என்று நிலைநாட்ட வேண்டுமெனில், அதற்கு திறம் வாய்ந்த மூத்த வழக்குரைஞர் பட்டாளம் வேண்டும். பணம் வேண்டும். கோடிக்கணக்கான ரூபாய்களின் மேல் கொலுவிருப்பவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

வாதியான பார்ப்பன அர்ச்சகர்களும், பிரதிவாதியான தமிழக அரசும் 'சுமுகமாக' முடித்துக்கொள்ள முயலும் நிலையில், நீதியை நிலைநாட்டும் மூன்றாம் தரப்பாக நிற்கிறது மனித உரிமைப் பாதுகாப்பு மையம். சாதி - தீண்டாமைக்கு எதிரான நீண்ட போராட்டத்தின் தொடர் ஓட்டச் சுடரை ஏந்தி, அவர்களுடன் துணை நிற்கின்றன ம.க.இ.க. உள்ளிட்ட புரட்சிகர அமைப்புகள்.

- மனித உரிமைப் பாதுகாப்பு மையம்,
தமிழ்நாடு.

## விஸ்வரூபம்:

# பாசிச ஜெயாவுக்கு ஒளிவட்டம் சூட்டிய இசுலாமிய அமைப்புகளின் போராட்டம்!

**வி**ஸ்வரூபம் திரைப்படத்துக்கு இசுலாமிய அமைப்பினர் காட்டிய எதிர்ப்பு, அப்படத்தைத் திரையிடுவதற்கு ஜெ. அரசு மாவட்ட ஆட்சியர்கள் மூலம் தமிழக முழுவதும் விதித்த தடை, இவற்றையொட்டி எழுந்த விவாதங்கள் ஆகியவை மதச்சார்பற்றவர்களும் ஜனநாயக சக்திகளும் இத்தகைய பிரச்சினைகளை எப்படி அணுக வேண்டும் என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளன.

இந்தப் படத்தை முடக்குவதில் ஜெ. அரசு கொண்டிருந்த விசேட ஈடுபாடு அதன் நடவடிக்கைகளில் அப்பட்டமாகவே தெரிந்தது. 31 மாவட்டங்களிலும் புகாரை வாங்கிய கையோடு பிறப்பிக்கப்பட்ட 144 தடை உத்தரவு, உயர் நீதிமன்றத்தில் அரசின் தலைமை வழக்குரைஞர் நவநீதகிருஷ்ணன் முன்வைத்த வாதங்கள், தடை நீக்கப்பட்ட பின்னரும் படத்தைத் திரையிடவிடாமல் தடுக்கப் பல இடங்களில் போலீசு மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவை இப்பிரச்சினையில் ஜெயலலிதா நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதை உறுதி செய்தன.

பொதுக்கருத்து தனக்கு எதிராகத் திரும்புவதைக் கண்டு பீதியுற்ற ஜெயா, ''தனக்கும் ஜெயா டி.வி.க்கும் சம்பந்தம் இல்லை. தனிப்பட்ட விரோதம் எதுவும் காரணமில்லை'' என்று அளித்த தன்னிலை விளக்கம் 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்ற கதையாகவே அமைந்தது. தனது தனிப்பட்ட பகைமைகளுக்குக் கணக்குத் தீர்த்துக் கொள்வதற்கும், பேரம் பேசுவதற்கும் போலீசைக் கூலிப்படை போல பயன்படுத்த தயங்காதவரான ஜெயா, இந்த முறை அரசு எந்திரத்தை மட்டுமின்றி, இசுலாமிய அமைப்புகளையும் அவ்வாறு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

முசுலீம் அடையாள அரசியல், மதவெறி, அரசியல் பிழைப்புவாதம் ஆகியவற்றின் கலவையான முசுலீம் அமைப்புகளின் கூட்டமைப்பு, தங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்வது என்ற பெயரில், உணர்வுபூர்வமாகவே ஜெயலலிதாவின் கையாட்படையாகச் செயல்பட்டிருக்கின்றது. விஸ்வரூபம் திரைப்படம் உருவாக்கும் தீவிரவாத பிம்பத்திலிருந்து இசுலாமிய மக்களைப் பாதுகாப்பதாக கூறிக் கொண்டு, பாபர் மசூதி இடிப்பை நியாயப்படுத்தியவரும், மோடியின் நண்பரும், பார்ப்பன பாசிஸ்டுமாகிய ஜெயலலிதாவுக்கு, முசுலீம்களின் காவலன் என்ற பிம்பத்தை உருவாக்கித் தந்துள்ளன.

''வேறு மாநிலம் செல்கிறேன், படச்சுருளைக் கொளுத்துவேனேயன்றி, பாசிசத்திடம் சரணடைய மாட்டேன், விதையாக வீழ்வேன்'' என்றெல்லாம் வீர வசனம் பேசிய கமலஹாசன், சில காட்சிகளின் ஒலிக் குறிப்புகளை நீக்குவதற்கும், படத்தின் துவக்கத்தில் இது கற்பனைக்கதை என்று குறிப்பிடுவதற்கும் ஒப்புக் கொண்டதன் அடிப்படையில், படத்தை வெளியிடுவதற்கு இசுலாமிய அமைப்புகள் ஒப்புக் கொண்டிருக்கின்றன.

திரைக்கதை என்று ஊடகங்களில் வெளியாகியுள்ள விவரங்களின் படி, விஸ்வரூபம் ஒரு அமெரிக்க அடிவருடித் திரைப்படம் என்பதும், தெற்காசியாவில் அமெரிக்காவின் புதிய அடியாளாக இந்தியா நியமிக்கப்பட்டுள்ளதை அறிவிக்கும் ஒரு ''கலைப் படைப்பு'' என்றும் தெரிகிறது. அதாவது, இந்திய ராம்போ.

விஸ்வரூபம் தடை செய்யப்படுவதற்கு முன்பாக கமலஹாசனுக்கும் முசுலீம் அமைப்புகளின் கூட்டமைப்பினருக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தை.



படத்தில் முசுலீம்களை தீவிரவாதிகளாகச் சித்தரித்துக் காட்டியிருப்பதன் மூலம் தங்களை இழிவுபடுத்தியிருப்பதாக முசுலீம் அமைப்புகள் கூறுகின்றன. ஒரு இந்திய முசுலீமை (கதாநாயகன் கமலஹாசன்) ''ரா'' உளவாளியாகவும், அமெரிக்க அடிவருடியாகவும் காட்டியிருப்பது அவர்களுக்கு இழிவாகத் தோன்றவில்லை போலும். ஒருவேளை காஷ்மீரில் இத்திரைப்படம் வெளியிடப்பட்டால், இந்திய உளவுத்துறையின் அயோக்கியத்தனங்களை அனுபவித்திருக்கும் அம்மக்கள், முசுலீமை ரா உளவாளியாகச் சித்தரிப்பதைத்தான் அவமதிப்பாக கருதக் கூடும்.

> விஸ்வரூபம் படத்தில் முசுலீம்களைத் தீவிரவாதிகளாகச் சித்தரித்துக் காட்டியிருப்பதன் மூலம் தங்களை இழிவுபடுத்தியிருப்பதாக முசுலீம் அமைப்புகள் கூறுகின்றன. ஆனால், இப்படத்தில் ஒரு இந்திய முசுலீமை ''ரா'' உளவாளியாகவும், அமெரிக்க அடிவருடியாகவும் காட்டியிருப்பது அவர்களுக்கு இழிவாகத் தோன்றவில்லை.

''தலிபான்கள் இசுலாத்தின் பெயரால்தான் கொலை செய்கிறார்கள். அவை இணையத்தில் வீடியோக்களாக காணக்கிடக்கின்றன. தாலிபான்களின் நடவடிக்கைக்கு எதிராக யாராவது பத்வா பிறப்பித்திருக்கிறார்களா? நிஜத்தை எதிர்க்காதவர்கள் நிழலை ஏன் எதிர்க்கிறீர்கள்?'' என்று ஆங்கிலத் தொலைக்காட்சி ஒன்றில் கேள்வி எழுப்பினார் இந்தித் திரையுலகக் கவிஞரும், ஷப்னா ஆஸ்மியின் கணவருமான ஜாவேத் அக்தர்.

இதற்கு இசுலாமிய மதவாத அமைப்புகளிடம் பதில் கிடையாது. சவூதி அரேபியாவால் உலகெங்கும் ஊக்குவிக்கப்படும் சன்னி வகாபி தீவிரவாதம்தான் இவர்கள் கொள்கையும். இங்குள்ள அரசியல் சமூக சூழல்கள் காரணமாக அடக்கி வாசிக்கிறார்கள், அவ்வளவுதான். இராக், பாலஸ்தீனம், இரான் உள்ளிட்ட நாடுகள் மீது அமெரிக்காவும் இசுரேலும் நடத்தும் தாக்குதல்களுக்கு உடந்தையாக இருக்கும் சவூதி அரேபியாவின் அமெரிக்க கைக்கூலித்தனம் இவர்களுக்குக் கோபத்தை வரவழைப்பதில்லை.

ஆனால், தற்போது அபாண்டமாக பொய்க்குற்றம் சாட்டப்பட்டு, சவூதியில் இலங்கைப் பெண் ரிஸ்வானாவின் தலையை சீவிக் கொன்றதை விமரிசித்தால் கோபப்படுகிறார்கள். அப்பெண்ணை வேசி என்று அபாண்டமாக ஏசுகிறார்கள். தாலிபான்கள், தொழுகை நடத்தும் ஷியா முசுலீம்களை மசூதிக்குள் புகுந்து கொல்வதையும் பாகிஸ்தான் அவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்துவதையும் நியாயப்படுத்துகிறார்கள்.

விஸ்வரூபம் திரைப்படம் கமலஹாசனை பென்டகனின் கைக்கூலியாக அடையாளம் காட்டுகிறது என்றால், இவர்கள் அந்த பென்டகனுடைய எடுபிடியான சவூதியின் சேவகர்கள். இதுதான் வேறுபாடு. அமெரிக்க அடிவருடிக் கொள்கைகளையும், மறுகாலனியாக்கத்தையும் ஒருபுறம் தீவிரமாக அமல்படுத்திக் கொண்டே, மறுபுறம் மேற்கத்திய கலாச்சாரத்தால் பாரதப் பண்பாடு கெடுவதாகக் கூறும் பாரதிய ஜனதா, ராம்சேனா போன்றவர்களே இவர்கள்.

முசுலீம்களைத் தீவிரவாதிகளாக காட்டும் இப்படம், தமிழக முசுலீம்கள் சமூக வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அதிகமாக்கும் என்பதே இவர்கள் எதிர்ப்புக்கு முன்வைக்கும் காரணம். ஆனால், ஜெயலலிதா, சோ, ராமகோபாலன், சு.சாமி கும்பல்தான், தமிழகத்தில் தீவிரவாத எதிர்ப்பு, பயங்கரவாத எதிர்ப்பு என்பதை மட்டுமே தமது அரசியலாக முன்வைத்து இசுலாமிய மக்களின் மீதான போலீசு கண்காணிப்பை அதிகப்படுத்துவதிலும், அவர்கள் அனைவரையும் தீவிரவாதிகளாகக் காட்டுவதிலும் முன்நின்றவர்கள் என்பதை நாம் அறிவோம். ஊடகங்கள் மூலம் சமூகத்தில் அத்தகைய கருத்தைப் பரப்புவதில் முக்கியப் பாத்திரம் ஆற்றியவர்கள் இவர்களும் அரசு எந்திரமும்தான்.

அவ்வாறிருக்க, முசுலீம் அமைப்புகள் ஜெயலலிதாவுக்கு ஒளிவட்டம் உருவாக்கி, இசுலாமிய மக்களைப் பலி கொடுக்கிறார்கள். ஜெயலலிதாவை ஈழத்தாய் ஆக்கியதற்கு ஒப்பானது இது. தானே உருவாக்கிய தாலிபானின் நடவடிக்கைகளைக் காட்டி, ஆப்கன் ஆக்கிரமிப்பை அமெரிக்கா நியாயப்படுத்திக் கொண்டது போல, தனது நோக்கங்கள் நிறைவேறிய பின் ஜெயா, பார்ப்பன பாசிசத்துக்கு இவர்களைக் காவு கொடுப்பார். நேர்மையற்ற முறையிலான அரசியல் கள்ளக்கூட்டுகள் இத்தகைய விளைவுகளையே ஏற்படுத்தும்.

இவ்வமைப்புகள் தேர்தல் அரசியலில் பங்கேற்பதால், ஜனநாயகம், மதச்சார்பின்மை பற்றி ஒப்புக்குப் பேசுகிறார்களேயன்றி, ஒரு இசுலாமியன் மதச்சார்பற்றவனாக இருக்ககூடாது என்பதே இவர்கள் நிலை. ஆகவே, மதச்சார்பற்ற சக்திகள், இந்து மதவெறியை எதிர்ப்பது என்ற பெயரில் இவர்களுடன் கூட்டுச் சேருவது, இறுதியில் இந்து வெறியை வலுப்படுத்தவே பயன்படும்.

திராவிட இயக்கம் இங்கே புராணப் புளுகுகளை விமரிசனம் செய்தது போல, இசுலாத்தை ஒரு முசுலீம் விமரிசிக்க முடியாது. அப்படி விமரிசித்த பிரபலங்களின் தலைக்கே விலை வைக்கப்பட்டிருக்கின்றது. இதே நிலையை இந்து மதத்திலும்கொண்டு வர வேண்டும் என்பதே ஆர்.எஸ்.எஸ். கும்பலின் விருப்பம்.

சமூக - அரசியல் வாழ்க்கையில் மதச்சார்பின்மையை அமலாக்குவதில் நாம் உறுதியாக நின்றால், இவர்கள் தயக்கமின்றி இந்து மதவெறியர்களுடன் சேர்ந்து கொள்வார்கள். மதச்சார்பற்ற சிவில் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று அம்பேத்கர் முயன்றபோது, இசுலாமிய மதவாதிகளும் இந்து மகாசபாவினரும் கைகோர்த்து நின்று அவரை முறியடித்தனர்.

முசுலீம்களை மட்டுமல்ல, எல்லா மக்களையும் சாதி - மத அடையாளங்களுக்கு அப்பாற்பட்ட ஜனநாயக உணர்வில் ஒன்று சேர்ப்பதுதான் நம் பணி. அதாவது சாதி, மத அமைப்புகளிலிருந்து மக்களை விடுவிப்பதுதான் நம் பணியே அன்றி, அந்த சாதி, மத அமைப்புகளின் வழியாக அவர்களை அணுகுவது அல்ல. விஸ்வரூபம் திரைப் படத்தின் அமெரிக்க அடிவருடித்தனத்தையோ, இசுலாமியத் துவேசத்தையோ எதிர்ப்பதற்கு இந்த மதவாத அமைப்புகளின் துணை, மதச்சார்பற்றவர்களுக்குத் தேவையில்லை. அவற்றின் துணையை நாடுபவர்கள் மதச்சார்பின்மையை நேர்மையாகப் பேச முடியாது.

● தொரட்டி

# ஆதிக்க சாதிவெறிக் கும்பலின் அடுக்கமாட்டாத அவதூறுகள்

**ராமதாசு கும்பல் துணிந்து பரப்பும் ஆதிக்க சாதிவெறியைக் கண்டித்துப் போராட ஓட்டுக்கட்சிகளுக்குத் துப்பில்லை.**

இன்றளவும் தமிழக கிராமங்கள் ஊரும் சேரியுமாகப் பிரிந்து கிடக்கும் நிலையில், இரட்டைக் குவளை முறையும் தனிச்சுடுகாடும் இருந்துவரும் நிலையில், கிராமப் பொதுக் கோவில்களில் தாழ்த்தப்பட்டோர் சென்று வழிபடுவதற்கு ஆதிக்க சாதியினர் தடைபோட்டு வரும் நிலையில், தாழ்த்தப்பட்டோர் ஊருக்குள் செருப்புப் போட்டுக் கொண்டு நடந்தால், ஊர் திரு விழாக்களுக்குத் தப்படிக்க மறுத்தால் தண்டிக்கப்படும் நிலையில் தமிழகத்தில் தீண்டாமை ஒழிந்துவிட்ட தாகவும், வன்கொடுமைச் சட்டம் தவறாகப் பயன்படுத் தப்படுவதாகவும் ராமதாசு கும்பல் நாக்கில் நரம்பில் லாமல் பேசி வருகிறது. இது மட்டுமின்றி, ராமதாசும், அவரது புதிய கூட்டாளிகளும் அனைத்து சமுதாயப் பாது காப்பு பேரவை என்ற பெயரில் ஊர்ஊராய்ப் போய்க் கூட்டம் போட்டுத் தாழ்த்தப்பட்டோருக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்து வருகிறார்கள்.

கடந்த டிசம்பர் 21-ஆம் தேதி கோவையில் நடந்த அனைத்துச் சமுதாயப் பாதுகாப்பு பேரவைக் கூட்டத் தில் பேசிய தமிழ்நாடு ரெட்டியார் சங்கத்தைச் சேர்ந்த காமராஜ், ‘‘நம்பியூரில் ஆலய நுழைவுப் போராட்டம் நடத்துவதாக அறிவித்து, போலீஸ் பாதுகாப்புடன் அணி வகுத்து வந்தனர். ஒரு லோடு செங்கல் எடுத்துத் தாக் கினோம். அதோடு வாலைச் சுருட்டிக் கொண்டனர். இனி யாரும் வாலாட்ட அனுமதிக்கக் கூடாது’’ என வெளிப்படையாகவே ஆலயத் தீண்டாமைக்கு வக் காலத்து வாங்கியிருக்கிறார்.

அக்கூட்டத்திற்குத் தலைமையேற்றிருந்த பா.ம.க. ராமதாசோ இன்னும் ஒருபடி மேலே போய், ‘‘பி.சி.ஆர். சட்டத்தில் புகார் அளிக்கவும், வழக்குத் தொடரவும் இனி ஒருவனுக்கும் தைரியம் வரக்கூடாது. குழந்தைகளிடம் சாதியைப் பற்றிச் சொல்லுங்கள். குறிப்பாக, பள்ளி, கல்லூரிக்குச் செல்லும் பெண் குழந்தைகளிடம் சாதியைப் பற்றித் தெளிவாகச் சொல்லுங்கள்’’ எனப் பேசி ஆதிக்க சாதித் திமிருக்கும் வன்கொடுமைக்கும் கொம்பு சீவிவிட்டிருக்கிறார்.

இப்பேரவை நடத்திவரும் கூட்டங்களில் போடப் படும் தீர்மானங்களோ ஒருபுறம் பொய்-அவதூறு களையும் மற்றொருபுறம் வெறுப்பையும் தாழ்த்தப்பட் டோருக்கு எதிராக உமிழ்கின்றன.

‘‘தமிழகத்தில் தீண்டாமை முற்றிலுமாக ஒழிந்துவிட்டது. ஆனாலும், தாழ்த்தப்பட்டோர் மற்ற சமுதாயத்தினர் மீது வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் பொய்ப் புகார்களைக் கொடுத்து வருகின்றனர். அதனால், இச்சட்டத்தின் கீழ் அளிக்கப்படும் புகார்களைப் பரி சீலித்து முடிவுசெய்ய மாவட்ட நீதிபதி தலைமையின் கீழ் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்க வேண்டும்; இச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோருக்கு உடனடி யாகப் பிணை கிடைக்க வும்; பொய்ப் புகார் அளிப் பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்றவாறும் இச்சட்டத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும்.’’

ராமதாசு தலைமையில் அணிதிரண்டுள்ள ஆதிக்க சாதி வெறியர்களின் அனைத்து சமுதாயப் பாதுகாப்பு பேரவை சென்னையில் நடத்திய கூட்டம்.




‘‘வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் அளிக்கப் படும் பொய்ப் புகார்களுக்கு அடுத்து, காதல் என்ற பெயரில் நடக்கும் நாடகத் திருமணங்களால் தான் தமிழகத்தில் சமூக நல்லி ணக்கமும் அமைதியும் கெட்டு வருகிறது. இந்நாட கத் திருமணங்கள் பணம் பறிக்கும் நோக்கத்தோடு

நடந்து வருவதோடு, இதனைச்சில தலித் தலைவர்கள்தூண்டிவிட்டு வருகிறார்கள். எனவே, இந்நாடகத் திருமணங்களைத் தடுக்கும் விதத்தில், பெண்ணின்திருமண வயதை 21 ஆகவும், ஆணின் திருமண வயதை 23 ஆகவும் உயர்த்த வேண்டும்; இந்த வயதிற்கு முன்பு திருமணம் நடத்த வேண்டுமென்றால், அத்திருமணங் களுக்கு மணமக்களின் பெற்றோர்களின் சம்மதத்தைக் கட்டாயமாக்க வேண்டும். மேலும், கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழகமெங்கும் நடந்துள்ள நாடகத் திரு மணங்கள் பற்றி ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையின் கீழ் விசாரணை நடத்த வேண்டும்.''

''10 ஆண்டுகளுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் தனித்தொகுதிகள் மாற்றப்பட வேண்டும்'' என ராமதாசு தலைமையில் திரண்டுள்ள ஆதிக்க சாதிவெறியர்கள் கோருகிறார்கள்.

●●●



அனைத்து சமுதாயப் பாதுகாப்பு பேரவை சென்னையில் நடத்திய கூட்டத்தைக் கண்டித்து விடுதலைச் சிறுத்தைகள், திராவிட விடுதலை இயக்கம் மற்றும் தமிழ்நாடு மக்கள் கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தை தடியடி நடத்திக் கலைக்கும் போலீசு.

**தீ**ண்டாமையை வெளிப்படையாக ஆதரித்துப் பேசி வரும் இந்தப் பிற்போக்குக் கும்பலை வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் கைது செய்திருக்க வேண்டும். அனைத்து சமுதாயப் பாதுகாப்பு பேரவையைத் தடை செய்திருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவும் நடந்துவிட வில்லை. இதிலிருந்தே வன்கொடுமைச் சட்டம் எந்த இலட்சணத்தில் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப் படுகிறது என்பதையும், அந்தச் சட்டம் எவ்வளவு மொன்னையானது என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

வன்கொடுமைச்சட்டம் மற்றும் குடியுரிமைப் பாது காப்புச் சட்டம் (பி.சி.ஆர்.) ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப் படும் சதவீதம் மிகவும் குறைவாக இருப்பதைக் காட்டியே இச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக வாதிடுகிறது, ராமதாசு கும்பல். மேலவளவு முருகேசன் கொலை வழக்கிலும், திண்ணியத்தில் தாழ்த்தப்பட் டோரின் வாயில் மலத்தைத் திணித்த வழக்கிலும்கூட ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த குற்றவாளிகள் வன் கொடுமைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படாமல், சாதா ரண கிரிமினல் சட்டங்களின் கீழ்தான் தண்டிக்கப்பட் டனர். இவ்வழக்குகள் வன்கொடுமைச்சட்டத்தின் கீழ் வராது என்றுதான் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்தன. இந்தத் தீர்ப்புகளைக் காட்டி இவ்வழக்குகளில் வன்கொடுமைச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதாக வாதிடுவது எத்துணை மோசடியானதோ, உண்மைக்குப் புறம்பானதோ, அதைப் போன்றதுதான் ராமதாசின் வாத மாகும்.

சாதாரண மக்கள்தரும் எந்தவொரு புகாரையும் இழுத் தடிக்காமல் போலீசுக்காரர்கள் பதிவு செய்து விடுவ தில்லை என்பது ஊரறிந்த உண்மை. அதிலும் கிராமப் புறங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் போலீசு நிலையங்களில் நடத்தப்படுவது பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. அவர்கள் வன்கொடுமைச் சட்டத் தின் கீழ் புகார் அளிக்கச் சென்றாலோ, அப்புகாரை போலீசு தனது சாதிப் பற்று மற்றும் ஆதிக்க சக்திகளோடு அதற்குள்ள உறவு ஆகியவற்றின் காரணமாக நிராகரித்து விடுவதில்தான் அக்கறை காட்டுகிறது. போலீசின் இந்த அலட்சியத்தையும் தாண்டி வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் புகாரைப் பதிவு செய்ய வேண்டுமென்றால், அதற்கு வெளியிலிருந்து ஓர் அமைப்பின் உதவியைத் தாழ்த்தப் பட்டோர் நாடுவது அவசியமாகிறது. தாழ்த்தப்பட் டோருக்கு ஆதரவாக வரும் இயக்கங்களை, குறிப்பாகத் தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளைக் கட்டப் பஞ்சாயத்து செய்வதாக ஆதிக்க சாதிகள் பழி போடுகின்றன.

இச்சட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்டோர் கொடுக்கும் புகார்கள் போலீசு நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்பட் டாலும், அதனைச் சாதாரண கீழ் நிலையில் உள்ள போலீசு அதிகாரிகள் விசாரிக்க முடியாது. போலீசு துணைக் கண்காணிப்பாளர் நிலையில் உள்ள அதிகாரிகள் மட்டுமே விசாரித்து நீதிமன்றத்திற்கு அறிக்கை தாக்கல் செய்ய முடியும். அந்த அதிகாரி இது பொய்ப்புகார் என அறிக்கை அளித்தால், நீதிமன்றம் உடனடியாகவே அப் புகாரைத் தள்ளுபடி செய்துவிடும். இது, ஆதிக்க சாதி யினர் எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என் பதற்காகச் சட்டபூர்வமாகவே செய்யப்பட்டுள்ள ஏற் பாடாகும்.

தேசியக் குற்றவியல் ஆவணத் துறை வெளி யிட்டுள்ள ஒரு புள்ளிவிவரத்தின்படி, 2007 முதல் 2010-ஆம் ஆண்டு முடிய இந்தியாவெங்கும் தாழ்த்தப் பட்டோருக்கு எதிராக நடந்துள்ள வன்முறைக் குற்றங் களில் 67 சதவீதமும், பழங்குடியின மக்களுக்கு எதிராக நடந்த வன்கொடுமைத் தாக்குதல்களில் 81 சதவீதமும்

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படவில்லை என்பது அம்பல மாகியிருக்கிறது. உண்மைப் புகாரைப் பதிவு செய்வதே குதிரைக் கொம்பாக இருக்கும் பொழுது, பொய்ப் புகாரை போலீசு பதிவு செய்கிறது என்றால், போலீசு யாருடைய ஆதாயத்துக்காகவோ தாழ்த்தப்பட்டோரைப் பகடைக்காயாகப் பயன்படுத்தியிருக்கிறது என்றுதான் புரிந்துகொள்ள முடியும்.

ஏழு கடல் - ஏழு மலைகளைத் தாண்டிப் பதிவு செய்யப்படும் வழக்குகளிலும்கூட நீதி கிடைத்துவிடுவதில்லை. வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் 2010-ஆம் ஆண்டு முடிய, கடந்த 21 ஆண்டுகளில் நாடெங்கும் பதிவு செய்யப்பட்ட மொத்த வழக்குகளில் (1,26,593), நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 1,00,098. தீர்ப்பு அளிக்கப்பட்ட 25,573 வழக்குகளில் 8628 வழக்குகளில் மட்டும்தான் குற்றவாளி கள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால், 2010-ஆம் ஆண்டு முடிய வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கு களின் மொத்த எண்ணிக்கை 3,635. இதில் 30 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன; 2,839 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. தீர்ப்பு அளிக்கப்பட்ட 766 வழக்குகளில் 189 வழக்குகளில் மட்டுமே குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்; 577 வழக்குகளில் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ஆதாரம்: மைய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரத்துக்கான அமைச்சகம் வன்கொடுமைச் சட்டம் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கை.)

## சரணாகதிதான் திருமாவின் எதிர்வினையா?

வீராணம் ஏரி நீரை விவசாயத்துக்குத் திறந்துவிடக் கோரி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கடந்த ஜனவரி மாதம் சிதம்பரம் நகரில் நடத்திய ஆர்ப் பாட்டத்தில், ''இதுவரை நடந்ததை நாங்கள் மன்னித்துவிட்டோம்; மறந்து விட்டோம். வீராணம் ஏரியிலிருந்து தண்ணீரைத் திறக்கும் பிரச்சினைக்காக பா.ம.க. போராட முன்வந்தால், அவர்களுடன் இணைந்து விடுதைச் சிறுத்தைகள் கட்சியும் போராடும்'' எனப் பேசியிருக்கிறார், தொல்.திருமாவளவன்.

எதை மறப்பது? யார், யாரை மன்னிப்பது? விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் கட்டப் பஞ்சாயத்து செய்வதாக ராமதாசு குற்றஞ்சுமத்தி வரு வதை மன்னிப்பது, மறப்பது என்றால், அதற்கு திருமாவிற்கு முழு உரிமையும் சுதந்திரமும் உண்டு.

ஆனால், தருமபுரி தாக்குதலை மன்னிப்பது என்றால், அந்த உரிமையை திருமாவிற்குக் கொடுத்தது யார்? தருமபுரியில் நடந்த தாக்குதல் அவ்வளவு சீக்கிரத்தில் மறக்கக்கூடியதா? மன்னிக்கக் கூடியதா?

தருமபுரியில் தமது கட்சியினரும் சாதியினரும் நடத்திய தாக்குதலுக்கு வருத்தம்கூடத் தெரிவிக்காமல், ஊர்ஊராகக் கூட்டம் போட்டுத் தாழ்த்தப் பட்டோருக்கு எதிராக அவதூறுகளைப் பரப்பிச் சாதிவெறியைத் தூண்டி வரும் ராமதாசை மன்னிப்பது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கும் அநீதி யாகாதா, துரோகமாகாதா? ராமதாசு கூட்டம் போடும் இடங்களில் எல்லாம் ஆர்ப்பாட்டம் நடத்தும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் அணிகள் இதனை ஏற்றுக் கொள்கிறார்களா?

தருமபுரி தாக்குதலையொட்டி ''பெரியாரிய, மார்க்சிய, தமிழ்த் தேசிய சக்திகளும் மனித உரிமை ஆர்வலர்களும் இன்ன பிற ஜனநாயக சக்திகளும் ஆற்றவிருக்கும் எதிர்வினையென்ன?'' என்று மற்றவர்களையெல்லாம் கூண டிலேற்றிக் கேள்வி எழுப்பினார் திருமா. அவருடைய எதிர்வினை ''மறப் போம், மன்னிப்போம்'' என்று தெளிவு படுத்திவிட்டார்.

திருமாவின் இந்தக் கூற்றுக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் எதிர்வினை என்ன?

''இந்தியாவெங்கும் ஒவ்வொரு மணி நேரத்திலும் இரண்டு தாழ்த்தப்பட்டோர் தாக்கப்படுகின்றனர்; ஒவ் வொரு நாளும் மூன்று தாழ்த்தப்பட்ட பெண்கள் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாகின்றனர்; இரண்டு தாழ்த்தப்பட் டோர் கொல்லப்படுகின்றனர்; இரண்டு தாழ்த்தப்பட்டோரின் வீடுகள் எரிக்கப்படு கின்றன'' என்ற புள்ளிவிவரத்தோடு, கடந்த இருபது ஆண்டுகளில் இத்தகைய தீண்டாமைக் குற்றங்களுக்காகத் தண்டிக் கப்பட்டுள்ள ஆதிக்க சாதிவெறியர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தாலே, இச்சட்டம் தாழ்த்தப்பட்டோருக்கு எவ்வி தப் பாதுகாப்பையும் நீதியையும் வழங்கி விடவில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இன்றளவும் கிராமப்புறங்களில் தாழ்த் தப்பட்டோருக்குத் தனிக்குடியிருப்பு, தனிக்குழாய், தனிக்கிணறு, தனிச்சுடுகாடு போன்றவை இருப்பதை இச்சட்டம் குற்ற மாகப் பார்க்கவில்லை. தீண்டாமையின்

வன்னிய சாதிப் பெண்ணைக் காதலித்த ஒரே காரணத்திற்காகக் கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் (இடது); வேறு சாதியைச் சேர்ந்த தனது வகுப்புத் தோழனைக் காதலித்த விவகாரம் வீட்டிற்குத் தெரியவந்ததையடுத்து, 'மர்மமான' முறையில் தீயில் கருகி இறந்து போன கவுண்டர் சாதியைச் சேர்ந்த நந்தினி.




இந்த வடிவங்களை அரசும் சட்டமும்கூட ஏதோ சம்பிரதாயமான நடைமுறையாக, காலப் போக்கில் தான் இவற்றை மாற்ற முடியும் என்பது போலவே கருதுகின்றன. இப்படிப்பட்ட நிலையில் இன்று தீண்டாமையோ புதுப்புது வடிவங்களை எடுத்து வருகிறது. எடுத்துக்காட்டாகச் சொன்னால், தாழ்த்தப்பட்டோர் கோவில் நுழைவுப் போராட்டங்களை நடத்தினால், ஆதிக்க சாதியினரோ தங்களுக்கென தனிக் கோவிலைக் கட்டிக்கொண்டு, அதில் தாழ்த்தப்பட்டோர் நுழைய அனுமதியில்லை என வக்கிரமாக வாதிடுகின்றனர். முன்பு தாழ்த்தப்பட்டோர் செருப்பு அணியத் தடை விதித்த ஆதிக்க சாதியினர், இந்த நவீன காலத்திற்கு ஏற்ப அவர்கள் இரு சக்கர வாகனங்களை ஓட்டத் தடை விதிக்கின்றனர். இந்திய அரசின் வங்கிகள் பல்வேறு காரணங்களைச் சொல்லி தாழ்த்தப்பட்டோருக்குக் கடன் தர மறுத்துத் தீண்டாமையைக் கடைப்பிடிப்பதாக ப.சிதம்பரம் புலம்பியிருக்கிறார்.

> **தமிழகத்தில் 2010-ஆம் ஆண்டு முடிய வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ்**
>
> - **பதிவான மொத்த வழக்குகள் 3,635**
> - **நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் 2,839**
> - **தீர்ப்பு அளிக்கப்பட்ட 766 வழக்குகளுள் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட வழக்குகள் 189 தானெனில், இதுவா சமூக நீதி?**

இது மட்டுமின்றி, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் மீது போலீசும் அரசு துருப்புகளும் நடத்தும் தாக்குதல்கள் - பரமக்குடி துப்பாக்கிச் சூடு, கொடியன்குளம் தாக்குதல், தாமிரபரணி படுகொலை, சத்தீஸ்கர், ஜார்கண்ட் மாநிலங்களில் பழங்குடியின மக்கள் எல்லைப் பாதுகாப்புப் படையால் படுகொலை செய்யப்படுவது போன்றவை இச்சட்டத்தின் கீழ் மட்டுமல்ல, கிரிமினல் சட்டத்தின் கீழும் வழக்காகப் பதிவு செய்யப்படுவதில்லை. இப்படிப்பட்ட நிலையில் ஆதிக்க சாதி வெறியர்களுக்குச் சாதகமாக இச்சட்டத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டுமெனக் கோருவது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இச்சட்டம் வழங்கியிருக்கும் பெயரளவிலான பாதுகாப்பையும் பறித்தெடுப்பது தவிர வேறல்ல. இப்படியொரு கோரிக்கையை முன்வைத்துவிட்டு, ''நான் இச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டுமெனக் கோரவில்லை'' என எகத்தாளமாகப் பகடி செய்கிறார், ராமதாசு.

•••

**சா**தி மாறித் திருமணங்கள் செய்வதை அனுமதிக்கவே கூடாது என சாதித் தூய்மைவாதம் பேசி வரும் கொங்கு வேளாளர் பேரவையைச் சேர்ந்த பொங்கலூர் மணிகண்டன், ''கடந்த ஓர் ஆண்டில் மட்டும் காதல் திருமணங்களால் 963 பெண்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். 716 பேர் வாழாவெட்டியாக உள்ளனர். ஏழு ஆண்டுகளில் 300 கோடி ரூபாய் பணத்தைத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நமது சமூகத்தினரிடம் இருந்து கறந்துள்ளனர்'' என்றொரு புள்ளிவிவரக் குண்டைத் தூக்கிப் போட்டு வருகிறார் (ஜூ.வி.,30.12.12, பக்.28) அனைத்து சமுதாயப் பாதுகாப்பு பேரவை சென்னையில் நடத்திய தனது கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தில், ''நாமக்கல் மாவட்டத்தில் நடந்த 955 காதல் திருமணங்களில் 712 தோல்வியில் முடிந்துவிட்டதாக''க் கூறுகிறது. ராமதாசு-காடுவெட்டி குரு கும்பல், நாடகக் காதல் திருமணங்களால் 2,000 வன்னியப் பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கும் பட்டியல் தங்களிடம் உள்ளதாகக் கூறித் திரிகின்றனர்.

இதற்கு எல்லாம் ஆதாரம் இருக்கிறதா, போலீசில் வழக்குப் பதிவாகியிருக்கிறதா எனக் கேட்டால், இதெல்லாம் பெண் வீட்டாரின் மானப் பிரச்சினை, எங்களுக்கு மட்டும்தான் தெரியும் எனப் பதில் அளித்து, செண்டிமென்டுக்குள் ஒளிந்து கொள்கிறார்கள். கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழகமெங்கும் நடந்துள்ள நாடகக் காதல் திருமணங்கள் பற்றி விசாரணை நடத்த வேண்டுமெனக் கோரும் ராமதாசு, அந்த விசாரணைக்கு இணையாக, ஆதிக்க சாதிவெறிக் கும்பல் தங்கள் சாதிப் பெருமையைக் கட்டிக் காப்பதற்காக நடத்தியிருக்கும் கௌரவக் கொலைகள் பற்றிய விசாரணை நடத்தக் கோருவாரா?

அப்படியொரு விசாரணை நியாயமாக நடந்தால், மேல்சாதிப் பெண்களைக் காதலிப்பதாக நாடகமாடி ஏமாற்றியதாகக் கூறப்படும் தாழ்த்தப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கையைவிட, ஆதிக்க சாதியினரின் அச்சுறுத்தலையும் மீறி, அச்சாதிப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டதால் கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்; தாழ்த்தப்பட்ட இளைஞர்களால் ஏமாற்றப்பட்டதாகக் கூறப்படும் மேல்சாதிப் பெண்களின் எண்ணிக்கையைவிட, தனது குடும்பத்தை எதிர்த்து தாழ்த்தப்பட்ட இளைஞரைத் திருமணம் செய்து கொண்டதால், தனது பெற்றோர்களால், உறவினர்களால், சாதிவெறியர்களால் கொல்லப்பட்ட மேல்சாதிப் பெண்களின் எண்ணிக்கை அதிகமிருக்கும் என்ற உண்மைகள் அம்பலத்துக்கு வரும்.

''வன்னியன் வீட்டுப் பெண்களை வன்னியன்தான் காப்பாற்ற வேண்டும். கொங்கு வேளாளர் வீட்டுப் பெண்களை கொங்கு வேளாளர்கள்தான் காப்பாற்ற வேண்டும். முதலியார் வீட்டுப் பெண்களை முதலியார்கள்தான் காப்பாற்ற வேண்டும்'' என வன்னிய சாதிப்

புதுக்கோட்டை மாவட்டம் வண்ணாரப்பட்டியில் தப்படிக்க மறுத்ததற்காகத் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு தாக்கப்பட்டது குறித்து நடந்த விசாரணை (இடது); இருகூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த ஆதப்பகவுண்டன்புதூரில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பொது சுடுகாட்டில் புதைக்கும் உரிமை மறுக்கப்படுவதால், தனிச்சுடுகாடு கேட்டு, அம்மக்கள் தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் கீழ் அணிதிரண்டு நடத்திய போராட்டம்.

பெருமை பேசும் இணையதளமொன்று சூளுரைக்கிறது. ஆனால், வன்னிய சாதிப் பெண்களுக்கு வன்னியனாலும், கவுண்டர் சாதிப் பெண்களுக்கு கவுண்டனாலும்தான் ஆபத்து என்பதை இக்கௌரவக் கொலைகள் எடுத்துக் காட்டுகின்றன.

•••

தருமபுரியில் வன்னிய சாதிவெறிக் கும்பல் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு மீது நடத்திய தாக்குதலைத் தமிழகத்தைச் சேர்ந்த பெரும்பாலான ஓட்டுக்கட்சிகள் கண்டித்துள்ளன என்றாலும், தற்பொழுது ராமதாசு அனைத்து சமுதாயப் பாதுகாப்பு பேரவை என்ற போர்வையில் ஆதிக்க சாதிவெறிக்குத் தூபம் போட்டு வருவதையும், தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக அவதூறு பரப்பி வருவதையும் எத்தனை கட்சிகள் கண்டிக்கவும், அதற்கு எதிராகப் போராடவும் முன்வந்துள்ளன என்பதுதான் இப்பிரச்சினையில் கவனத்தைக் குவிக்க வேண்டிய விடயம்.

இந்த ஆதிக்க சாதிக் கும்பல் கட்டியிருக்கும் பேரவையைத் தடை செய்யாமல், தமிழகத்தின் மூன்றே மாவட்டங்களில் மட்டும் (மதுரை, இராமநாதபுரம், கடலூர்) ராமதாசு நுழைவதற்குத் தடை விதித்து நாடகமாடுகிறார், ஜெயா. இத்தடையை கருணாநிதி எதிர்த்தவுடன், கடலூர் மாவட்டத்தில் ராமதாசு நுழைவதற்கு விதிக்கப்பட்டத் தடை அ.தி.மு.க. அரசால் உடனடியாக நீக்கப்படுகிறது. இப்படியாக அவ்விரண்டு கட்சிகளுக்கு இடையே ஆதிக்க சாதியினரை அரவணைத்துக் கொள்வதில் ஒரு போட்டாபோட்டி நடந்து வருகிறது.

மற்ற திராவிடக் கட்சிகளும், தமிழின அமைப்புகளும் காரியத்தனமாக மௌனம் சாதிக்கின்றன. சி.பி.எம்., ராமதாசு மீது விதிக்கப்பட்ட தடையை ஆதரிப்பதாக அறிவித்ததோடு முடங்கிக் கொண்டது. காதலைக் கொண்டாடும் மாநாடு நடத்தியதைத் தாண்டி, ஆதிக்க சாதிவெறியர்களுக்கு எதிரான போராட்டங்களை நடத்தும் தெம்பு சி.பி.எம்-க்கு இருப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில் விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட பிற தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளும் மற்றும் பெரியார் திராவிடர் கழகம், ம.க.இ.க., ஆகிய அமைப்புகளும்தான் ராமதாசு தலைமையில் அணிதிரண்டுள்ள ஆதிக்க சாதிவெறியர்களின் கூட்டம் நடைபெறும் இடங்களில், அதனை எதிர்த்துக் களத்தில் இறங்கிப் போராடி வருகின்றன.

தேசியக் கட்சியானாலும் சரி, திராவிடக் கட்சியானாலும் சரி, அக்கட்சிகள் அனைத்தும் பல காலமாகவே ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த பிரமுகர்களைத்தான் கட்சிப் பதவிகளில் அமர்த்தி அழகு பார்த்து வருகின்றன. இப்பிரமுகர்களில் பலர் நிலவுடமை ஆதிக்க சக்திகள் என்பது ஒருபுறமிருக்க, தற்பொழுது தனியார்மயத்தையும் தங்கள் பதவிகளையும் பயன்படுத்திக் கொண்டு, ரியல் எஸ்டேட், மணல் காண்டிராக்டு, கல்வி வியாபாரம் எனப் புதுவிதமான தரகு முதலாளிகளாகவும் வளர்ந்துவிட்டனர். ஓட்டுக்கட்சிகளில் அண்ணன்களாக, தளபதிகளாக வலம் வரும் இப்பிரமுகர்களுக்கு ஓட்டுப் பொறுக்குவதற்கும், தங்களது சுய இலாபத்திற்கும் சாதியும், சாதி அரசியலும் அவசியமாக உள்ளது. அதனாலேயே இந்தத் தளபதிகளும் சாதி சங்கங்களும் இயற்கையான கூட்டாளியாகப் பொது அரங்கில் நடமாடி வருகின்றனர். இந்தத் தளபதிகள்தான் ஓட்டுக்கட்சிகளின் பணப்பெட்டிகளாக, அடியாட்களைத் திரட்டிக் கொடுப்பவர்களாக, சுருக்கமாகச் சொன்னால் கட்சியின் தலையெழுத்தைத் தீர்மானிப்பவர்களாக இருப்பதால், எந்தவொரு ஓட்டுக் கட்சியும் தமிழகத்தில் தற்பொழுது தூண்டிவிடப்படும் ஆதிக்க சாதிவெறிக்கு எதிராக நிற்காது; நிற்கவும் முடியாது.

எனினும், ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் ராமதாசு கும்பலை ஆதரித்து நிற்கவில்லை. வன்னிய சாதி மக்கள் கணிசமாக வாழும் கடலூர் மாவட்டத்தில் ராமதாசு நுழைவதற்கு விதித்த தடையை எதிர்த்து, அம்மாவட்டம் கொதித்துப் போய்விடவில்லை என்பதே இதற்கு சாட்சி. இது, பல்வேறு சாதிகளைச் சேர்ந்த உழைக்கும் மக்களிடையே சாதி கடந்த ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கும், அவர்கள் மத்தியில் சாதிகளைப் புறக்கணிக்கக்கூடிய ஜனநாயகப் போராட்டங்களைக் கட்டமைப்பதற்குமான வாய்ப்புகள் அருகிப் போய்விடவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

• குப்பன்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

இதேநாளில் சட்டக் கல்லூரி மாணவர்கள் சாதிவெறியர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியதோடு, ராமதாசின் கொடும்பாவியை எரிக்க முயற்சித்தபோது, போலீசு அதனைப் பறித்துக் கொண்டு ஓடியது. திருச்சி நகரம், அந்நாளில் சாதி வெறியர்களுக்கு எதிராகப் போர்க்கோலம் பூண்டதைப் போல, பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தோரும் ஆர்ப்பாட்டங்களையும் மறியல் போராட்டங்களை நடத்தி, இது பெரியார் பிறந்த மண் என்பதை நிரூபித்தனர்.


23.1.2013 அன்று தேன்கனிக்கோட்டை வட்டம், நாட்றாம்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில், தருமபுரி- கிருஷ்ணகிரி மாவட்டங்களின் புரட்சிகர அமைப்புகள் இணைந்து ''சாதி வெறிக் கொட்டத்தை மோதி வீழ்த்துவோம்! உழைக்கும் வர்க்கமாய் ஒன்றிணைவோம்! மக்கள் ஜனநாயகக் குடியரசைக் கட்டியமைப்போம்!'' என்ற முழக்கத்துடன் பொதுக்கூட்டம்-கலைநிகழ்ச்சியை நடத்தின. வி.வி.மு. தோழர் சரவணன் தலைமையில் நடந்த இப்பொதுக் கூட்டத்தில், வி.வி.மு. தோழர்கள் மாரியப்பன், சுரேஷ், ஆகியோரும் பு.ஜ.தொ.மு. தோழர் வெங்கடேசன், ம.உ.பா. மையத்தின் தருமபுரி மாவட்டச் செயலர் ஜானகிராமன் ஆகியோரும் உரையாற்றிய பின், பென்னாகரம் வட்ட வி.வி.மு. செயலர் தோழர் கோபி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் குடிபோதையில் வீண்கூச்சல் போட்டுக் கொண்டிருந்த வன்னிய சாதியைச் சேர்ந்த மூன்று பேரை, அதே சாதியைச் சேர்ந்த உழைக்கும் மக்களே விரட்டியடித்தனர். இப்பொதுக் கூட்டத்தின் இறுதியில் நடந்த ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி, சாதிவெறியர்களுக்கு எதிரான போராட்ட உணர்வூட்டியது.

''ஆதிக்க சாதிவெறியை வேரறுப்போம்! பாட்டாளி வர்க்கமாய் ஒன்றிணைவோம்!'' என்ற முழக்கத்துடன் திருவள்ளூர் மாவட்ட பு.ஜ.தொ.மு. சார்பில் கும்மிடிப் பூண்டி பஜார் வீதியில் 23.1.2013 அன்று தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சுதேஷ்குமார் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், சென்னை ம.உ.பா.மையத்தின் வழக்குரைஞர் சுரேஷ் சிறப்புரையாற்றினார். தீண்டாமையை வெளிப்படையாகக் கக்கும் ஆதிக்க சாதிவெறிச் சங்கங்களைத் தடை செய்ய முன்வராத ஜெயலலிதாவையும், ராமதாசுக்கு கடலூர் மாவட்டத்தில் நுழைய தடைவிதிக்கப்பட்டதை மட்டும் கண்டித்துவிட்டு, ராமதாசின் சாதி வெறியை எதிர்க்க முன்வராத கருணாநிதியையும், மௌனம் சாதிக்கும் இதர ஓட்டுக்கட்சிகளையும் அம்பலப்படுத்திய அவர், உழைக்கும் மக்கள் ஓரணியில் திரண்டு போராட வேண்டிய அவசியத்தை உணர்த்தினார்.

திருவள்ளூர் மாவட்டத்தின் இணைப்புச் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் குடும்பத்துடன் பெருந்திரளாகப் பங்கேற்ற இக் கூட்டத்தைச் சீர்குலைக்க எத்தணித்த வன்னிய சாதி வெறியர்கள், வன்னியர்கள் நிறைந்துள்ள இப்பகுதியிலேயே செஞ்சட்டைப் படையாக தொழிலாளர்கள் வர்க்கமாகத் திரண்டதையும், உழைக்கும் மக்கள் இக்கூட்டத்துக்குத் தாராளமாக நன்கொடை அளித்ததையும் கண்டு அரண்டு போயினர். சாதிவெறி நச்சுப் பாம்புகளை நசுக்க போராட அறைகூவிய இக்கூட்டம் இப்பகுதியில் பெருத்த வரவேற்றைப் பெற்றது.

-பு.ஜ. செய்தியாளர்கள்


## இப்போது விற்பனையில்...



**சாதி - தீண்டாமை ஒழிப்பு: என்ன செய்யப் போகிறீர்கள்?**

வெளியீடு:
ம.க. இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; தமிழ்நாடு.


விலை: ரூ. 10.00



**சாதி: ஆதிக்க அரசியலும் அடையாள அரசியலும்**
(புதிய ஜனநாயகம் இதழில் வெளிவந்த கட்டுரைகள்)

வெளியீடு:
பு.ஜ.தொ.மு., தமிழ்நாடு.


விலை: ரூ. 60.00



**முதலாளித்துவ ஜனநாயகமும் பாட்டாளி வர்க்க ஜனநாயகமும் -லெனின்**

வெளியீடு:
பு.ஜ.தொ.மு., தமிழ்நாடு.


நன்கொடை: ரூ. 25.00



**முதலாளித்துவம் ஒரு பேய்க் கதை -அருந்ததி ராய்**
(அவுட்லுக் இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம்)

வெளியீடு: ம.க.இ.க., திருச்சி.


நன்கொடை: ரூ. 30.00



**தொழிற்சங்கங்கள் பற்றி சில கட்டுரைகள் -லெனின்**

வெளியீடு:
பு.ஜ.தொ.மு., தமிழ்நாடு.

நன்கொடை: ரூ. 30.00



**மார்க்சியமும் சீர்திருத்தவாதமும் -லெனின்**

வெளியீடு:
பு.ஜ.தொ.மு., தமிழ்நாடு.

நன்கொடை : ரூ. 15.00

**நூல் கிடைக்குமிடங்கள்**

**புதிய கலாச்சாரம்,**
16, முல்லை நகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
அசோக் நகர், சென்னை - 600 083.
தொலைபேசி: 044 - 2371 8706

**கீழைக்காற்று,**
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 600 002.
தொலைபேசி: 044 - 2841 2367

**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி,**
110/63, என்.எஸ்.கே.சாலை,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
தொலைபேசி: 94448 34519

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14




### அதிகரித்துவரும் பாலியல் குற்றங்கள்:

# மரத்துப் போனதா சமூகத்தின் மனசாட்சி?

- தேசிய குற்றப்பதிவுத்துறையின் புள்ளிவிவரப்படி, கடந்த 2011-ஆம் ஆண்டில் நாடு தழுவிய அளவில் பெண்களுக்கு எதிராக **2,28,650** குற்றங்கள் பதிவாகியுள்ளன. இதில் பாலியல் வல்லுறவுக் கொடூரங்கள் மட்டும் **24,206.**

- 1971-ஆம் ஆண்டை ஒப்பிடும்போது, 2011 வரையிலான நாற்பதாண்டுகளில் பதிவு செய்யப்பட்ட பாலியல் வல்லுறவுக் குற்றங்கள் **873** சதவீதம் அதிகரித்துள்ளது. பாலியல் வல்லுறவுக்கு ஆளான மொத்தப் பெண்களில் **10.6** சதவீதத்தினர் 14 வயதுக்குட்பட்ட சிறுமிகளாவர்.

- இந்தியாவின் **53** பெரு நகரங்களை ஒப்பிடும்போது தலைநகரான டெல்லியில்தான் பெண்களுக்கு எதிராக அதிக அளவில் குற்றங்கள் நடக்கின்றன.

- ஆப்கான், பாகிஸ்தான், காங்கோ முதலான போர் நடக்கும் நாடுகளைவிட, இந்தியாவில்தான் பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் என்றும், பெண்களுக்கு எதிரான குற்றங்களும் பெண்களுக்குப் பாதுகாப்பற்ற சூழலும் நிலவும் மிக மோசமான நாடுகளில் உலகில் **4**-வது இடத்தில் இந்தியா இருப்பதாகவும் தாம்சன்-ராய்டர் செய்தி நிறுவனத்தின் ஆய்வு குறிப்பிடுகிறது.

- தமிழகத்தில், கடந்த 2012-ஆம் ஆண்டில் **584** பாலியல் வல்லுறவுக் கொடூரங்கள், **721** பாலியல் சீண்டல்கள், **1379** கடத்தல்கள், **656** பாலியல் தொல்லைப் படுத்தல் வழக்குகளைப் போலீசு பதிவு செய்துள்ளது.

- தமிழகத்தில், பெண்களுக்கு எதிரான குற்றங்களாகப் பதிவு செய்யப்பட்ட **5,861** வழக்குகள் இன்னமும் குற்றப்பத்திரிகைகூட தாக்கல் செய்யப்படாமல் உள்ளன. இவற்றில் **834** பாலியல் வல்லுறவுக் குற்றங்களாகும்.

- தமிழகத்தின் பல்வேறு நீதிமன்றங்களில், **1,751** பாலியல் வல்லுறவுக் குற்ற வழக்குகள் உள்ளிட்டு பெண்களுக்கு எதிரான **14,545** குற்ற வழக்குகள் இன்னமும் விசாரிக்கப்படாமல் பல ஆண்டுகளாக முடங்கிக் கிடக்கின்றன.

- இந்தியாவில் ஒவ்வொரு **22** நிமிடத்திலும் ஒரு பெண் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்படுகிறார். ஒவ்வொரு **7**-வது நிமிடத்திலும் பெண்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. ஒவ்வொரு **43** நிமிடத்திற்கும் ஒரு பெண் கடத்தப்படுகிறார். ஒவ்வொரு **42** நிமிடத்துக்கும் ஒரு வரதட்சிணை சாவு நடக்கிறது. பெண்கள் மீதான வன்முறைக் குற்றங்களாகப் பதிவாகியுள்ள ஏறத்தாழ **93,000** வழக்குகள் இன்னமும் விசாரணைக்கே வரவில்லை. ■